
இசைவிழா
சிறப்பிதழ்
KALKI
16-12-84
ரூ-1.50
கல்கி

எழுதுகிறவனுக்குக் கவனம் முக்கியம்



—சுஜாதா

எழுதுகிறவனுக்குக் கவனம் முக்கியம். எல்லோரும் கவனிக்கிறோம். ஆனால் எல்லாவற்றையும் கவனிப்பதில்லை. யோசித்துப் பார்த்தால் கவனிக்க விரும்புவதைத்தான் கவனிக்கிறோம் — நம் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப. எப்படி? சொல்கிறேன்.

சின்ன வயசில் எங்கள் மாமா வீட்டுக் கல்யாணத்தில் அரியக்குடி ராமானுஜ அய்யங்கார் சங்கீதக் கச்சேரி. அய்யங்கார் ரொம்ப ரசித்து 'தோடி' பாடிக் கொண்டிருந்தார். மாமா என்னை ரகசியமாகக் கூப்பிட்டு, ''டேய் அவர் என்னத்தையோ அப்பப்ப வாயில போட்டுக்கறாரே. அது என்னன்னு போய்ப் பார்த்துட்டு வா'' என்றார். மாமா கவனித்தது தோடியை அல்ல.

இரண்டாவது உதாரணம்: இலக்கியச் சிந்தனை'யில் ''கதையில் கதை'' என்கிற தலைப்பில் தொல்காப்பியத்திலிருந்து துவங்கி மேற்கோள்கள் காட்டி, தீவிரமான ஆராய்ச்சி கட்டுரை போல எனக்கே திருப்தி கரும்படியாகப் பேசினேன். பேச்சு முடிந்ததும் ஒரு எழுத்தாள அன்பர் என்னை அணுகி, ''உங்க பேச்சைக் கேட்டேன்; ஏன் அப்பப்ப மூச்சிரைக்கிறது உங்களுக்கு ஏதாவது ஹெல்த் ப்ராப்ளமா?'' என்றார். அவர் கவனித்தது பேச்சை அல்ல: மூச்சிரைப்பை மட்டுமே.

மூன்றாவது — அமெரிக்காவில் ஒரு பரிசோதனை. ஒரு ஆளைக் கொலை பட்டினி போட்டு ஒரு அழகான சித்திரத்தை அவனிடம் காட்டினார்கள். அவனுக்குச் சித்திரத்தில் ஒரு ஓரத்தில் வரைந்திருந்த திராட்சைப்பழம் மட்டும் தான் கண்ணுக்குத் தெரிந்ததாம்.

எனவே, கவனிப்பது என்பது உடல் நிலையையும், மனநிலையையும் பொறுத்தது. காண்கின்ற எல்லாவற்றையும் கவனிக்க எனக்குச் சில வருஷங்கள் ஆயின. கவனித்தது அத்தனையையும் எழுத வேண்டும் என்பதில்லை: எழுதத் தேர்ந்தெடுக்கப்படும் விஷயத்தில் சில பொது அம்சங்கள் — முக்கியமாக — மானுடம் வேண்டும்.

என் கண்ணெதிரில் நடந்த ஒரு சாலை விபத்தில் முதலில் எனக்கு எழுத விஷயம் ஏதும் கிடைக்கவில்லை. எல்லா ஊரிலும் தான் போக்குவரத்து. எல்லா ஊரிலும் தான் கிழவர்கள் கிழட்டு சைக்கிள்களில் அடிபட்டுச் சாகிறார்கள். ஆனால் இறுதியில் விபத்து நடந்த இடத்தில் இறைந்திருந்த கால் கிலோ அரிசியை ஒரு சிறுவன் ரத்தம் படியாததாகப் பொறுக்கி டிராயர்பைக்குள் திணித்துக் கொண்டபோது எனக்கு அங்கே கதை கிடைத்து விட்டது.

அதேபோல் ஒரு பெண் கணவனைத் திட்டிக் கொண்டே நடந்து கூலிக்குச் செல்கிறாள் — கதையில்லை. எல்லா ஊரிலும், எல்லாக் கணவர்களும் திட்டப்படுகிறார்கள். சட்டென்று கூடவே ஓட்டமும் நடையுமாக வந்த தன் ஆறு வயதுப் பிள்ளையைப் பார்த்து, ''நீயாவது என்னைச் சரியா வெச்சுப்பியாடா?'' என்று கேட்டபோது அதைச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

எனக்கு, சில வருஷங்கள் எழுதின பிறகு கவனிப்பதில் கஷ்டம் எதுவும் ஏற்படவில்லை. ஆனால் எழுதும்போது சொந்த விருப்பு வெறுப்புகளிலிருந்து விடுபடுவது தான் கஷ்டமாக இருந்தது, இருக்கிறது. 'என்னே சமூகத்தின் கொடுமை' என்று சுட்டிக் காட்டுவதைத் தவிர்ப்பது எத்தனை சிரமம் என்பது எழுதிப் பார்த்தால் தான் தெரியும். வாசகர்கள் புத்திசாலிகள்: அவர்களால் இடைவெளிகளை நிரப்ப முடியும்: முகவாயைப் பிடித்து ஸ்பூன் வைத்துப் புகட்ட வேண்டாம்: எழுதியதை இடைவெளிவிட்டுப் படிக்கையில் ஒரு வாசகனின் கோணம் கிடைத்து எத்தனை முறை திரும்ப எழுதினாலும் ஒவ்வொரு முறையும் எழுதியது மெருகேறுகிறது என்பதெல்லாம் இருபத்தொரு வருஷங்களாகக் கற்ற பாடங்கள்.

இந்தப் புத்தகத்தில் உள்ள எட்டு கதைகளில் எதிலும் என் ஆதர்சக் கதையை எய்தி விடவில்லை. முயற்சிகள்தாம் இவை. இந்த எட்டுக் கதைகளில் நான்கு சென்ற வருஷத்தில் எழுதியவை.

''கந்தனைக் காணவென்று
கார்த்திகைக்கு வந்தேனடி
உந்தனைக் கண்டேன் இனி
ஊருக்குப் போக மாட்டேன்.''

என்று நாட்டுப்புறக் கவிஞனின் கதை சொல்லும் ரத்தினச் சுருக்கத்தைத்தான் முயன்று கொண்டிருக்கிறேன்.

(''இரயில் புன்னகை'' என்ற நூலில் சுஜாதா முன்னுரை. பிரசுரம்: பூஞ்சோலை' விற்பனை உரிமை: தமிழ்ப் புத்தகாலயம், சென்னை—5. விலை: ரூ. 6.50)

புகைப்படம்: உத்ரா


உங்கள்
கற்பனைகளைத்
தங்கத்தில்
வடிவமைக்கிறோம்!
தங்கம், வெள்ளி, வைரம், நவரத்தினங்கள்
அனைத்திலும் அற்புதமான கலைப் பொருட்கள்.
தனித்தன்மை வாய்ந்த பரிசுப் பொருட்கள்.
காலத்துக்கு ஏற்ற கலை அம்சம் நிறைந்த
நகைகள். யாவும் உண்டு எங்களிடம். ஒரு
முறை எங்கள் நகைக்கூடத்திற்கு வந்து
பாருங்கள். உங்கள் மனதைப்
பறிகொடுப்பீர்கள்.
உம்மிடி பங்காரு
ஜுவல்லர்ஸ்
ராணி சீதை மண்டபம்,
(ஜெமினி மேம்பாலம் அருகில்),
603, அண்ணா சாலை,
சென்னை 600 006.
போன்: 479652
அரசு அங்கீகாரம் பெற்ற
மதிப்பீட்டாளர்கள்.

வெள்ளித்திரை

சூலக்கருப்பன்



நியாயமான அப்பாவை லஞ்சத்தில் விலைக்கு வாங்க முடியாமல் சாட்டையால் விளாசிக் கொலையும் செய்த வில்லனைப் பழி வாங்கப் பிள்ளை வளரும் — ஸாரி, வளர்க்கப் படும் கதை. பொட்டில்லாத அம்மா — புன்னகையும் இல்லாத அம்மா. ஒரு அட்ரஸைப் பிள்ளையிடம் கொடுப்பாள். 'போய் இந்த இடத்தில் கொள்ளை அடித்து வா!' பாம்புத் தோல் சட்டையைப் போட்டுக் கொண்டு, டாணென்று அந்த இடத்தில் ஆஜராகி, கொள்ளையடித்துத் திரும்புவான் பிள்ளை. 'போய்க் கல்யாண வீட்டிலிருந்து பெண்ணைக் கடத்திக் கொண்டு வா' என்று அம்மாவின் ஆணை. பெண்ணைப் பெற்றவர்கள் கதறக் கதற அவள் கடத்தப்படுவாள். மற்றபடி பிள்ளை என்ன வேலை செய்கிறார் (சீஹாட்டல் டான்ஸராம்) என்ன சம்பாத்தியம் என்பதெல்லாம் கடைசிவரை சஸ்பென்ஸ். நினைத்த நேரத்தில் ஒரு பெண்ணைக் காதலிக்க ஆரம்பிப்பார். மழை. வெள்ளை உடை. நனைந்துகொண்டு உடம்பு தெரிய ஒரு டூயட் என்று சகல தாளிப்பும் உண்டு.

தெலுங்கிலிருந்து இரவல் (அல்லது இறக்குமதி?) என்பதால் அந்த வாடை கூடுதலாகவே உண்டு. எத்தனை எத்தனை டான்ஸ்கள் உடம்பு களுக்குகிற ''கட்டிப் பிடி''கள்?

ரெஞ்சீவி துள்ளித்துள்ளிச் சண்டை போடுகிறார். குதித்துக் குதித்து டான்ஸ் ஆடுகிறார். ராதாதான் ஜோடி. விதம் விதமாய் டிரெஸ். வடக்கிலிருக்கும் ஜங்ஷன் போகும் வழியில் ஆத்திரம் ஒரு ஹால்ட் என்கிற பழைய நியதியைப் பின்பற்றிக் கவலைப்படாமல் கவர்ச்சி காட்டுகிறார்.

சக்கரவர்த்தியின் இசை. கங்கை அமரனின் 'மச்சான், மாமன்' பாடல்கள்.

என்னதான் சொல்லுங்கள், அடுத்தகாட்சி என்ன என்பதைப் பக்கத்து சீட்டிலிருப்பவரோடு பந்தயம் கட்டுவதிலும் ஒரு சுகம் இருக்கிறதே!

பக்கெட் பக்கெட்டாய்க் கண்ணீர் விடும் படங்களை விட இந்த மாதிரியான படங்கள் தனி ஜாலிதான்.

ஐந்து வயதிலேயே பாட்டு கிளாஸ் ஆரம்பித்தாயிற்று உமாவுக்கு. வாத்தியார் பாடும்போது துறுதுறுவென்று கண்களை ஓட விட்டு அங்கும் இங்கும் கவனத்தைச் சிதற விட்டாள். வாத்தியாரையே பார்த்து, அவர் சொல்வதை அப்படியே திருப்பிச் சொல்ல வேண்டும் என்று கண்டித்து வைத்தேன். அடுத்த நாள் வாத்தியார் பாட்டுக்கு இடையில் தும்மிவிட்டு 'கிருஷ்ணா கிருஷ்ணா' என்று சொல்லி மீண்டும் பாட்டைத் தொடர்ந்தார். தும்மல் வராமல் உமா வெகுளித்தனமாய் அவரைப் போல் கஷ்டப்பட்டுத் தும்மி, கிருஷ்ணா கிருஷ்ணா என்றதும் எல்லோரும் சிரிக்க, தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தவளைச் சமாதானம் செய்வதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

—கே. ஜயா, பம்டாய்-77



மழலைக் கலைஞர்



நாங்கள் வட இந்தியாவில் இருந்ததால் மகன் குமாருக்குக் கர்நாடக சங்கீதத்தில் கொள்ளை ஆசை இருந்தும் முறைப்படி சொல்லித்தர முடியவில்லை. ஒரு தடவை தமிழ் விழா நடந்தபோது வினாடி வினா நிகழ்ச்சி ஒன்றில் இரண்டு ராகங்களைக் கலந்து ஆலாபனை செய்து என்ன ராகம் என்று கேட்டார்கள். யாரும் விடை சொல்வதற்குள் 'கனடா — கல்யாணி' என்று பக்கத்து இருக்கையில் இருந்த குமார் உரக்கக் கூறியதும் நாங்கள் பிரமித்துப் போய்விட்டோம்.

திருமதி சுகந்தா, சென்னை-59



பிள்ளையார்

பிள்ளையார் படம்! இதிகாச காலத்துக் கதையுடன், இந்த நாள் கதையையும் புகுத்தி, போன நூற்றாண்டில் எடுத்த படம். எல்லா நடிகர்களுக்கும் கவசம், க்ரீடம், போன்ற விநோத விஷயங்களை யெல்லாம் போட்டிருப்பதால், இந்த நடிகர் யார், இந்த நடிகை யார் என்று கண்டுபிடிக்கும் கண்ணா மூச்சி ஆட்டத்திலேயே முழுப் படமும் முடிந்துவிடுகிறது. சுருளிராஜன்மட்டும்தான் தெளிவாய்த் தெரிகிறார். அடேடே, அவர் சிஷ்யன் கூட, நம்ப லூஸ் மோகன். அந்தத் தேங்காய்க் குடுமி சிக்கலை எடுக்க அவர் எழுத்தாணியை உபயோகிப்பதும் குருநாதர் சுருளி ராஜன் 'இதயத்தில் ஏற்பட்ட சிக்கலை எடுப்பதற்காகஉபயோகப்படுத்தப்படும்இந்த எழுத்தாணியை உன் தலைச் சிக்கலை எடுக்க உபயோகப் படுத்துகிறாயே' என்றவுடன் குபீர் என்று சிரிப்பு வருகிறது. அசட்டு முகபாவத்துடன் அவர் ஒலியில் ஒடுங்கி உட்காருவதைப் பார்க்கும்போதும் சிரிப்பு வருகிறது. கூடவே இந்த மனிதர் நம்மிடையே இல்லையே என்கிற ஏக்கமும் வருகிறது.

கதை — பிள்ளையாரின்' பெருமையை உணர்த்துவதற்காக — (சில பக்தர்கள் அவதிப்பட்டு ஆனை முகத்தான் அருளுக்குப் பாத்திரமாவதை) — சொல்லப்பட்ட கதை. வல்லாள கணபதி கதையில் சின்னப் பையன் ஒருவன் கணபதி பக்தன். அவனைத் தப்பாகப் புரிந்து கொண்டு, அவனைத் தண்டித்துவிடும் அவன் தகப்பனார். தகப்பனாருக்கு உடல் முழுக்கப் புண்வைக்க, வல்லாளன் கணநாதனை வணங்கி தந்தையின் உடலைச் சீர்ப்படுத்தும் கதை. இரண்டாவது கதையில் ஜனக் கன்னி, உத்தம கணவனை அடைந்து, அரவம் தீண்டி அவன் மரித்த பின்பும் வேழமுகத்தான் அருளால் மறுபடி தன் கணவனை அடையும் கதை.

மூன்றாவதில் முழுமுதற்கடவுள் கணபதியே என்று நிலைநாட்டும் கதை. இக்கதையில் அவ்வையிடமிருந்து அகத்தியர், அகத்தியரிடமிருந்து பிரும்மா, பிரும்மாவிடமிருந்து விஷ்ணு. அப்புறம் விஷ்ணுவிடமிருந்து பார்வதி பரமேசுவரன் என்று முருகன் தாவித் தாவி ஓடிக் கொண்டே யிருப்பது 'கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்' புதிர் பாணியில் இருப்பதை ஒத்துக்கொண்டுதான் ஆக வேண்டும்.

'நாம புதுசாக் கட்டிக்கிட்ட ஜோடி தானுங்க' மாதிரி ஒரு பாட்டு. 'நீராரும் கடலுடுத்த நிலமடந்தை' மாதிரி ஒரு பாட்டு, கனவு சீன்ல கூட ஒரு பாட்டு உண்டு. ஆனா மனசிலேதான் எதுவுமே நிக்கலை.

இம்மாதிரிப் படங்கள் அடிக்கடி வந்து பக்தி வளர்க்காவிட்டால் போகட்டும்; இருக்கிற தெய்வ உணர்வைக் குறைக்காமலிருந்தால் சரி.

—ஜெயமன்மதன்

மழலைக் கலைஞர்


ஏழு வயதில் ஸ்ரீகாந்தை வயலின் வகுப்பில் சேர்த்தேன். தினமும் பயிற்சி செய்வதற்கு முன்னால் மேஜை மீது ஏறி நின்றுகொண்டு, அ. இ. ரே. பாணியில் 'எ க்ருதி இன் ராகா மோகனம்' ஸெட் டு ரூபக தாள்' என்று அறிவித்துவிட்டு 'வரவீணா' வாசிப்பான். யார் சிரித்தாலும், கேலி செய்தாலும் கவலைப்படமாட்டான். அவன் முடித்ததும் எல்லோரும் கைதட்டி ஆகவேண்டும். இப்போது பதினோராம் வயதில் ஏராளமான வர்ணங்களும் கீர்த்தனைகளும் பாடம் செய்து பரிசுகளை வாங்கிக் குவித்து வருகிறான்.

வி. கீதா, மைசூர்-2



ராகமாலிகா பட்டுப் புடவையைக் குலுக்கல் முறையில் பெறும் அதிர்ஷ்டசாலி:

வி. கீதா
2941, 11வது குறுக்குத் தெரு
வி. வி. புரம் மைசூர்-2


பரஸ்பர அவதூறு
நான் தான் டி.எம்.கே.பி.
இல்லை! நான் தான் அசல் டி.எம்.கே.பி!
நான் தான் பாரதீய ஜனதா!
பொய்! நான் தான் அசல் பாரதீய ஜனதா!
நானே ஜனதா!
இல்லை, இல்லை! நான் தான் அசல் ஜனதா!
வீரப்பன் கோஷ்டி

கல்கி



1984 டிசம்பர் 16
மலர் : 43 இதழ் : 20
ரக்தாக்ஷி மார்கழி 1



சிந்தித்துச் செயல்படுவோம்—3

எதிர்க்கட்சிகள் - ஏற்றமும் ஏமாற்றமும்

எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து ஒரே கட்சியாகி இ. காங்கிரஸுக்கு இணையான பலத்துடன் விளங்கி ஜனநாயகம் தழைக்க உதவ வேண்டும் என்று விரும்பினோம்; நடக்கவில்லை. அதுதான் போகட்டும். ஒரு குறைந்தபட்சப் பொருளாதாரத் திட்டத்தை வகுத்துக்கொண்டு, அந்த அளவிலாவது இணைந்து செயல்படுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஏமாற்றமடைந்தோம். கடைசி பட்சமாகத் தேர்தலில் தொகுதி உடன்பாட்டுக் காவது வந்து ஆளும் கட்சிக்கு எதிரான வாக்குகள் சிதறிப் போகாமல் காப்பார்கள் என்று கருதினோம். இதிலும் நம்மை எதிர்க் கட்சித் தலைவர்கள் கைவிட்டு விட்டார்கள்.

இப்படி இவர்கள் நடந்துகொண்ட முறை மிகுந்த ஏமாற்றமளித்த போதிலும் எதிர்க் கட்சிகளின் கொள்கைகள் சற்றும் ஏமாற்றமளிக்கவில்லை. சமீபத்தில்தான் உருவான டி. எம். கே. பி. என்ற சரண்சிங் கட்சி காந்திய சோஷலிஸம் பேசுகிறது. நகர்ப்புறப் பொருளாதாரத்திலேயே அதிக கவனம் செலுத்தப்படும் இன்றைய போக்கு மாறி கிராமப்புறப் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் தருவோம் என்கிறது. ஆளும் கட்சியின் இன்றைய பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்டுள்ள தார்மீக சீரழிவைச் சுட்டிக்காட்டி இந்நிலையை மாற்றியமைக்கப் புதிய பொருளாதாரக் கொள்கைகள் வகுக்கப்படும் என்கிறது.

பாரதிய ஜனதா கட்சியின் அருமையான தேர்தல் அறிக்கை இன்றுள்ள மதசார்பின்மை என்ற நெகடிவ் அணுகுமுறையை எம்மதமும் சம்மதம் என்ற பாஸிடிவ் அணுகுமுறையாக மாற்றி அமைக்க உறுதி பூணுகிறது. தேர்தலில் ஊழல்கள் நடவாதிருக்க சீர்திருத்தங்கள்; மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டால் முறையிட லோக்பால் என்ற விசாரணை மன்றம், மத்திய அரசு மட்டுமின்றி மாநில அரசுகளும் பலம் பெற்று விளங்க அவற்றுக்கு அதிக அதிகாரங்கள்; கம்பெனிகளுக்கு உள்ளது போல் அரசியல் கட்சிகளுக்கும் வரவு செலவுகளுக்குக் கட்டாயத் தணிக்கை; கண்ட்ரோல்களை ஒழித்து, வரிகளைக் குறைத்து, தொழில் வளப் பெருக்கத்துக்கும் வேலை வாய்ப்புக்கும் உதவுதல்; விலைவாசிகளை ஸ்திரப்படச் செய்தல் போன்ற ஆரோக்கியமான கொள்கைகளை மக்கள் முன் வைத்துள்ளது.

தி. மு. க. வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கை எதிர்பார்த்தபடியே மாநில சுயாட்சியை வலியுறுத்துகிறது. ஹிந்தி திணிப்பை எதிர்க்கிறது. அதோடு உள்ளாட்சித் தேர்தல் ஆறு மாதங்களில் நடத்தப்படும் என்றும் உறுதி அளிக்கிறது. புறநகர்ப் பகுதிகளில் ஏழைகளின் குடியிருப்புக்களை உருவாக்கி அவர்கள் சுய வேலை வாய்ப்பில் வருவாய் பெருக்கிக்கொள்ள புதிய சீரிய திட்டத்தை முன் வைக்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமாகத் தொழில் வளப் பெருக்கத்துக்கு ஒரே இடத்தில் ஒரே சமயத்தில் சகல சடங்குகளையும் முடித்துத் தருவதாக வாக்களிக்கிறது.

ஜனதா கட்சியோ வேலை பெறும் உரிமையை அடிப்படை உரிமையாக அரசியல் சாசனத்திலேயே சேர்க்கச் சித்தமாயிருப்பதாய்க் கூறுகிறது. அ.இ.ரே., டி.வி. நிலையங்களைச் சுதந்திர கார்ப்பரேஷனுக்குவதாகவும் 'மிசா'வை ஒழித்துக் கட்டுவதாகவும் வாக்களிக்கிறது.

இதற்கு மறுபுறமாக இ. காங்கிரஸின் தேர்தல் அறிக்கையில் புதிதாக ஒன்றையுமே காணோம். பரீட்சித்துப் பார்க்கப்பட்டுப் படுதோல்வி அடைந்த அதே பழைய கொள்கைகள்தாம். 'லஞ்ச ஊழலை ஒழிப்போம்' என்று கூறும் போது கூட லஞ்ச ஊழல் இருந்ததாக, இருப்பதாக ஒப்புக்கொண்டதாகி விடுமோ என அஞ்சி மழுப்பலாகப் பேசுகிறது. அ. இ. அ. தி. மு. க.வோ எனில் இன்றுவரை (டிசம்பர் 7) தேர்தல் அறிக்கையே தயாரிக்கவில்லை; அதற்கு அவசியமிருப்பதாகவே கருதவில்லை போலும்! எம். ஜி. ஆர். பெயரைச் சொல்லிக்கொண்டிருந்தாலே போதும் வோட்டுக்கள் குவிந்துவிடும் எனக் கருதுகிறது!

இந்தச் சூழலில் யாருக்கு நம் வோட்டு?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இசை பெற்ற ஊர் என்று கூற வேண்டுமானால் தஞ்சை நன்னாட்டின் வளமிக்க ஊரான திருவாரூரைத்தான் சொல்லலாம். தமிழோடு இசை பொங்கிப் பெருகிப் பாய்ந்த ஊர். பண்பொழிந்த செல்வரான சுந்தரமூர்த்தி சுவாமிகள் இருந்த ஊர். இசையுலகத்தில் இசைபெற வாழ்ந்த மூன்று பெரியோர்களைப் பெற்றதாலும் இன்னிசை பெருக்கிய ஊர்.

''கீதத்தை மிகப் பாடும் அடியார்க்
கென்றும்
கேடிலா வானுலகங் கொடுத்த நாளே''

என்று அதிசயிக்கிறார் வாகீசப் பெருமான்.

ஞானசம்பந்தரோ,

அவதார பூமியாகவும் விளங்குவதை எண்ணி எண்ணித் தமிழர்கள் பெருமைப்படலாம். திருவாரூர்ப் பெருமக்கள் அத்தனை பேரும் பூரித்து மகிழ வேண்டிய சிறப்பு. உலகத்திலே வேறு எந்த ஊருக்கும் கிடைக்காத பெருமை இது.

நியாயமாக இந்த மகா புருஷர்கள் அவதரித்த இல்லங்களை மத்திய அரசே தேசிய உடைமையாக்கி பாரத நாட்டுக்கே உரிமையாக்கியிருக்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் சுலபமாய் நல்லகாரியங்கள் நடந்து விடுவதில்லையே!

சங்கீத மும்மூர்த்திகள் அவதரித்த இல்லங்களைப் போற்றிப் பாதுகாத்துத் தினசரி ஒரு விளக்காவது ஏற்றி வைக்க வேண்டு

திரிமூர்த்திகள் பிறந்த திருவாரூர்

ஆனந்தி

''சென்னடைகொண் டலர்ந்த புன்னை
ஞர்கள்கீத வோசை போய்
அண்டரண்டம் ஊடறுக்கும்
அந்தணாரூரென்பதே''

என்று கீத ஓசையைப் புகழ்கிறார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளோ இன்னும் ஒருபடி மேலேயே போய்விடுகிறார்.

''பரமனையே பாடுவார்
அடியார்க்கும் அடியேன்''

என்று எல்லா இசை ஞானிகளுக்கும் தம்மை அடியானென்று கூறிக்கொள்கிறார்.

சேக்கிழார் என்னும் பெரியார், ''குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி''ய திருவாரூர் என்று சிறப்பிக்கிறார்.

திருவாரூரில் எத்தனையோ நூற்றாண்டுகளாக இன்னிசை முழங்கி வந்திருக்கிறதென்று அறிகிறோம். இப்படிப்பட்ட புண்ணிய பூமியே சங்கீத மும்மூர்த்திகளின்


மென்று 1954ல் சங்கீத மும்மூர்த்திகள் ஞாபகார்த்த சபை தொடங்கப்பட்டது. ஒரு சங்கீத பாடசாலையும் ஆரம்பித்தார்கள். மூன்றுபேருடைய ஜனன தினங்களும் அடுத்தடுத்து வருவதால் அந்த தினங்களைக் கொண்டாடிக் கச்சேரிகள் நடத்தி வந்தார்கள்.

ஆலத்தூர் வெங்கடேசஅய்யர் தீக்ஷிதர்வீடு இருந்த மனையை வாங்கி சபாவின் பெயரில் பதிவு செய்தார். பிறகு சென்னையில் டாக்டர் ராகவன், ஸ்ரீ டி. சதாசிவம், ஸ்ரீ அனந்தராமகிருஷ்ணன் இன்னும் சிலர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. திருமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி கச்சேரிகள் செய்து நிதி திரட்டிக் கொடுத்தார். 1953ல் தியாகப்ரும்மம் வீட்டைவாங்கிச்சபாவிடம் ஒப்புவித்தார்கள்.

முத்துசுவாமி தீக்ஷிதர் மனையில் ஒரு பூஜை மண்டபமும் கட்டுவித்தார்கள். சிங்கப்பூர் கோவிந்தசாமி பிள்ளை ஒரு சங்கீத மண்டபம்

✖ ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இல்லம்







ஸ்ரீ தியாகராஜர்



✖ ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதர்



ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள்

கட்டுவதற்குப் பொருளுதவி செய்தார். அதற்கு முன்னால் பந்தல் போட்டு ஜயந்தி உற்சவம் நடத்தி வந்தார்கள்.

இவையெல்லாம் தனியார் முயற்சிகள். அரசு சார்பில்? சென்ற முப்பது ஆண்டு காலத்தில் நடந்திருக்கிற சம்பவங்கள் நம்மை அதிசயப்படச் செய்கின்றன.

மத்திய அரசு புதைபொருள் ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்தவர்கள் வந்து இந்த மூன்று தலங்களையும் பார்த்து விட்டுப் போனார்கள்.

தமிழ்நாடு அரசு சார்பில் வந்து பார்த்தார்கள்.


ஆந்திராவில் ஸ்ரீ பாலமுரளி கிருஷ்ணாவின் தூண்டுதலால் ஸ்ரீ அஞ்சையா லட்ச ரூபாய் தருவதாக அறிவித்தார்.

திரு கருணாநிதி முதல் மந்திரியாக இருந்த காலத்தில் அவருக்கு ஒரு சிரத்தை ஏற்பட்டதோடு சரி.

அ. இ. அ. தி. மு. க. கட்சியில் இந்த வீடுகளை எடுத்துக்கொண்டு கட்டித் தருவதாகவும், பிறகு மாவட்டக் கலெக்டரிடம் ஒப்படைப்பதாகவும் ஒரு பேச்சு வார்த்தை நடந்தது. எதுவுமே நிறைவேறவில்லை.

கடைசியாக இந்தப் புனித காரியமானது ஒரு புனிதராலேயே நடத்தப்பட வேண்டுமென்பது தியாகேசனின் திருவுள்ளமாக இருக்க வேண்டும். காஞ்சி முனிவரின் ஆசியோடு "ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட கர்நாடக ஸங்கீத சேவா டிரஸ்ட்" தொடங்கப்பட்டு

○ ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள் இல்லம்



இடிந்து சிதிலமாகி யிருக்கும் தியாகராஜ சுவாமிகளின் இல்லம், சியாமா சாஸ்திரிகளின் இல்லம் இரண்டையும் புதுப்பித்துக் கட்டவும், இன்னும் இசை வளர்ச்சிக்காகத் தொண்டுகள் செய்யவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. லால்குடி ஸ்ரீ ஜெயராமன் அவர்கள் இந்தப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். ஏற்கனவே பல சங்கீத வித்வான்கள் பலர் கணிசமாக நன்கொடை வழங்கத் தொடங்கி விட்டார்கள். மேலும் நிதி திரட்டவும் முனைந்திருக்கிறார்கள். நம் நாட்டுப் பண்பாட்டின் மீது அக்கறை கொண்டவர்கள் யாவரும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய பணி. நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

நன்கொடைகளை "ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட்" என்ற பெயரில் காசோலை, டிராஃப்ட் அல்லது மணியார்டராக லால்குடி-ஜி. ஜெயராமன் அவர்கள் விலாசத்துக்கு (13-14, ராமானுஜம் தெரு, சென்னை-600017) அனுப்பலாம்.

தியாகராஜ சுவாமிகள் பிறந்த வீடு இன்று ஒரு மேடாசக் காட்சி யளிக்கிறது. மேட்டில் ஏறி எட்டிப் பார்த்தால் இரண்டு தூண்கள் தாங்கும் கூடம் தெரிகிறது. முற்றத்துக்குப் போடப்பட்டிருந்த இரும்புக் கம்பிகள் துருப்பிடித்துக் கோணலாகத் தொங்கிக்கொண்டிருக்கின்றன. வாசலில் இருந்த தூண்களையும் நன்றாக இருந்த ஓடுகளையும் யாரோ தூக்கிக் கொண்டு போய் விட்டார்களாம். சுவாமிகளிடம் இருந்த பக்தியே காரணமாக இருக்க வேண்டும்!

"இந்த வீட்டை எப்போதோ வாங்கிக் கொடுத்துவிட்டார்கள்சதாசிவம் தம்பதிகள். அதன் பிறகு இதுவரை செப்பனிடவும் பாதுகாக்கவும் முடியாமலிருக்கிறது" என்று வருத்தப்பட்டார் ஸ்ரீ நடராஜ ஐயர்.

"வட இந்தியாவிலிருந்து வரும் தமிழர்கள் ஆந்திராவிலிருந்து வரும் ரசிகர்கள், கர்நாடகாவிலிருந்து வரும் இசை அன்பர்கள் இந்த இடத்துக்கு வந்தால் மெய்சிலிர்த்துப் பரவசமாகி நிற்கிறார்கள். இந்த மண்ணை எடுத்துத் தலையில் போட்டுக் கொள்கிறார்கள். அவ்வளவு பெருமை இருக்கிறது தியாகராஜ சுவாமிகளுக்கு" என்றும் கூறினார்.

சியாமா சாஸ்திரிகளும் கோவிலின் அருகிலேயே வசித்திருக்கிறார். "அம்ப காமாக்ஷி"

என்று வாத்ஸல்யத்துடன் தேவியைத் திரும் பத் திரும்ப அழைத்துப் பாடிய ஞானக் குழந்தை பிறந்த வீடு இன்னும் நிற்கிறது. குப்பையும் கூளமுமாக, மேற் கூரையின் ஓடுகள் உடைந்து சிதறிக் காணப்படுகிறது. அத்தனை குப்பைக்கும் மத்தியில் சாஸ்திரிகள் பாடுவது போல் பெரிய படம் ஒன்றும், பாலகிருஷ்ணனின் படம் ஒன்றும் கம்பீர மாகக் காட்சியளிக்கிறது. சாஸ்திரியார் இங்கு பதினெட்டு வயது வரை வசித்து வந்தாராம். அதன் பிறகே தஞ்சைக்குக் குடிபெயர்ந்ததாகக் கூறுகிறார்கள்.

அவருடைய ஆத்ம சக்தியால்தான் அந் தத் தூண்கள் இன்னும் நிற்கின்றனவோ? இந்த வீட்டில் சில இசைக் கருவிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. சங்கீத பாட சாலை ஒன்று நடந்து வருகிறது.

இந்த வீடுகளைத் தரிசித்த பின்னர்தான் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீட கர்நாடக சங்கீத சேவா டிரஸ்ட் செய்யப் போகும் காரியம் எவ்வளவு முக்கியமான பணி என்பதை உணருகிறோம்.

ஸ்ரீ தீக்ஷிதர் வசித்த வீடு இருந்த மனையில் இன்று ஒரு பூஜா கிருகமும், இன்னிசை மண்டபமும் கட்டப் பட்டிருக்கின்றன. ''காஞ்சி பரமாச்சாரியாளின் ஆலோசனை யின்பேரில் தீக்ஷிதர் பாடிய தெய்வங்களான தியாகராஜஸ்வாமி, கமலாம்பாள், விநாய கர் முருகப் பெருமான் இவர்களை அவர் வழிபடுவது போல அமைப்பு. எதிரே மேரு இருக்கிறது'' என்று எடுத்துக் கூறினார் ஸ்ரீ நடராஜ ஐயர். தினமும் பூஜை நடந்து வருகிறது என்றும் அக்கம் பக்கத்தில் உள்ள கோவில் திருநாட்களில் ஜனங்கள் இங்கும் வந்து வழிபடுகிறார்கள் என்றும் கூறினார். சங்கீத மும்மூர்த்திகள் உருவப் படங்களும் பாலகோபாலனின் படமும் பூஜையில் வைக்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும் சந்தோஷமாக இல்லை. நமஸ் காரம் கூடச் செய்ய முடியாத அளவுக்குத் தூசி படிந்து, நான்கு புறமும் ஒட்டடை தொங்குகிறது. கட்டிடம் நன்றாக இருந்து என்ன பயன்? அதை நன்றாகவும் சுத்தமாக வும் வைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா?

யார் எவ்வளவு பணம் திரட்டிக் கட்டிடம் கட்டிக் கொடுத்தால் என்ன? தினமும் சுத்தம் செய்து வாசலில் ஒரு கோலம் போட்டு அழகுபடுத்தி வைத்துக்கொள்வ தல்லவா முக்கியம்?

திருவாரூரில் அறுபதினாயிரம் பேர் வசிப்ப தாகக் கூறினார்கள். ஒரு அறுபது பெண் மணிகள் இந்தக் காரியத்தில் சிரத்தை எடுத்துக் கொண்டு பணி புரிந்தால் இந்த இல்லங்கள் புதுப் பொலிவோடு இல்லா விடினும் சுத்தமாகவாவது விளங்காதா?

கமலாம்பாளின் கோவிலினால் எவ் வளவு பெருமையோ அவ்வளவு பெருமை இந்த இசைச் செல்வர்களாலும் திருவா ரூருக்கு ஏற்பட்டிருக்கிறது. அகில உலகப் புகழ் பெறும் சங்கீத பீடமாகவே இவ்வூர் வளர இடமிருக்கிறது.

இவற்றையெல்லாம் மனத்தில்கொண்டே கைங்கரியத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். இசைக் கல்லூரியும், காஸெட் லைப்ரரியும் நூலகமும் ஆராய்ச்சிக் கூடமுமாக வளர் வதற்குத் தகுந்த இடம். பத்து லட்சம் செலவில் இவற்றை நிறைவேற்றத் திட்டம் வகுத்திருக்கிறார்கள்.

தீக்ஷிதருடைய இல்லமே இல்லாதபடியால் அங்கே கோவிலும் மண்டபமும் கட்டியது பொருத்தமாக இருக்கிறது. மற்ற இல்லங் களைத் திரும்பக்கட்டும் போது முன் இருந்த மாதிரியே சிறிதும் மாற்றமல் கட்டினால்தான் அவர்களுடைய நிரந்தர நினைவுச் சின்னங் களாக விளங்கும்.

மழலைக் கலைஞர்

நெருங்கியவர்கள் கூறும் பிறப்பிலேயே நெருங்கியவர் பேச்சு...

நெருங்கியவர்களின் எட்டு வயது மகள் ராமநாடகக் கீர்த்தனையின் 'யாரோ என்றெண்ணுமலே' பாசலின் அனு பல்லவியை 'சூராதி சூரர், ராமரெனும் பேரர், ஸுகுண தீரர் ....' என்று பாடிக் கொண்டிருந்தாள்.

''உங்கள் டீச்சர் இப்படியா சொல் லிக்கொடுத்தார்?'' என்று ஆச்சரியத் துடன் கேட்டேன்.

''சூராதி சூரன், ராமனென்னும் பேரன் ஸுகுண தீரன்' என்று தான் டீச்சர் சொல்லிக் கொடுத்தார். ஆனால் ராமர் கடவுள் இல்லையா? அதுதான் மரியாதையுடன் பாடுகிறேன்'' என்று ஒரு போடு போட்டாள்!

ஜெயபாலா, பெங்களூர்-38



நேரம் நல்ல நேரம்



✖ ''என் அன்புள்ள போக்கிரி''



✖ நாமும் பெரிய நடிகளாகிவிடுவோம்...



✖ ''ம்ம் தேறிட்டே...,

12. பிற நடிகைகளுடன் இணைத்து உங்களைப் பற்றி வரும் கிசுகிசுக்கள் உங்கள் இதயத்தையோ இல்வாழ்க்கையையோ பாதிப்பதுண்டா என்று போன வாரம் சென்னை-15 கு. கணேசன் கேட்டிருந்தார்....

கிசுகிசுன்னதுமே ஆர்வம் அதிகமாகும்ங்கறது தெரிஞ்ச விஷயம்தான். அதனாலதான் கிசுகிசுவே வரது! அது உண்மையா இருந்தாலும் பொய்யா யிருந்தாலும் அதைப் போட்டு, ரசிகர்களைக் கவரக் கூடியதுங்கறதுனால பத்திரிகைகள் சிறிய சமர்சால்ட் (Somersault) குட்டிக்கரணம் அடிக்கின்றன என்று சொல்லலாம். அதை அவங்க அப்பப்ப அடிச்சுக்க வேண்டியதுதான். அதைத் தடுக்க முடியாது.


அது இதயத்தைப் பாதிக்குமான்னு, என் இதயம் ஓரளவுக்கு ஸ்ட்ராங்கானதுனால இதயத்தைப் பாதிக்காது. அதேமாதிரி இல்வாழ்க்கையும் ஓரளவுக்கு ஸ்ட்ராங்கான விஷயம்தான். அதையும் பாதிக்காது. இரண்டுக்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. கிசுகிசுவில எவ்வளவு உண்மை இருக்குங்கறதைப் பொறுத்து–உண்மையான கிசுகிசுவா இருந்தா அது எல்லாக் கல்யாணமானவங்களையுமே–நடிகர்கள் மட்டுமல்ல–பாதிக்கும். கொஞ்ச நேரம் பஸ் ஸ்டாப்பில் ஒரு பெண்ணைப் பாத்திட்டிருந்ததா மனைவி கேட்டான்னு ''என்னங்க ரொம்ப நேரம் பார்த்தீங்களாமே, பக்கத்து வீட்டுக்காரரு சொன்னாரு''ன்னு அது கொஞ்சம் பாதிக்கும்னுதான் சொல்லணும். பாதிப்பு உண்மையைப் பொறுத்திருக்கிறது.

13. எஸ். சைத் முகமத், போடிநாயக்கனூர் தாங்கள் இதுவரை பெற்ற பாராட்டுக்களில் யாருடைய பாராட்டை மதிக்கிறீர்கள்? என்ன காரணம்?

பல பெரியவர்கள், பல முக்கியஸ்தர்கள் எனக்குப் பாராட்டுக் கொடுத்திருக்காங்க. என் தாய் தகப்பன் கூட என்னைச் சில சமயம் கொஞ்சம் அதிகமாகவே 'பரவால்லப்பா நீ தேறிடுவே போலிருக்கே' அப்படிங்கற மாதிரி கூடச் சொல்லியிருக்காங்க. ஆனா அதெல்லாம் விட எனக்கு அதிகமாகத் தோணுவது இரண்டு பேரோட பாராட்டு–ஒண்ணு டி.கே.ஷண்முகம் அவர்கள் என்னைப் பாராட்டியது. அதை நான் எதிர்பார்க்கலே. அதுவும் நான் சின்னப் பையன் அப்ப. அவங்கல்லாம் ஒரு சின்னக் கோவத்துல முட்டாள்னு திட்டிட்டா அன்னிக்குச் சாப்பிட மாட்டோம். 'என்ன காரியம் செஞ்சுட்டே! முட்டாள்!' அப்படின்னு சொல்லிட்டாருன்னு அண்ணாதுரைன்னு என் கூட இருந்த நடிகர் அன்னிக்குப் பூராச் சாப்பிட மாட்டார். அதைப் பெரிய இன்ஸல்ட்ன்னு நினைக்கக் கூடியவங்கநாங்க. அவ்வளவு Sensitive to his appreciation or irsult அப்படி இருக்கறப்ப அவர் என்னைப் பார்த்து. ''பரவால்லேப்பா உம்.. பரவாயில்லையே நீ தேறிட்டே''ன்னு சொன்னப்ப இருந்த சந்தோஷம் பரீட்சையில பெயில் ஆன துக்கத்தைக்கூட மறக்கடிச்சிடுத்து.

அடுத்தபடியா இன்னிக்கு நான் ஃப்ரேம் பண்ணி வீட்ல மாட்டிவச்சிருக்கிற பாராட்டு. சினிமாக்காரங்க, ஷோவுக்காக பண்ற விஷயம்போல இல்லே. அதை நிஜமாவே பெருமைக்குரிய விஷயமா நான் நினைக்கிறது–பதினாறு வயதினிலே பார்த்துட்டு திரு பாலசந்தர் அவர்கள் To my dear Rascalன்னு எழுதிக்

கமல் பதில்கள்



கொடுத்தது. எதிர் நீச்சல் படத்தில மேஜர் செல்லமா மாதுவை 'ராஸ்கல்'னு கூப்பிடற காட்சி உண்டு. சந்தோஷமான நேரத்துலேயும் துக்கமான நேரத்துலயும் ராஸ்கல்ங்கற வார்த்தைக்கு அர்த்தம் மாறி மாறி வருகிற மாதிரி இங்க ராஸ்கல்ங்கற வார்த்தைக்கு அர்த்தத்தையும் நான் புரிந்து கொண்டேன். அதுல அவர் பாராட்டி எழுதியிருந்தார் ஆங்கிலத்தில். அதை வெறும் ஃபைலில் வைக்கிறதை விட அத ஃப்ரேம் பண்ணி ஜனாதிபதி பரிசுகளோட ஹால்ல மாட்டி வச்சிருக்கேன்.

14. எஸ். மீனாகுமாரி, கோவை
நீங்கள் எந்தப் படத்தில் நடித்தபோது நாம் ஒரு பெரிய நடிகராகிவிடுவோம் என்று நினைத்தீர்கள்?

நினைப்புங்கறது வந்து ஆசையிலிருந்து கூட வரலாம்; பேராசையிலிருந்தும் வரலாம். ஆக, அப்படிப் பார்த்தோம்னு நான் பெரிய நடிகனாகிவிடுவேங்கற நினைவு, ஆசை, களத்தூர் கண்ணம்மாவிலேயே இருந்தது. ஆனா, அது நியாயமான நினைவா இல்லையாங்கறது ஒரு பதினாறு பதினேழு வயசுலதான் எனக்குப் புரிந்தது. சும்மா எல்லாரும் நடிச்சுட முடியாது. அதுக்கு முயற்சி வேணும். செயல் முறைகளே வேற அப்படிங்கறதெல்லாம் உணர்ந்து உடற்பயிற்சி செய்யணும்கிற ஆர்வமெல்லாம் வந்தது. நினைப்பு எல்லாருக்கும் இருக்கும். ஆர்வம் இருக்கறவங்களுக்கெல்லாம் 'நான் முன்னுக்கு வந்திரு'வேன்சற நினைப்பு இருக்கும். அந்த நினைப்பு இல்லாம செயல்படவே முடியாது.

15. பேபி பொன்னுசாமி, நல்லிப்பாளையம், நாமக்கல்.
வாழ்க்கையில் நம்மால் ஒருவருக்கு இப்படி ஆகிவிட்டதே என்று எப்போதாவது வருந்தியதுண்டா?

உம். எங்க அப்பா அம்மாவைப் பார்த்து நான் அப்படியெல்லாம் வருத்தப்பட்டிருக்கேன். இப்படி ஒரு புள்ளையப் பெத்துட்டாங்களே பாவம் அவங்க வயசு காலத்துலன்னு வருத்தப்பட்டிருக்சேன்.

16. ஆர். சம்பத், திருச்சி
அனுராதா, சிலுக்கு இருவரும் ஒரே சமயத்தில் ஆற்றில் விழுந்து விட்டால் முதலில் யாரைக் காப்பாற்றுவீர்கள்?

உம்... ஆற்றைக் காப்பாத்திடுவேன்!

17. வி. செல்வி, கும்பகோணம்.
உங்கள் பலம் எது? உங்கள் பலவீனம் எது?

என்னுடைய பலம்... வி. செல்வி போன்ற ரசிகர்சள். பலவீனமும் செல்வி போன்ற ரசிகர்களே.

18. கா. சுப்பிரமணியன், எம்ஏ., பி.எட்., கடலூர்
சினிமாவைப் போல சொந்த வாழ்க்கையிலும் நடிக்க வேண்டிய வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்ததா?

விஞ்ஞான ரீதியாக ஏதாவது கேட்டுடப் போறாரோன்னு பயந்துண்டிருந்தேன். MA BEd. ஆச்சே! சினிமாவைப் போல வாழ்க்கையிலநடிக்கவேண்டியநிர்ப்பந்தங்கள், சங்கோஜ நிர்ப்பந்தங்கள் எல்லார் வாழ்க்கையிலுமே இருக்கும்னு நினைக்கிறேன். எம்.ஏ. பி.எட். படிச்ச நீங்க கூட பிடிக்காத ஒருத்தரைப் பார்த்து "ஆங்! வாங்க! சௌக்கியமா?"ன்னு கேக்க வேண்டிய நிர்ப்பந்தம் வருகிறது. அல்லது வீட்ல ஒருத்தர் உட்கார்ந்துக்கிட்டுப் போகவே மாட்டேன்சாருன்கிறப்ப "ஆம்... உம்...ம் உங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபம் இல்லேன்னு போயிட்டு வரட்டுமா?"ன்னு உங்க வீட்ல உட்கார்ந்திருக்கிற விருந்தாளியைப் பார்த்து நீங்க வெளியே போக permission கேட்கறது நடிப்புத்தானே. எல்லார் வாழ்க்கையிலும் ஏதாவது ஒரு காலகட்டத்துல செய்ய வேண்டும். அதக் குறைச்சு, நடிக்கறது கூடாதுன்னு முயற்சிக்கும் போது அது பெரிய சத்திய சோதனை! அதனால கெட்ட பேர். பிடிக்காதவங்ககிட்ட பேசறதில்லே, பிடிச்சவங்க கிட்டத்தான் பேசறதுன்னு வச்சுக்கும் போது பல எதிரிகள் உண்டாகிறார்கள்.

19. நூரி, கோவை
திருமதி லக்ஷ்மி அருணாசலம், மே. தாம்பரம்
Realism இல்லேன்னு புராணப் பாத்திரங்களை நடிக்க மறுக்கும் நீங்க இதுவரை ஏற்ற பாத்திரங்களில் எத்தனையோ Realism இல்லாமல் இருக்கிறதே? இது எந்த விதத்தில் உங்கள் கொள்கைக்கு ஒத்துவரும்?


இது... சொன்னதில ஒரு சிறு திருத்தம். Realism இல்லேங்கறதுனால நான் நடிக்காம இல்லே. அதுக்கான திறமையும், அதுக்கான materials உம் எங்கிட்டக் கிடையாதுங்கறதுனால. ஒரு பாத்திரத்தை அளவெடுக்கும் போது என்னால அதைச் செய்ய முடியுமாங்கறதைமட்டுமே அதில் அளந்து பார்த்துவிட்டு அதச் செய்யறதில்லேன்னு முடிவு பண்றேன். அப்படிப் பார்த்தா இப்ப சமீபத்துல ஒரு படத்துல நான் கடவுளா நடிச்சிருக்சேன். உருவங்கள் மாறலாம். அதுல மனுஷ ரூபத்துல பாண்டு சட்டை போட்டுட்டு நடிக்கணும்கிறபோது அது எனக்கு உட்பட்ட ஒரு விஷயமாத் தெரிஞ்சது. அதனால செஞ்சேன். அப்படிப் பார்த்தா அதுவும் புராணப் படம்தானே. நடிக்க மாட்டேங்கறது வீம்புக்கு இல்லே. எனக்குத் தெரிஞ்சது, எனக்கு Realismனு தெரிஞ்ச விஷயங்களைச் செய்யறேன். Realism இல்லாமை அதற்குக் காரணமில்லே. என் ஞானம் இன்மைதான் காரணம்.

எஸ். வி. ரமணன்:

தெளிவான சிந்தனையோடு அடக்கத்தினாலும் அப்படிச் சொல்கிறீர்கள்.

இந்த நிகழ்ச்சியில வழக்கமான சுவையுடன் அளித்த பதில்களில் உங்கள் ஸ்பெஷாலிட்டியான நகைச்சுவையையும் அள்ளித் தெளித்தீர்கள். நன்றி.

தொகுப்பு: சிதா ரவி



யோகாசனப் பயிற்சி கேந்திரங்கள்



யோகாசனம் கற்றுக்கொள்ள யோகாசனப் பயிற்சி நிலையங்களின் விவரம் கேட்டுப் பல அன்பர்கள் கடிதங்கள் எழுதினார்கள். விவரங்களை அனுப்புமாறு யோகாசன நிலையங்களுக்கு 'கல்கி' இதழில் அறிவிப்புக் கொடுத்தோம். நமக்கு வந்த விவரங்களின் அடிப்படையில் யோகாசனப் பயிற்சி நிலையங்களின் விலாசங்கள் இங்கு தரப்படுகிறது.

1. யோகாச்சார்யா ஜெயபால்,
சிடி. கிளப், நேரு ஸ்டேடியம் எதிரில்
கோயம்புத்தூர்-18

2. இயற்கை மருத்துவச் சங்கம்,
காதி ரொமோத்யோக் பவன்,
162, என். எச். ரோடு,
கோயம்புத்தூர்-1

3. சாகேதபுரி சகுந்தலா சானடோரியம்,
இயற்கை மருத்துவமனை,
கோவைப்புதூர்.

4. பதஞ்சலி மகரிஷி யோகப் பயிற்சி
நிலையம், சன்மார்க்க சங்கம்,
தேவாங்க ஹைஸ்கூல் ரோடு,
கோயம்புத்தூர்-1

5. ஞானகுரு யோகாசன சாலை,
சாரதா கல்லூரி எதிரில்
சேலம்-4

6. மா. ராஜரத்னம்,
யோகாசனம், & இயற்கை மருத்துவம்
14, இரண்டாவது தெரு, மரவனேரி,
சேலம்-7

7. ஏ. நாச்சிமுத்து,
யோகாசன உடற்பயிற்சி நிலையம்,
37, அம்மன் கோவில் தெரு,
பள்ளிபாளையம், ஈரோடு-6

8. டாக்டர் ராஜமாணிக்கம்,
யோகாசனப் பயிற்சி நிலையம்
மகரிஷி மகேஷ்யோகி இன்ஸ்டிடியூட்,
மாரப்ப கவுண்டர் வீதி,
சூரம்பட்டி, ஈரோடு-9

9. ராஜன் யோகா சென்டர்,
தெற்கு இருப்பு,
அண்ணாமலைநகர், 608 002

10. பிரம்மச்சாரி தி. ஆ. கிருஷ்ணன்,
திருமூலர் யோகாலயா,
23, தெற்கு ரத வீதி,
திருவாவடுதுறை, தஞ்சை மாவட்டம்

11. ஏகாந்தா உடற்பயிற்சிக் கழகம்,
வேலம்புதுகுடி கிராமம்,
தரங்கம்பாடி வட்டம்.

12. லயன் அம்பாள் எம். ராமசாமி,
ஆரிமா சங்க சரஸ்வதியம்மாள்
யோகாசனப் பயிற்சிப் பள்ளி,
அம்பாள் பவனம்,
4, எஃப். எஃப். ரோடு, விருதுநகர்.

13. சிவானந்தா யோகப் பயிற்சி நிலையம்,
சுந்தரராமபுரம், தூத்துக்குடி-2

14. ஸ்ரீ வரதராஜ யோக நிலையம்,
61, வடக்கு மாட வீதி,
வீரகேரளம் புதூர்,
திருநெல்வேலி மாவட்டம்

15. சகோதயா யோகப் பயிற்சி நிலையம்,
''திருவள்ளுவர் மன்றம்''
சோமசுந்தரம் காலனி, மதுரை-16

16. ஸ்ரீமதி மீனாட்சி தேவி,
ஸ்ரீ கம்பளி ஸ்வாமி மடம்,
அனந்தா ஆஸ்ரமம்,
தட்டாஞ்சாவடி, பாண்டிச்சேரி.

17. யோகா ஆண்டியப்பன்,
சிக்கலிங்க நாயக்க கிராமம்,
திருநெல்வேலி.

18. யோகிராஜ் ஏ. ராஜமாணிக்கம்,
26, அருளானந்தநகர்,
வ. உ. சி. நகர், தஞ்சாவூர்-7

19. திரு சுப்பிரமணியன்,
23, நடேச முதலியார் தெரு,
சாயிநாதபுரம்,
வேலூர்-1, வ. ஆ. மாவட்டம்

20. தேவதாசன் யோகா இன்ஸ்டிடியூட்,
மாணிக்கம் நகர்,
மருத்துவக் கல்லூரி சாலை,
தஞ்சாவூர்.

21. யோகிராஜ் எம். எஸ். மணி அய்யர்,
சிவானந்த யோகாசிரமம்,
6, தசரதன் தெரு,
பம்மல், சென்னை-75

22. யோகபிஷக் பி. ஸ்ரீதரன்,
8-5 எஃப்., தொட்டகாசப்பா ரோடு,
அல்சூர், பெங்களூர்-8

23. விஜயலட்சுமி பிரசாத்,
வேமன யோகா ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்,
8-1-14, மார்க்கெட் தெரு,
செகந்திராபாத்.

24. யோகா பிரதர்ஹுட்,
எக்ஸ்பிரஸ் எஸ்டேட்,
அண்ணாசாலை, சென்னை-2

25. சிவானந்தா யோகாலயா,
60, மூன்றாவது மெயின் ரோடு,
காந்திநகர், அடையாறு,
சென்னை-20

26. விவேகானந்தா இளைஞர் மையம்,
38, சிங்கராச்சாரி தெரு,
சென்னை-5

27. கிருஷ்ணமாச்சாரியா யோகமந்திரம்,
103, செயின்ட்மேரீஸ் சாலை,
சென்னை-18

28. அகர்வால் வித்யாலயா,
54, ஈ. வி. கே. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை-7

29. இன்டர்நாஷனல்
யோகா இன்ஸ்டிட்யூட்,
டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை-4.

30. முத்துராமன் நினைவு
சிவானந்தா யோகப் பயிற்சி நிலையம்,
என். ஜி. எம். கல்யாண மண்டபம்,
சி. பி. இராமசாமி அய்யர் சாலை,
ஆழ்வார்ட்பேட்டை, சென்னை-18

31. எஸ். ஆர். சி. இன்ஸ்டிடியூட் ஆப்
நாச்சுரோபதி அண்ட் யோகா,
முட்டுக்காடு, 603112

32. யோகப் பயிற்சி நிலையம்,
பாரதீய வித்யாபவனம்,
கிழக்கு மாட வீதி, சென்னை-4

33. யோகாலயா சுப்பிரமணியம்,
2, முதல் தெரு, கிழக்கு அபிராமபுரம்,
சென்னை-4

34. இயற்கை நல்வாழ்வுச் சங்கம்,
சர்வோதய சங்கம், நேரு தெரு,
உடுமலைப்பேட்டை, கோயம்புத்தூர்
மாவட்டம்

35. பி. செல்வராஜ், யோகாசிரியர்,
மங்களாபுரம், சேலம்-636202.

36. யோகா சென்டர்,
15, முத்துராம் முதலித் தெரு,
மந்தவெளி, சென்னை

அடுத்து வரும் இதழ்களில் யோகாசனம் பற்றி வாசகர்களின் கேள்விகளுக்கான பதில்கள் இடம் பெறும்.

—சுப்ரபாலன்

பபன்கான் என்ற இந்தி நாடக நடிகரின் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. ஏன்? அவர் தயாரித்து நடிக்கும் ஒரு நாடகம் ('அத்ரக் கே பஞ்சே' இஞ்சியின் வேர்கள்) இதுவரை 5169 முறை மேடை யேறியிருக்கிறது. கடந்த 18 வருஷங்களாக இந்தியாவில் 64 நகரங்களிலும் வெளிநாடுகளிலும் இந்த நாடகம் நடந்து விட்டது! இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.!

அனிதா ராமச்சந்திரன்





சமீபத்தில் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்தபோது, இருக்கையில் ஒரு தமிழ் கதைப் புத்தகம் இருந்தது. யாரோ விட்டு விட்டுச் சென்றுவிட்டனர் என்று எண்ணி அதன் பக்கங்களைத் திருப்பிய போது, அதில் ஒரு சின்னப் பேப்பரில் பின்வருமாறு எழுதியிருந்தது:

''இது தொலைக்கப்பட்ட புத்தகம் அல்ல. கண்டெடுப்பவர் இந்தச் சிறந்த புத்தகத்தைப் படித்து மகிழ வேண்டும் என்ற நம்பிக்கையில் விடப்பட்டது!''

—ராஜேஸ்வரி

இசைக் கலைஞர் பற்றித் திரைப்படம்

'ஏழாவது மனிதன்' வர்த்தக ரீதியாக வெற்றி பெறவிட்டாலும் திரைப்படத் துறையில் ஒரு புதியசிந்தனையைத் தோற்றுவித்ததோடு மாஸ்கோவில் பரிசும் பெற்றதற்கு, ஒரு விதத்தில் காரணம் அதன் இயக்குநர் திரு **ஹரிஹரன்**. இவரது புதிய முயற்சி, கர்நாடக இசைத் துறையைச் சேர்ந்த பிரபல கலைஞர்களை மையமாக வைத்து பத்துப் பதினைந்து நிமிடங்கள் வரும்அளவில் டாக்குமெண்டரிப் படங்கள் தயாரிப்பது. இதன் ஆரம்பமாக, புகழ்பெற்ற வயலின் வித்வான் திரு டி. என். கிருஷ்ணன் அவர்களை வைத்து, திரைச் சித்திரம் தயாரித்திருக்கிறார்...

சினிமாத் துறையில் இருந்துகொண்டு, கர்நாடக இசைக் கலைஞர்களைப் பற்றி எப்படி படம் எடுக்கத் துணிந்ீர்கள் ஹரிஹரன்?

என் அம்மா தைலாம்பாள் கிருஷ்ணன் இங்கே அடையாறில் உள்ள கர்நாடக இசைக் கல்லூரியில்முறையாகச் சங்கீதம் பயின்றவர். திரு டி. கே. கோவிந்தராவ் சக மாணவர். சீர்காழிக்கு சீனியர். 1950ல் இந்த இசைக் கல்லூரியில் பட்டம் பெற்றவர். அதனால் கர்நாடக இசையும் அம்மா படித்த அந்தக் கல்லூரிச் சூழல் எல்லாம் என் மனசில் ஒரு பாதிப்பை ஏற்கனவே உண்டாக்கியிருந்தன. மேலும் வடக்கே உள்ள இசைக் கலைஞர்களை வைத்து ஏராளமான படங்கள் தயாரிக்கப் பட்டிருக்கின்றன. நம் கர்நாடக இசைக் கலைஞர்கள் விஷயத்தில் மட்டும் ஏனோ சிரத்தையும் அக்கறையும் காண்பிக்கப்படவே யில்லை. நம் கலைஞர்களை அறவே மறந்து விட்டார்கள் என்று சொல்லுவேன். இது ஓர் உறுத்தலாகவே இருந்தது எனக்கு.

அவர்கள் வளர்ந்த சூழ்நிலை,பாடும் முறை, மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் முறை, அவர்களது தினசரி வாழ்க்கை எல்லாம் பற்றி ஒரு டாக்குமெண்டரி கூடத் தயாரித்த தில்லை. பிலிம்ஸ் டிவிஷன் இது விஷயத்தில் அசட்டையாக இருந்து கொண்டு வந்திருக்கிறது. இந்தக் குறையை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எனது ஆசையே இந்த முயற்சிக்கு வித்து. தவிர, தயாரிப்பாளர் பாலை சண்முகம் அவர்களும் இதற்குத் தூண்டுகோல் எனலாம்.

நான் அவரை முதன் முதலாகச் சந்தித்த போது, பாரதியாரை வைத்து, அவரது பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒரு மணி நேரப் படம் ஒன்று எடுக்க வேண்டும் என்று சொன்னார். நான் ஒப்புக்கொண்டேன். பிறகு அப்படிப்பட்ட படத்தை யார் வாங்குவார்கள் என்ற கவலை எழுந்தது. ஆனாலும் பாரதியின் பாடல்களைப் படமாக்குவதில் அவர் தீவிரமாக இருந்தார். நானும்தான். பாரதியின் புரட்சி சிந்தனையையும் கருத்தையும் 'ஏழாவது மனிதன்' மூலம் வெளிப்படுத்தியது ஓரளவு திருப்தியை அளித்தது. பிறகு இசைக் கலைஞர்களைப் பற்றிப் படம் எடுக்க முனைந்தபோதும் அவர் தான் ஊக்கம் அளித்தார்.



○ ஹரிஹரன் தம்பதி



○ டி. என். கிருஷ்ணன்

திரு டி. என். கிருஷ்ணன் அவர்களை முதன் முதலாகத் தேர்ந்தெடுக்க என்ன காரணம்?

அவரது திறமையும் புகழும் மட்டும் காரணமல்ல. அவர் தமது திறனைத் தம் மாணவர்களோடு பகிர்ந்துகொள்ளும் அழகு; தமது சீடர்களுக்குப் பாடம் சொல்லித் தரும் பாங்கு — இவையும் காரணம். அவர் போதிக்க வந்தபோது எல்லோரும் அவரிடம் 'ஏன் இப்படி வயலின் ஆசிரியராக வந்தீர்கள்?' என்று கேட்டார்கள். ஆனால் அவரோ தமது முழு ஆற்றலையும் ஞானத்தையும் பிறருக்குச் சிரத்தையுடன் வழங்கும் ஆசானாக இருப்பதில் பெருமை கொண்டார். ஒரு குழுவாக இசை பயிலுவதில் க்ரூப் பர்ஃபாமென்ஸ் என்கிற இசை வழங்குவதில் அவருக்கு அசாத்திய ஆர்வம் உண்டு. இந்தியாவில் அதை அறிமுகப்படுத்தி இன்னும் பரவலாக்க வேண்டும் என்பார்.

படத்தை எப்படி எடுத்திருக்கிறீர்கள்?

இது ஒரு சிறிய வாழ்க்கைச் சித்திரம் என்றுதான் சொல்ல வேண்டும். நிகழ்கால ரசிகர்கள், வருங்கால சந்ததியினர் ஒரு கலைஞனை அறிந்துகொள்ளும் விதத்தில் ஒரு ரெக்கார்ட் ஆகவேணும் இருக்கட்டும் என்கிற எண்ணத்தில்தான் இதை எடுக்கத் துவங்கினேன்.

திரு டி. என். கிருஷ்ணனின் ஆரம்ப நாட்கள், பிறந்த இடம், அவரது பயிற்சி முறை இவைதான் படத்தின் முக்கிய அம்சங்கள். அவரது பெற்றோர் — தகப்பனார் நாராயண அய்யர், தாயார் நாராயணி அம்மாள் அவர்களுடன் உரையாடினோம். தகப்பனார், தமது மகனை இப்படி ஒரு சிறந்த கலைஞராக உருவாக்க எத்தனை அக்கறை எடுத்துக் கொண்டார் என்பது அந்தச் சுவையான உரையாடலில் வெளிப்பட்டது.

இதை என்றைக்கு ஆரம்பித்தீர்கள்?

கடந்த விஜயதசமியன்று — அக்டோபர் 16ம் தேதி.

யார் இதற்கு காமிராமேன்?

'ஏழாவது மனிதனி'ல் பணியாற்றிய அதே தர்மராஜ்தான்.

எப்படிப் படத்தை அமைத்துக் கொள்ளுகிறீர்கள்?

முதலில் விரிவான ஸ்கிரிப்ட் தயார் செய்து கொள்ளுகிறேன். பிறகு தேவையான நேரத்துக்குத் தகுந்த மாதிரி அதைச் சரிசெய்து கொண்டு விடுகிறேன். இதற்குக் கிட்டத்தட்ட இரண்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. 15000 ரூபாய் முதல் 20000 ரூபாய் வரை ஆகும். இந்தப் படத்தை டி.வியில் கொடுத்தால் முந்நூறு ரூபாய் கொடுப்பார்கள்!

வீடியோ பார்லர்கள், லைப்ரரிகள் வீதிக்கு வீதி வந்துவிட்ட இந்தக் காலத்தில் வீடியோ படமாக எடுப்பதுதான் நல்லது என்று தோன்றுகிறது. திரைப்படத்தைவிடச் செலவும் மிகக் குறைவு. இசைக் கல்லூரிகள், இசை விழாக்கள், செமினார்களின்போது இவற்றைப் பார்வையாளர்களுக்குக் காண்பிக்கலாம். இதைத் தயாரிப்பதில் தொழில் நிறுவனங்கள் முன்வந்து ஒத்துழைத்தால் வருங்காலசமுதாயத்துக்குப்பெரும் உபகாரம் செய்த மாதிரி ஆகும். NFDCயின் எடிடிங் வசதியும் இங்கே இருக்கிறது. விளம்பரப் படம் போல எடுத்து ஸ்பான்ஸர் செய்யலாம்.

அடுத்த படம் யாரைப் பற்றி?

தற்போது ஷேக் சின்ன மௌலானா பற்றி ஸ்கிரிப்ட் தயார் செய்து கொண்டிருக்கிறேன். இவர் குருகுலம் மாதிரியே நடத்தி நாதசுரக் கலைஞர்களை உருவாக்குகிறார்.

★

தற்போது இண்டஸ்ட்ரியல் ஃபிலிம்கள் எடுத்து வரும் ஹரிஹரன், ''என்னுடைய முழு மனமும் கலைச் சிறப்பு மிக்க படங்கள் எடுப்பதில்தான் இருக்கிறது!'' என்கிறார்.

பேட்டி: **எஸ். விசுவநாதன்**

மழலைக் கலைஞர்



கிட்டார் வகுப்பில் சேர்த்தேன் ஆறு வயது மகன் வெங்கட்டை. இரண்டு மூன்று நாட்கள் ஒழுங்காகப் போய் வந்தான். பிறகு என்ன தோன்றியதோ தெரியவில்லை. என்னிடம்வந்து ''அம்மா நான் ஏன் கஷ்டப்பட வேண்டும்? டேப் ரிக்கார்டரை ஆன் செய்தால் போதும். ஜம்முன்னு கிடார் கேட்கலாமே'' என்றான். அவன் சொன்னதில் இருந்த உண்மையை ரசித்துச் சிரித்தோம்.

ஜி. லலிதா, சென்னை-17

நிலவே நீயும் விலகாதே

7

வீராகவன் மெலிதாய் வியர்த்திருந்தார். கையில் படபடவென்று அந்தக்காகிதம் காற்றில் சப்தித்துக் கொண்டிருந்தது. மெல்ல நிமிர்ந்து எதிரே பார்த்தார்.

குருமூர்த்தியின் பெரிய தங்கையும், அம்மாவும், அப்பாவும் இவர் முகத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். இடையில் டீப்பாயில் வைத்திருந்த காப்பி தொடப்படாமல் பழுப்பான ஆடை போர்த்திக் கொண்டு ஆறிப் போயிருந்தது. மிக்ஸரும், இனிப்பும் சீந்தப்படாமல் ஈமொய்த்துக் கொண்டிருந்தன.

''இது மொட்டைக் கடுதாசி'' என்றார், வீராகவன் மெலிதான குரலில்.

''கையெழுத்துப் போட்டிருக்குதா போடலியாங்கறது இல்லே இப்ப கேள்வி'' என்றான் சம்பந்தியம்மாள். ''எங்களுக்குத் தெரிய வேண்டியதெல்லாம் இதுதான்... இந்தக் கடிதாசில எழுதியிருக்கிறது நெஜமா இல்லியா?''

''பொய்ங்க'' என்றார் வீராகவன் எச்சிலை விழுங்கிக்கொண்டு.

''அப்ப உங்க பொண்ணுக்கு ஹார்ட் ட்ரபிள் எதுவும் இல்லேன்னு சொல்றீங்களா? அது நல்ல ஆரோக்யத்தோடதான் இருக்குதுன்னு சொல்றீங்களா?''

இந்த முறை குருமூர்த்தியின் தங்கை கேட்டாள்.

''மொதல்ல காப்பி சாப்பிடுங்க ஆறிப் போவுது'' என்றாள் கொஞ்ச நிலைமையைச் சமாளிக்கிற சாக்கில்.

சட்டென்று திரும்பி அவளைப் பார்த்தார்கள்.

''காப்பிதானும்மா பெரிசு? இவ்வளவு பெரிய விஷயத்தை அமுக்கமா பூசணிக்காயைச் சோத்துல மறைக்கிற மாதிரி மறைச்சிருக்கீங்க. எங்களை என்ன வெவரங் கெட்டவங்கன்னு நெனைச்சுட்டீங்களா?''

''அவசரப்படாதீங்க... நான் எல்லாம் விவரமாச் சொல்றேன்'' என்றார் வீராகவன் முகத்தை டவலால் அழுந்தத் துடைத்துக்கொண்டே.

''எங்களுக்கு வேண்டாதவங்க யாரோ இந்த மொட்டைக் கடிதாசை எழுதிப் போட்டிருக்காங்க. இதிலே எழுதியிருக்கிற மாதிரி அனுராதாவுக்கு ஹார்ட் அட்டாக் கெல்லாம் வந்ததில்லீங்க. ரொம்ப சின்ன விஷயம். மூணு வயசுலே அதுக்கு அம்மை போட்டிருந்தது. அது சரியாக் கவனிக்காமல் தண்ணி வுட்டுட்டாங்க. அப்ப ஒண்ணும் தெரியலை. அப்புறம் கொஞ்ச நாள் கழிச்சுத் திடீர்னு கைகால்ல வலி வந்து நீட்டினதை மடக்க முடியாமே மடக்கினதை நீட்ட முடியாமப் போச்சு. டாக்டர் கிட்டக் காட்டினேம். இது ரொம்ப சாதாரணம். என்னமோ ருமாட்டிக் மைட்ரல் ஸ்ட்ராஸின்னாமே... அது ரொம்பச் சின்ன விஷயம்தான்... மருந்து சாப்பிட்டாச்சரியாப்டும்னு எழுதிக் கொடுத்தாரு. அப்புறம் ஒண்ணுமே யில்லே.'' என்று வீராகவன் படபடப்பாகச் சொல்லி முடித்தார். ''இப்பக் கூட எப்பவாவது ரொம்ப உணர்ச்சி வசப்பட்டா லேசா மயக்கம் வரும் அவ்வளவுதான்'' என்று மறந்து போனதைச் சேர்த்துக் கொண்ட மாதிரி கூறினார்.

''நம்பச் சொல்றீங்களா?''

''பொய் சொல்லலீங்க...'' என்றபோது வீராகவனுக்கு நாத் தழுதழுத்தது.

''எங்க பொண்ணோட லைஃப் இல்லீங்களா? அவ்வளவு பெரிய பொய்யை நாங்க சொல்ல மாட்டோம்.''

''சரி, சின்ன ப்ராப்ளமாவே இருந்துட்டுப் போகட்டும். எங்ககிட்ட ஏன் மொதல்ல சொல்லலே?''

வீராகவன் அந்தக் கண்களைச் சந்திக்க முடியாமல் தலையைக் குனிந்து கொண்டார். ''அநாவசியமாப் பயந்து போயிடுவீங்க-ன்னுதாங்க மொதல்ல சொல்லலே... அப்புறம் சொல்லிக்கலாம்னு இருந்தோம்.''

''எப்ப? கல்யாணமெல்லாம் ஆகி வியாதிக்காரப் பெண்ணை எங்க தலையில கட்டினப்புறமா?''

''ஆண்டவனே'' என்றார் வீராகவன். ''ரொம்பக் கடுமையாப் பேசறீங்கம்மா... உங்க திருப்திக்கு நீங்க வேணும்னு உங்களுக்குப் பிரியமான டாக்டர் கிட்டே அழைச்சிட்டுப் போய்க் காட்டுங்க. அவர் என்ன சொல்றார் பாருங்க.''

''தேவையில்லே'' என்றாள் சம்பந்தியம்மாள் எழுந்து கொண்டே.



• சுபா

''அப்படியாவது உங்க பொண்ணைத்தான் என் பையனுக்குக் கட்டி வைக்கணுங்கற அளவுக்கு நாங்க போக்கத்துப் போயிடலே. விஷயத்தைக் கேட்டதிலேர்ந்து அவருக்கு கைகால்லாம் ஒதறஆரம்பிச்சிடிச்க.. மொதல் மொதல்ல மூத்த பையனுக்குக் கல்யாணத்தை முடிக்கறோம். அதிலே இப்படியான்னு ஆடிப் போயிட்டாரு. ஆரம்பத்திலேயே இவ்வளவு மறைக்கிறீங்களே பின்னால என்னென்ன விஷயம் வெளியில வருமோ... வேணாங்க... உங்கசம்பந்தமேஎங்களுக்குவேணாம். நீங்க வாங்க போகலாம்! வா கோமதி போலாம்.''

அத்தனை பேரும் திடுக்கிட்டுப் பார்த்துக்கொண்டிருக்க மூன்று பேரும் விருட் விருட் என்று நடந்து போய்ச்செருப்பை மாட்டிக் கொண்டார்கள். கௌரி தாங்காமல் குப்பென்று கண்ணீர் பொங்க விம்ம ஆரம்பித்தாள். வீராகவன் எழுந்து தளர்ந்த நடையுடன் தண்ணீர் எடுக்க ஃபிரிட்ஜை நாடினார்.

இத்தனையையும் மௌனமாக உள்ளேயிருந்து பார்த்துக் கொண்டிருந்த அனுசூயாவின் கண்களிலும் நீர் துளிர்த்திருந்தது.

'இந்தக் கல்யாணம் என்கிற துக்கத்திலிருந்து விடுதலையே கிடையாதா?'

பாலாவின் கண்கள் சிவந்திருந்தன. கண்ணீரை அடக்க முயன்றதில் தொண்டை உப்புக் கரித்தது.

பிரேமாவின் கல்யாணமும் சாயங்கால ரிசப்ஷனும் அதிக பிரச்னை இல்லாமல் எல்லோருக்கும் திருப்தியாய் நடந்துமுடிந்து விட்டதில் கிடைக்கக் கூடிய அந்தச் சின்ன பெருமிதம் மட்டுமே நெஞ்சில் நிரவியிருந்தது. மற்றபடி தாக்குகிற துக்கம் மட்டும் விலகாமல் முறைத்தது.

அனுசூயா இப்படி ஏமாற்றுவாள் என்று பொட்டளவு கூட எதிர்பார்த்திருக்கவில்லை.

'செப்டம்பர் மாதம் பதினஞ்சாந் தேதி கல்யாணம் வச்சாச்சு. நீ சும்மா வந்து போனாக் கூட ஊர்ல யாராவது தப்பாப் பேசுவாங்க. தயவு செஞ்சு இனிமே என் பொண்ணை வந்து பாக்கணும்னு நெனைக்காதப்பா.'

அப்புறம் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?

காத்திருப்பதால் மனத்தை ஏமாற்றிக் கொள்ள முடியுமா என்ன? அதுவும் எத்தனை நாளைக்கு?

இயலாமை ஆத்திரமாய்ச்சட்டை மாற்றிக் கொண்டது.

'போடி.... நீ இல்லேன்னு இன்னொருத்தி.. எங்கால்ல வுளுந்து தவம் பண்ணுன்னு வுழுவா போடி.....' என்று மனத்தில் கத்தினான். அப்பாவைத் தேடினான். குணசேகர மாமாவோட உட்கார்ந்து கணக்கைச் சரிபார்த்துக் கொண்டிருந்தார். இந்த இடத்திலிருந்தே ''அப்பா'' என்று இரைந்தான்.

அப்பா திடுக்கிட்டுப் போய் நிமிர்ந்தார். சட்டென்று எழுந்தார். ''என்ன பாலா?'' என்று கேட்டுக் கொண்டே பரபரப்பாய் வந்தார்.

''உடனே எனக்கு ஒரு பொண்ணு பாருங்கப்பா... நான் கல்யாணம் பண்ணிக்க ரெடி'' என்று மண்டபத்தில் சுற்றியிருந்தவர்களுக்குக் கேட்கும் வண்ணம் இரைந்தான் பாலா.

மேனேஜரின் ஃபோன் அடித்தது.

மானேஜர் எடுத்துவிட்டு ''பாலா'' என்றார் உரக்க. ஃபோனைப் பெற்று ''ஹலோ பாலா'' என்றான்.

''நாந்தான்பாலா..ரொம்ப ஸாரி பாலா''

''ஒரு 'ஸாரி'லே நீ எல்லாத்தையும் மறந்துடுன்னு சொல்றியா அனு?''

''நான் நடுவுல ரெண்டு மூணு தடவை உங்க ஆஃபிஸுக்குப் போன் பண்ணேன் பாலா... நீங்க லீவுல இருக்கறதாச் சொன்னாங்க... உங்க வீட்டுக்கு ஒரு தடவை வந்தேன். நீங்க எல்லாரும் பொண்ணு மாப்பிள்ளையைத் திருத்தணிக்குக் கொண்டு விடறதுக்குப் போயிருக்கீங்கன்னு பின் வீட்ல சொன்னாங்க... என்னிக்கு ஆஃபீஸ் ஜாயின் பண்ணீங்க பாலா?''

''இப்பத்தான்... இன்னும் வேலையைக் கூட ஆரம்பிக்கலே... நீ என்னதான் சமாதானம் சொன்னாலும் எனக்கு மனசு ஒத்துக்காது அனு... கல்யாணத்துக்கு வராதாச் சத்தியம் பண்ணிட்டு பத்து நாள் கழிச்சு யார் வீட்டுக் கல்யாணத்தையோ விசாரிக்கிறது மாதிரி கேட்கிறயே...!''

''என் நெலமை தெரிஞ்சா நீங்க இப்படியெல்லாம் பேச மாட்டீங்க. கல்யாணம் நின்னு போச்சு பாலா.''

பளிரென்று உடலில் ஒரு பிரவாகம் ஓடிற்று. இதயத்தில் குத்தியிருந்த முள் ஒன்றை யாரோ பறித்து எறிந்த மாதிரி இருந்தது பாலாவுக்கு.

''அனு என்ன சொல்ற அனு?''

''சாயங்காலம் எல்லாத்தையும் சொல்றேன் பாலா.''

''இப்பவே வேணும்னாலும் வரேன் அனு. இன்னும் நான் கையெழுத்துப் போடல... லீவை அப்படியே இன்னொரு நாளைக்குச் சேத்துப் போட்டுக்கலாம்... சொல்லு எங்க பாக்கலாம்?''

''மியூஸத்தில பாக்கலாமா பாலா?''

''இன்னும் அரை மணி நேரத்தில அங்கே வரேன் அனு.''

பாலா ஆவலோடு மியூசியத்தில் அனுசூயாவைத் தேடினான். ஒரு உயரமான அசோக மரத்தின் குட்டையான நிழலுக்குப் பக்கத்தில் அனுசூயா நின்றிருந்தாள். கிட்டத்தட்ட இருபது நாட்களாய் பார்க்காததில் புதிதாய் ஒரு வேற்று முகத்தைப் பார்க்கிற மாதிரி இருந்தது பாலாவுக்கு.

''ஏன் அனு... எல்லாரும் வந்து பார்த்து மனசெல்லாம் நெறைஞ்சு போய்த்தான் ஒத்துக்கிட்டாங்க... இப்ப என்னவாம்?''

''எல்லாம் மெதுவாச் சொல்றேன் பாலா. எனக்குப் பசிக்குது. எங்கயாவது போய் [illegible]ட்டாச் சாப்பிட்டுக்கிட்டே பேசலாமா?''

''இங்க பக்கத்தில ஹோட்டல் இருக்குவா...''

மறுபடியும் அவனுடன் நெருங்கி நடக்கும்போது அவள் உடலில் இலேசாக உராயும்போது இழந்த சொர்க்கத்தை அடைந்த மாதிரி உணர்ந்தான்.

அந்த மதிய நேரத்தில் ஹோட்டலில் குளிர்பதன அறையின் ஈசான்ய மூலையில் ஒரு ஜோடி உட்கார்ந்திருந்தது. கையில் கோலா பாட்டிலுடன் சூன்யத்தைவெறித்துக்கொண்டிருந்தது.

''கல்யாணமெல்லாம் நல்லபடியா நடந்துதா?''

''ம்... நீ வருவே, வருவேன்னு ஒவ்வொரு செகண்டும் ஒன்னை எதிர்பார்த்திட்டிருந்தேன் அனு... கோலம் போடறேன், ஜடை பின்றேன், பிச்சாடை வெச்சிவுடறேன்னு நிமிஷத்துக்கு நூறு சத்தியம் பண்ணிக் குடுத்துட்டு கடைசி வரைக்கும் ஒன் காத்துக் கூட இந்தப் பக்கம் வரலே... அன்னிக்கு ராத்திரில்லாம் நான் தூங்கவேயில்ல தெரியுமா? சரி ஒன்னைப் பாத்தாக் கடிச்சிக் கொதறணும்போல ஒரு வெறி. ச்சே, நாம்ப இருந்தா என்ன? செத்தா என்னான்னு தோணிடிச்சி அனு.''


பூஸ்ட் துள்ளித்திரியும் பள்ளிப் பருவத்திற்கு நாள்தோறும் ஈடுகொடுப்பது
உங்கள் மகன் அருந்தும் காலைக் கோப்பை பாலுடன் கலந்துக் கொடுங்கள் சக்தியளிக்கும் பூஸ்ட், நாள்தோறும், காலை தோறும்.
பிறகு பாருங்களேன்! நாள் முழுவதும் அவனே ஒரு அதிவேக ரயில் வண்டி தான்!
காலை ஸ்கூலில் ஆரம்பித்த நேரங்கள், தொடர்ந்து உருண்டு புரண்டு களித்திடும் கால் பந்தாட்டம், பிறகு முழு கவனத்துடன் முடிக்கப்படும் வீட்டுப் பாடங்கள் வரை ...
இதற்கென்றே பூஸ்டின் சக்தி.
உங்கள் மகன் துடிப்புடன், களிப்புடன் ஒவ்வொரு நாளையும் கழிக்க உதவுகிறது.
காலை முதல் இரவு வரை.
பூஸ்ட் புது ஆடைப்பால், பொன்னிற கோதுமை, மால்டெட் பார்லி மற்றும் சுவையான கோக்கோவை ஒருங்கே சேர்த்து, உங்கள் குழந்தைக்குதேவையான சக்தியளிக்கும் கார்போ–ஹைட்ரேட்டுகளையும், திடமான உடற்கட்டிற்கு ப்ரோடீன்களையும் அளிக்கிறது.
Boost
துடிதுடிப்புடனும், ஊக்கத்துடனும் விளங்க சக்தியளிக்கும் எரிபொருள்.
8342

''அப்படில்லாம் பேசாதீங்க பாலா... நீங்க கல்யாணம் பண்ணிட்டு சந்தோஷமா யிருக்கணும்... அப்பதான் நான் ஒங்களை ஏமாத்தலேங்கற மாதிரி இருக்கும்...''

சோம்பேறித்தனமாய் எதிரில் வந்து நின்ற சர்வரைப் பார்த்தான் பாலா.

''என்ன அனு சொல்லட்டும்?''

''கட்லெட... அ ப் பு ற ந் தோசை... ரெண்டு பேருக்கும்'' என்றாள் அனுசூயா சர்வரைப் பார்த்து.

''எதுக்காகக் கல்யாணம் நின்னு போச்சி?''

''எனக்கு ஹார்ட்ல ட்ரபிள் இருக்கறது அவுங்களுக்குத் தெரிஞ்சி போச்சி பாலா...''

''எப்படி?''

''யாரோ அனுமத்து ஆள் போல ஒரு லெட்டர் எழுதிப் போட்டிருக்காங்க...''

''என்னன்னு?''

''நான் வியாதிக்காரப் பொண்ணு... ஏற்கெனவே ஹார்ட் அட்டாக் வந்திருக்குன்னு இல்லாததையும் பொல்லாததையும் எழுதியிருக்காங்க... லெட்டரைப் பாத்ததிலேர்ந்து பையனோட அப்பாவுக்கு ஒடம்புக்கு முடியாமப் போச்சாம்... ஊர்லேர்ந்து மறுநாளே கௌம்பி வந்துட்டாங்க... இது சின்ன விஷயம்னு அப்பா எவ்வளவோ சொன்னாரு கேக்கலே. எப்ப இந்த மாதிரி லெட்டர் வந்துதோ அப்பவே நாங்க முடிவு பண்ணிட்டோம். நீயும் வேணாம் ஒன் சம்பந்தமும் வேணாம்னு கத்திட்டுப் போய்ட்டாங்க... அம்மாவும் சரி அப்பாவும் சரி ஆடிப் போய்ட்டாங்க...''

''யாரு எழுதியிருப்பாங்க அனு?''

''எங்க பெரியம்மா வூட்டு வேலையா இருக்குமோன்னு எனக்குப் படுது. அவுங்க வீட்ல எனக்கு மேல வளர்ந்த பொண்ணு ஒண்ணு இருக்குதாம். அதுக்கு ஆவாம, எனக்கு ஆவுதேன்னு அவுங்களுக்குக் தோணி இருக்கும். சரி இதைக் கலைச்சி வுட்டாப் பையன் அந்தப் பக்கம் சாய்வானேன்னு அப்படி செஞ்சிருப்பாங்க...''

''சரி, நான் இப்ப ஒண்ணு சொல்றேன் கேக்கறியா?''

''என்ன?'' அந்தக் கடைசி 'ன' மட்டும் ஒரு ராகத்தோடு இழுபட்டு வந்தது. பழைய அனுசூயாவை மறுபடி பார்த்த திருப்தி இப்போது தான் வந்தது பாலாவுக்கு.

''ஒனக்கு இனிமே கல்யாணம் ஆவுமான்னு ஒங்க வீட்லே மறுபடியும் ஜாதகத்தைத் தூக்கிக்கின்னு நாடி ஜோசியன், கைரேகைக்காரன், குறி சொல்றவன்னு ஒங்க அம்மா ஒவ்வொரு எடமாச் சுத்திவரப் போறாங்க... அப்படில்லாம் ஒண்ணும் சுத்த வேணாம். இதோ நான் இருக்கேன். இதும் ஹார்ட் டிரபிள் பத்தி எனக்கு நல்லாவே தெரியும். இந்த அனுக் குட்டியை நான் பூ மாதிரி வச்சுக் காப்பாத்தறேன்னு கேட்டுப் பாக்கறேன்.''

''முடியாதுன்னிட்டாங்கன்னு?''

''சொல்ல மாட்டாங்கடா ராஜாத்தி.''

''ஒங்க வீட்ல எதுவும் சொல்ல மாட்டாங்களா பாலா?'' என்று கேட்டான் அனு காப்பிக் கோப்பையைக் கீழே வைத்தபடி.

''அப்பாவுக்கு வூட்ல வெளக்கேத்த ஒரு பொண்ணு வேணும். நான் வேறெ ஜாதிப் பொண்ணைக் கல்யாணம் செய்துக்கிட்டா என்ன செய்வீங்கப்பான்னு கேட்பேன்! கைமீறிப் போயிட்டா என்ன செய்வது? போனாப் போகுதுன்னு வுட்டுடுவேன்னு எங்கிட்டயே அப்பா சொல்லியிருக்காருடா.''

''சரி... எப்ப வரீங்க?'' என்று கேட்டாள் அனுசூயா எழுந்து கொண்டே.

''ஒங்கூட இப்பவே வேணும்னாலும் வரேன்.''

''அப்பா ஊர்ல இல்லே. வைத்தீஸ்வரன் கோயில் பக்கத்தில் யாரோ ஒரு நாடி ஜோசியனைப் பார்க்கப் போயிருக்காரு... அதனால தான் அம்மாவைக் கோக்ஸ் பண்ணிட்டு என்னால வெளியே வர முடிஞ்சது. ஞாயித்துக் கிழமை காலேலதான் திரும்பி வருவாரு. அன்னிக்கு வாங்க.'' இங்கேயே வுட்டுட்டு ஆபீஸுக்குப் போங்க. ஒரு மணி நேரம் பர்மிஷன்னு சொல்லிட்டு வேலையைப் பாருங்க.''

''ஒங்கூட பஸ்ல ஒக்காந்து வரணும் போல ஆசையா இருக்குடா...''

''இன்னிக்கு வேணாம் பாலா... அப்புறம் இந்த அஞ்சி நாளைக்கு ஃபோனெல்லாம் வரும்னு நெனைக்கக் கூடாது. அப்புறம் வரலேன்னு கோவிச்சுக்கக் கூடாது.''

''போதும் கண்டிஷன். அட்லீஸ்ட ஒரு ப்ளெய்ன் கிஸ்ஸாவது குடுத்துட்டுப் போடா.''

''ப்ச்'' என்று உதட்டைச் சுளித்துக் காண்பித்து விட்டு நின்றிருந்த பஸ்ஸில் ஏறி உட்கார்ந்து, அவனுக்குக் கையை நீட்டி ஆட்டிக் காண்பித்தான் அனுசூயா.

(தொடரும்)

மழலைக் கலைஞர்



ரொம்ப ஆர்வமாகப் பாட்டுக் கத்துக்கொண்டிருந்தான் குழந்தை என்று எங்களுக்கு ஒரே மகிழ்ச்சி. எப்போதும் அவன் சின்னக் குரலில் ஸரிகம ஒலித்துக் கொண்டிருக்கும். எங்கள் வீட்டில் அவனுக்கு நல்ல காய்ச்சல் கண்டபோது டாக்டர் பாட வேண்டாம், ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும் என்று சொல்லி விட்டார். அதன் படியே அவனை அமைதியாக வைத்துக் கொள்ள முயன்றோம். ஒரு நாள் இரவு ஒரு மணி அளவில் வராந்தாவிலிருந்து 'ஸரிகம' எங்களுக்குத் தெரிந்தால் கோபிப்போம் என்று இருட்டிற்கும் பயப்படாமல் வராந்தாவில் உட்கார்ந்து பாடிக் கொண்டிருந்தான் குழந்தை!

—பி. ராஜாராம், வேலூர்

''தரத்தோடு விலையையும்
எம் மாதிரி நோட்டம்
பார்த்து வாங்குங்க,
கெட்டிக்காரி நீங்கதான்''



"நியூட்ரமுல் தான் என் கைராசி!"

''கண்ணை மூடிக்கிட்டு முடிவு பண்றவ நான் இல்லே. கண்முழிப்பா கவனிக்கறவளுக்குக் கிடைக்குது சகாய விலையிலே தரமான பண்டம்-- இதோ எனக்கு நியூட்ரமுல். ISI தரம் இருந்தாகணும், இருக்கா பார்ப்பேன். நியூட்ரமுல் ஒண்ணுக்குத் தானே அது இருக்கு, வேறெந்த கோக்கோ மால்ட் பானத்துக்கும் கிடையாதே. அதுவும், குடும்ப மனசுப்போல வாங்கக் குடுத்து வெச்சவ நான், எங்க வீட்டுலே கண்டிப்பா நியூட்ரமுல் தான் வேணும்''.

''விளம்பரக் கதைகள் எல்லாம் என் கண்ணுலே மண்ணைத் தூவும்படி விடமாட்டேன். எதையுமே நான் நேரிலே பார்த்துத்தான் வாங்குவேன்''.

நியூட்ரமுல்	ரூ. 14.70
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

செப்' 84 விலைப்படி, 500 கி. [illegible]



''**கோபி** மனோஹஅஅஅர.... அஅஅ அஅஅ....'' என்று ஹாலில் திடீரென்று ஒரு மென்மையான சாரீரம் ஜி. என். பி. பாணியில் ராகம் இழுக்கும் சத்தம். தொடர்ந்து ''யாதா சமேதா கிஷ்ணு...'' என்று மூன்று வயது கோபி கைகொட்டியவாறு குதிக்கும் சத்தம்.

சமையலறையிலிருந்தவாறே அவளுக்கு யார் வந்திருப்பது என்று தெரிந்துவிட்டது. தியாகு!

அவள் ஹாலுக்கு வந்தபோது ''ரகுபதி ராகவ''வை டலுஸ்கர் பாணியில் தியாகு நிரவல் செய்ய, அதே பாணியில் கோபி மாமாவுடன் சுருதி சேர்ந்தும் சேராமலும் கூடக் கூட இழுத்துக் கொண்டிருந்தான்.

''ரகுபதி ராஅஅஅஅ கவ ராஅஅஜா அஅஅஅராஅஅம்.''

''ரகுபதி ராஅஅ கவராஅஅஅ ஜா அஅஅஅராஅஅம்''

''பதித பாஅஅ வன ஸீஈஈஈஈதாராம்''

''.....ஸீஈஈதாராம்....''

''பேஷ்! பயலுக்கு ராக ஞானம் இருக்கு. அப்படியே நான் பாடற மாதிரியே திருப்பிப் பாடறானே!'' என்று தியாகு அவனை மலர்ச்சியுடன் பார்த்தான். ''போனதடவை வந்திருந்தபோது நான் ராதா ஸமேதா பாடினதை அப்படியே நினைவு வச்சுண்டு நான் கோபி மனோகரன்னவுடனேயே இவன் ராதா சமேதாங்கறான்.''

''யாருடைய மருமான்?''

''அபசாரம்! அபசாரம்!'' என்று தியாகு கன்னத்தில் போட்டுக் கொண்டான். ''யாருடைய கொள்ளுப் பேரன் என்று சொல்லு... டேய்! உன் கொள்ளுத் தாத்தா யாரு தெரியுமாடா நோக்கு?''

கோபி அம்மாவையும் மாமாவையும் மாறி மாறிப் பார்த்தான். கொள்ளுத் தாத்தாவா! அப்படியென்றால்? என்றுகேட்கும் பார்வை.

''என்னக்கா இது. நம் முன்னோர் சிறப்பையெல்லாம் இவனுக்கு நீ சொல்லலியா? தாத்தா வீட்டுத் திண்ணையிலே வேதாந்த பாகவதர் போன்ற வித்வான்கள் வந்து உட்கார்ந்து நாள்கணக்கிலே ஒரு ராகத்திலே நீச்சலடிச்சுண்டு கரையேற முடியாமல் தவிப்பாளாமே. அந்த விமரிசையையெல்லாம்?''

''இவனுக்கு இப்போ வேறே வகை ஹீரோக்கள் தேவை.''

''ஸூப்பர்மான்'' என்றான் மேஜை மேல் கிடந்த காமிக்ஸைப் பார்த்தவாறு தியாகு.

''வீட்டிலே எல்லோரும் சௌக்கியம் தானே?''

''அப்பாவுடைய ஆர்த்ரீடிஸூம் அம்மாவின் ஆஸ்துமாவும் சௌக்கியம்.''

''பாவம் அம்மா! தினம் சுவாமிக்கு இரண்டு அருட்பாவோ, திருப்புகழோ கூடப் பாட முடியாமல் உடம்பு படுத்தறதாக எழுதியிருந்தாள்.''

''பாட்டாவது! மூச்சு விடறதே அல்லவா பெரும் பாடாக இருக்கு! இந்த பங்களூர் படுத்தும் பாடு.''

''ஆஸ்துமாக்காரனுக்குஅங்கே ஒத்துக்காதாமே?''

''ஆஸ்துமா இல்லாதவனுக்குக் கூட அங்கே ஆஸ்துமா வந்து விடும்.''

''உன் டிரான்ஸ்ஃபர் என்ன ஆச்சு?''

''அதைப் பற்றியும்தான் விசாரிக்கணும்னு வந்திருக்கேன்.''



சாபம்

ஆதவன்

''ஆனால் முக்கியமா கச்சேரி கேட்கிறதுக்கு?''


''உம்... எங்கே, தியாகுவைக் காணோமேன்னு வித்துவான்கள் தேடமாட்டாளா?''

''வேதாந்த பாகவதருடைய பிரதம ரசிகர் பரம்பரையைச் சேர்ந்த உனக்கு இந்த 'சென்லே' கச்சேரி கேட்கிற அஞ்ஞானம் எதுக்காக? நல்ல காஸெட்டுகள் எவ்வளவோ இருக்கு... இருக்கிற இடத்திலேயே சங்கீதக் கடலிலே குளிக்கிறதை விட்டுட்டு....''

''இப்படிச் சொல்றவாளுக்குத்தான் 'புராண மித்யேவ ந ஸாது ஸர்வம்'னு காளிதாஸன் பதில் சொல்லியிருக்கான். காஸெட் அந்தஸ்து ஏற்படாத புதியவாளை எனக்குக் கேட்கணும். எங்கேயாவது 'ஸ்பார்க்' இருக்கா, புதுத் திருப்பம் ஏதாவது இருக்கான்னு தேடணும்....''

''பெரிய கிரிடிக் மாதிரி எண்ணமாக்கும்.''

''ஐயையோ! அவர்களெல்லாம் கர்விகள்னு! எனக்கு அரளிகாளோடு புரண்ட இலேயும், மோசமான சங்கீதம் கேட்கிற இலேயும் கூட ஒரு ஆனந்தம்.... ஒரு மிஸ்டிக் ஃபீலிங்... பாபிகளைப் பார்த்து பரிவும்



அனுதாபமும் பெருகிப் போகிற வள்ளலார் மாதிரி, ராமகிருஷ்ண பரமஹம்ஸர் மாதிரி.. மாயாமய ஹ்ருத்தாபம் த்யஜரே...மானஸ'' பாடிக்கொண்டே அவன் குளிக்கப் போய் விட்டான்.

'இல்லை; உனக்குக் கர்வம்தான்' என்று மீண்டும் சமையலறைக்குள் நுழைந்த விசாலம் நினைத்துக் கொண்டாள். பாட்டும் ஒரு பெருமை. சங்கீத ரசனையும் ஒரு பெருமை. பாத்ரூமிலிருந்து மிதந்து வருகிற அவன் பாட்டுச் சத்தம் ஒரு பக்கம் கேட்கச் சந்தோஷமாகவும் இருக்கிறது. அவளையுமறியாமல் அவள் வாயும் அந்த ராகத்தை முனகத் தொடங்குகிறது. அவளுடைய பிறந்த வீட்டில் எல்லோருக்குமே இந்த முனகல் பழக்கம் உண்டு, பாட்டு முனகல். கணவன் வீட்டில் ரேடியோவும், டேப் ரிகார்டரும் பாடுமே தவிர, மனிதர்கள் பாடுவதில்லை. 'குகம்பு பிடித்தவர்கள்' என்று அவளுடைய அம்மா சொல்லுவாள். அதாவது சகஜமாக இருக்கப் பயப்படுகிறவர்கள். படுக்கையில் கூட அவளுடைய கணவனிடம் ஒரு விறைப்புத்தான். அவன் ஆதார சுருதி ஒரு பயம், ஒரு உறுதியின்மை. பிள்ளைகளுக்கும் அப்பாவுக்குமிடையே, தயக்கம், தூரம். மாமனுக்கும் மாமியாருக்குமிடையே தூரம். எனவே மாமியாருக்கும் மருமகளுக்கும் இடையே தூரம். பாடாவிட்டால் போகிறது இவர்கள் சிரிக்கவாவது கூடாதா? ஆனால் இரண்டும் தொடர்புடையன போலும். அவளுடைய வீட்டில் பாட்டும் சிரிப்பும் கூச்சலுமாய் ஒரே மெலோட்ராமாவாக இருக்கும். ஆனால் இங்கே கணவன் வீட்டில் 'ஆர்ட் ஃபிலிம்' சூழ்நிலை. மூச்சு முட்டுகிறது; அவள் அடிக்கடி பழைய மெலோட்ராமாவுக்காக ஏங்குகிறாள்....

ஆனந்தபைரவியை முனகியவாறு பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட அவளுடைய முனகலை இடைமறித்து, ''காலையிலேயே மெயில்லே வருவேன்னு நினைச்சேன். இப்போ ஏது டிரெயின்?'' என்று அவள் கேட்டதும் மெலோட்ராமா தொடங்கி விட்டது.

''அரவிகான்தான் மெயில்லே வருவா... என்னவோ பொழுது விடிஞ்சு பொழுது சாயறவரைக்கும் இவா ரொம்ப உபயோகமான காரியம் பண்றாப்லே, ஒரு நாள் அந்தக் காரியங்கள் செய்யா விட்டால் மனித குலத்துக்கே நஷ்டம்கிற மாதிரி, பயணம் தூக்கத்திலே கழிஞ்சுட்டால் லாபம்னு ராத்

திரி ரயில்லே வருவா... ஐயையே! எனக்கு என்னைப் பற்றி அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம். இல்லே; நான் என்றென்றைக்கும் ஆறு வயசுப் பையன். எனக்கு பகல் ரயிலிலே அதுவும் ஒவ்வொரு ஸ்டேஷன்லேயும் நிக்கற ரயிலிலே வரணும். இட்டிலி, போண்டா, சாத்துக்குடி, பீடி, சிகரெட், பீப்பீப்பீ ஊதல், பத்திரிகைகள், இதை யெல்லாம் வித்துண்டு போறவங்களைப் பார்க்கணும். பிளாட்பாரத்திலே பெரிய ஸூட்கேஸ்கள், ஹோல்டால்களோடு உட்கார்ந்திருக்கிறவாளை, பிளாட்பாரம் தாண்டினால் ஸூட்கேஸுக்கு அவசியமில்லாமல் வேப்பங் குச்சியை வாயில் கடிச்சுண்டு குடிசை வாசல்களிலே உட்கார்ந்திருக்கிறவாளை, மாடுமேய்க்கிறவாளை, கலப்பை உழுறவாளை, ரயில் சத்தம் கேட்டு மிரண்டு ஓடற பன்னிகள், எருமைகள், கோழிகள், ரயிலோடு சைக்கிள்ளே ரேஸ் விடுகிற அம்பிகள் — எல்லாரையும் எனக்குப் பார்க்கணும். அப்புறம் ரயில்லேயே எத்தனை விதமான மூஞ்சிகள், அந்த மூஞ்சிகளுக்குப் பின்னாலே எத்தனை விதமான அபிப்பிராயங்கள்! என் கம்பார்ட்மெண்டிலே என்னை மாதிரியே இவ்வொருத்தர் — பங்களூரிலிருந்துமெட்ராஸுக்கு சங்கீத சீஸனுக்காக வருகிறவர் — இருந்தார். அவர் பேச்செல்லாம் கேட்டால் ஏதோ ரேஸுக்குப் போகிறவர் மாதிரி இருந்தது.''

''ரேஸுக்கா?''

''ஆமாம். ரேஸுக்குப் போகிறவர்கள் ஒவ்வொரு குதிரைக்கும் அது எந்தக் குதிரையோட குட்டி, அதனோட ட்ரெயினர் யார், ஜாக்கி யார், சொந்தக்காரர் யார், மற்ற இடங்களில் அது எப்படி ஓடியது போன்ற விவரங்களை யெல்லாம் ஒப்பிச்சு வச்சிருப்பார்கள். அது போலவே இவருக்கும் எந்த வித்துவான் யாருடைய சிஷ்யர், எந்த ஊர்க்காரர், அவர் குடும்பத்திலே வேறே யார் யார் வித்துவான்கள், எனவே எத்தெந்தப் பாணிகளுக்கு அவர் வாரிசு எல்லாம் அத்துப்படி. இவருக்கு ஜி. என். பி. பாணி பிடிக்காதாம். எனவே யாராவது ஜி.என். பி.யின் குடும்பத்திலே பெண் எடுத்திருந்தால்கூட அவருடைய கச்சேரியை இவர் கேட்க மாட்டாராம். 'ஏன் ஓய், ஜி. என். பி.க்கு என்ன குறைச்சல்?'னேன். உடனே வாய்ஸ் கல்சரைப் பத்தி ஒரு பெரிய லெக்சர் தொடங்கிவிட்டார்.''

''உன் அத்திம்பேரும் நேத்திக்கு இதையே தான் சொல்லிண்டிருந்தார்.''

''இரண்டு பேருமே ஏதாவது ஒரு ஆங்கிலப் பத்திரிகையிலே வந்த கட்டுரையைப் படிச்சுட்டுப் பேசியிருப்பாளோ என்னவோ! இந்த ரயில் மாமா இந்துஸ்தானிப் பாடகர்களுடைய குரல் பயிற்சியை ரொம்ப சிலாகிச்சு, அவர்களுடைய குரல்கள் வெவ்வேறு ஸ்தாயிகளிலே நளினமாக சஞ்சாரம் பண்ணியும், சங்கதிகளைக் கம்பீரமாகவும் கார்வையாகவும் நதியோட்டம் போலப் புரளச் செய்தும் உண்டாக்குகிற புல்லரிப்பை நம் வித்வான்களாலே உருவாக்க முடிகிறதான்னு கேட்டார். குரலை அதிகமாக உயர்த்தாமல் இருப்பதுதான் நல்ல சங்கீதம் என்கிற பிரமையை உருவாக்கின ஜி. என். பி.யாலேதான் நம்ம சங்கீதமே குட்டிச்சுவராப்போச்சு அப்படீன்னு ஆர்க்யூ பண்ணினார்.''

''அதுக்கு நீ என்ன சொன்னே?''

''நான் விடுவேனா? 'ஏன்யா, குரலை உயர்த்திப் பாடுறதுதான் பாட்டுன்னு அந்தக் காலத்திலே நாடக மேடையிலே ஹார்மோனிய சுருதிக்குச் சரியா தலைவெடிக்கக் கத்தினவனெல்லாம் சிறந்த பாடகனய்யா?'ன்னு கேட்டு மடக்கினேன்.''

''பலே! ஆசாமிக்கு அசடு வழிஞ்சிருக்குமே!''

''என்னென்னமோ சொல்லிச் சப்பைக் கட்டு கட்டப் பார்த்தார்.... ஓய்! ஒவ்வொரு சங்கீதத்தையும் அவனுடைய காலப் பின்னணியிலே பார்க்கணும்னு ஒரே போடாப் போட்டேன். சங்கீதம்னா ஏதோ அசுர பலம் தேவைப்படுகிற கடினமான தேகாப்யாசம் மாதிரி நினைக்கப்பட்ட காலத்திலே சின்ன வண்டு மாதிரி ரீங்காரமிட்டால் போதுமென்னு வழி காட்டினவர் ஜி. என். பி. இது பிடிக்கிறதும் பிடிக்காததும் அவாவா டேஸ்ட்டைப் பொறுத்தது...''

''சின்ன வண்டு மாதிரி... பேஷ்! இந்தப் படிமம் நன்றாயிருக்கு.''

தியாகு வெளியில் போயிருந்தபோது 'சின்ன வண்டு மாதிரி' என்ற பதத்தைப் பல்லவியாக்கி, மனம் நிரவல் செய்யத் தொடங்கியது. அவளால் ஏன் தன் கலையின் ரீங்காரத்துடன் இயல்பாக — சின்ன வண்டு போல — இருக்க முடியாமல் போயிற்று? இந்த ரீங்காரம் ஒரு பகட்டாக, அகந்தையாக அவளுடைய கணவனுக்குப் படுவானேன்? இது அவனுள் தாழ்வுணர்ச்சியை விதைத்து, அவர்களிடையே அபஸ்வரங்களை எழுப்புவானேன்?

ஒரு கட்டத்துக்குப் பிறகு வண்டு பறப்பதையே நிறுத்திவிட்டது....

மழலைக் கலைஞர்

மேடை ஏறிப் பாடினால் ஆயிரம் ஆயிரமாகச் சம்பாதிக்கலாம் என்று ஆர்வத்தை வளர்ப்பதற்காக எப்போதோ சொல்லி வைத்திருந்தேன் என் மகளிடம். ஒரு நாள் சமையல் மேடை மேல் ஏறி நின்று கொண்டு சின்ன கீதம் ஒன்று பாடிவிட்டு 'எங்கே ஆயிரம் ரூபாய்' என்று கை நீட்டினாள்.

—என்.கே. வெங்கடேஷ், பம்பாய்-89



ஏழு மணிக்கு அவளுடைய கணவன் வந்தான். பீம்ஸேன் ஜோஷியை ஸ்டீரியோவில் ஏற்றி, விஸ்கி பாட்டில், ஐஸ் துண்டங்கள் சகிதம் அதை ரசிக்க உட்கார்ந்துவிட்டான். இதுவும் அவளை அவமதிக்கத்தான். 'நீயும் உன் சங்கீதமும்! இதோ, இதுன்னு பாட்டு... இந்த மாதிரிப் பாடேன், பார்ப்போம்!' என்று கொக்கரிப்பது போல.

பீம்ஸேன் ஜோஷி முடியும் தருவாயில் தியாகு வந்தான். ''இது எவ்வளவு நாளா?'' என்று சமையலறைக்கு வந்து அவளிடம் ரகசியமாகக் கேட்டான்.

''எது? விஸ்கியா, இந்துஸ்தானி சங்கீதமா?''

''இரண்டும்தான்.''

''இதெல்லாம் அவருடைய ஆபீஸ் அலுப்புக்கு மாறுதல்... எனக்கு மட்டும் இதே காரியங்களைப் பண்ணிப் பண்ணி அலுக்கக் கூடாது. நான் பொம்பளைதானே? ஆனா அவர் பாவம், ராஜா மாதிரி இருக்க வேண்டியவர். இந்த பாங்கிலே மாட்டிண்டு...''

''ஐ வாண்ட் டு ஃபர்கெட் தீஸ் ஃபிகர்ஸ், ஐ வாண்ட் டு கெட் அவுட்!'' என்று சாப்பாட்டின்போது கோபியின் அப்பா தன் நிலையை விளக்கினார். ''கணக்கு, கணக்கு, கணக்கு.... நம்ம வாழ்க்கை கூட ஒரு கணக்குத்தான்! (சிரிப்பு)இந்துஸ்தானி இசையிலேதான் எனக்கு ஒரு எஸ்கேப் கிடைக்கிறதுப்பா... சமுத்திரத்திலே நீச்சலடிக்கிற மாதிரி... அஃப்கோர்ஸ், நான் உங்களை மாதிரி சங்கீதப் புலியெல்லாம் இல்லே. பட் எனக்கென்னவோ இந்த கர்னாடிக் மியூசிக்கிலே கணக்குப் போடறவா அதிகமாயிருக்காப்லே இருக்கு... வாய்ப்பாடு ஒப்பிக்கிற மாதிரி ஸாகித்தியங்களைத் தாளத்துக்கேத்த மாதிரி — யூ நோ வாட் ஐ மீன்?''

''ராத்திரி மெயில் மாதிரின்னு சொல்லவரேள்.?''

''ராத்திரி மெயிலா?''

''ஆமாம் ராத்திரி ரயில்லே போனா லொடக் லொடக்னு தாளச் சத்தம் மட்டும்தான் வரும். காட்சிகள் எதுவும் தெரியாது.''

படீரென வெடித்த சிரிப்பில் கோபியின் அப்பாவுக்குப் புரையேறிக் கொண்டது. அந்தச் சிரிப்பு அவனுள் ஊசியாகக் குத்தியது.

கணவனும் குழந்தைகளும் தூங்கிவிட்டனர். அவளும் தம்பியும் மட்டும் ஹாலில் உட்கார்ந்திருந்தனர்.

''உன் பாட்டெல்லாம் எப்படி இருக்கு?'' என்று அவன் கேட்டான்.

''சரஸ்வதி பூஜை அன்னிக்கு மட்டும் பாடறேன்.''

''சரியாப் போச்சு போ. இத்தனை வருஷம் பாட்டுச் சொல்லிண்டு....''

''நான் என்ன பீம்ஸேன் ஜோஷியா தினம் பாடறதுக்கு? மேலும்...''

''உம்... சொல்லு.''

''வேதாந்த பாகவதர் தாத்தா வீட்டுத் திண்ணையிலே பாடினபோது பாட்டி என்னவோ அடுக்களையிலே அடுப்பை ஊதிண்டு தானே இருந்திருப்பாள், இல்லையா?''

மௌனம்; பிறகு—

''யாமினி பாட்டுக் கத்துக்கறாளா?''

''ஊஹூம். ஸ்போர்ட்ஸ், பி. டி.யிலெயெல்லாம் கலந்துக்கறா. பெண்களுக்குத் தேக ஆரோக்கியம்தான் முக்கியம்கிறது அவ அப்பா கட்சி. பெண்களுக்கு சங்கீதம், ஆண்களுக்குத் தேகப் பயிற்சின்னு கோடு போட்டது ஒரு இடைக்காலப் பைத்தியக்காரத்தனம்னு ஆர்க்யூ பண்ணுவார்...''

''மறுபடி, உனக்குப் பழிப்புக் காட்டறதுக்காக?''

''அவாத்திலே அவருக்குப் பாட்டுச் சொல்லிக்கொடுக்காத கோவமாகவும் இருக்கலாம்''

திடீரென்று தியாகுவிடமிருந்து இருமல் வெடித்தது. கபம் திரும்புகிற இருமல்; போய்த் துப்பிவிட்டு வந்தான்.

''என்னடா இது இப்படி இருமுகிறது உனக்கு? சாயங்காலமும் இருமிண்டிருந்தே?''

கையால் மேலும் கீழும் மூச்சிழுப்பது போல ஜாடை காட்டினான் அவன்.

''ஆஸ்துமாவா? உனக்குமா?''

''எனக்குமான்னு? வேதாந்த பாகவதருடைய சிநேகிதர் பேரனுக்கு அவருடைய எல்லாச் சொத்துக்களும் பத்திரமா வந்து சேர வேண்டாமா? சங்கீதம், ஆஸ்துமா, எல்லாம்தான் வரும்.''

''ஏதோ சாபம் போலிருக்குடா நமக்கு— கைக்கெட்டினது வாய்க்கு எட்ட முடியாத சாபம்.''

''எனக்கும் அதான் தோணறது... சகுந்தலை தன்னையுமறியாமல் துர்வாசரை அவமதிச்சதைப் போல நாம யாரை அவமதிச்சோமோன்னு தெரியாமல் — அரனிசாளிடம் கூட நான் பணிவாகவும் சிநேகமாகவும் இருந்துண்டு வரேன். அவாளையும் சிரிக்க வச்சுண்டு வரேன்.... இதுவும் ஒரு அதிகப்பிரசங்கித்தனம்னு அம்பிகை நினைக்கிறாளோ என்னவோ! அம்பிகே, என்னைக் காப்பாத்து! என் குறும்பையெல்லாம் எடுத்துக்கோ!... மீனலோசனி பாச மோசனி மானினி....'' பாடிக்கொண்டிருந்தபோதே மறுபடி அடுக்கடுக்காக இருமல் வந்து அவன் பாட்டைப் பறித்தது.

மழலைக் கலைஞர்



நிவேதிகா முதல் முறையாக மேடை ஏறியது பள்ளி நடன நிகழ்ச்சியில். நான்கு வயதுக் குழந்தையின் கன்னங்கள் வீங்கிப் போயிருந்ததைக் கண்டு துணுக்குற்றேன். பிறகு தான் தெரிந்தது அவள் தண்ணீர் குடித்துக் கொண்டிருந்தபோது மணி அடித்துவிடவே வாயில் தண்ணீருடனேயே மேடைக்கு வந்துவிட்டாள். அப்படியே நடனமாடி முடித்துவிட்டு வெளியேறினாள். விரைவில் நிவேதிதாவின் அரங்கேற்றம் நடக்கப் போகிறது.

விஜயா தியாகராஜன், கும்பகோணம்.



அபிநயக் கச்சேரி

ஜே.எஸ்.ராகவன்

சாண்டில்யன் கதைக்குப் படம் போட உட்கார்ந்த ஜெயராஜின் பரவசத்துடன் என்னைப் பார்த்துச் சங்கீத வித்வான் புன்னகை செய்தார்.

புன்னகை மெல்ல உறைந்தது. 'இந்த மாதிரிப் படத்தையா ரகசியமாப் பார்த்து ரசிக்கறே? படுவா!' என்று செல்லமாகக் கண்டிக்கும் பாவனையில் அவரது கை ஓங்கி, பின்னர் இறங்கியது.

அடுத்தசில நொடிகளில், கண்களில் லேசாக ஈரம்' திரையிட, மோட்டு வளையைப் பார்த்து. குழந்தைகள் தினத்தன்று நேருமாமா இரண்டு கைகளையும் உற்சாகமாக உயர்த்தி வெள்ளைப் புறாவைப் பறக்க விடுவதைப் போல் செய்து காட்டினார்.

புறா விட்ட பின் காத்தாடி விட ஆரம்பித்தார். படு குஷியுடன், ஜாம்பஜார் பகுதியில், ஆடிக் காற்றில் பாணுக்காத்தாடி விடும் மோச்க மாதிரி, மாஞ்சா குளித்த நூலை லாகவமாக இப்படியும் அப்படியும் இழுத்து, டீல் போட ஆரம்பித்தார்.

அதுவும் கொஞ்ச நேரத்துக்குத்தான். பின்னர் 'மூட்' மாறி, சாப்பாடு விஷயத்தில் அவரது கவனம் திரும்பியது. திங்கட் கிழமைக் காலை ஒற்றைத் தலைவலியுடன் லேட்டாக எழுந்த இல்லத்தரசி அலுப்புடன் குக்கரை ஸ்டவ் மேல் வைப்பது போல் நடித்துக் காட்டினார். அடுத்த கணமே ஊறவைத்த அரிசியையும் உளுந்தையும் கல்லுரலில் விழுதாக ஒட்ட. ஒட்ட அரைத்தார். அது போதாதென்று சட்டென்று கடப்பாக் கல்லில் நாலைந்து சப்பாத்திகள் இட்டார். வலது பக்கம் குமுட்டி அடுப்பில் கொதித்துக் கொண்டிருந்த கூட்டுப் பாத்திரத்தை அவ்வப்போது கிளறி விட்டுக் கொண்டார்.

அடுத்தது சாதம் ஊட்டும் படலம். நெய், பருப்பு போட்டு, குழைவாகக் கிண்ணத்தில் பிசைந்த சாதத்தை, தெளிவான

ரசத்தை விட்டு, குழந்தைக்கு இரண்டு வாய் ஊட்டிய பின், 'அடமா பிடிக்கிறே போக்கிரி' என்று பந்தநல்லூர் பாணியில் இரண்டு சாத்தினார். எதேச்சையாகக் கையைப் பார்த்துக்கொண்டபோது திடுக்கிட்டார். 'இதேது, இமர்னு கட்டி கிளம்பியிருக்கு' என்கிற பாவனையில் அதைப் பார்த்து நடிகை சுஜாதா பாணியில் மௌனமாக விம்ம ஆரம்பித்தார்.

அழுகையின் தீவிரம் முடிந்தவுடன், கையைக் கைவிட்டுவிட்டு, கடவாய்ப் பல்லுக்குத் தாவினார். 'நல்ல பனம் சாமி' என்று ஏமாற்றி நார் மட்டும் உள்ள பழத்தைக் கொடுத்த பழக்காரனைத் திட்டிக்கொண்டு, இடது பக்கம் தலையைச் சாய்த்து, நாக்கு நுனியில் லாவகமாகப் பல்லிடுக்கில் சிக்கிக்கொண்ட துளியூண்டு நாரை எடுப்பது போல் தத்ரூபமாய்ச் செய்து காட்டிய கையோடு, தலையை வலது பக்கம் சாய்த்து, கண்களை மோன நிலையில் மூடி, 'இலவச காது சிகிச்சை முகாமில் சொட்டு மருந்து விட்டுக் கொண்ட பேஷண்டைப் போல் சில கணம் காட்சியளித்தார்.

திடீரென்று புஸ்தி மீசையுள்ள டிராபிக் கான்ஸ்டபிளாக மாறி, சற்று நேரத்தில் எம். ஜி. ஆர். காரை அந்த ரூட்டில் எதிர்பார்க்கும் சுறுசுறுப்புடன் கைகளைப் பயங்கரமாக ஆட்டி முடித்தவர், சோடா குடித்துக் கொண்டே ட்யூப் லைட்டுக்காக வரும் பூச்சிகளை எலெக்ஷன் பேச்சாளர் விரட்டுவதைச் செய்து காட்டினார்.

பின்னர் சற்று சாந்தம் அடைந்து, தேசபிதா மகாத்மா காந்தி நினைவு நாளன்று தக்கர் பாபா வித்யாலயா மாணவர்கள் பக்தி சிரத்தையுடன் ராட்டையில் நூல் நூற்பதை மௌனமாக நடித்துக் காட்டிய பின் சிரம் தாழ்த்தி அண்ணலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

ஆனால் இந்த அமைதியான சூழ்நிலை கொஞ்ச நேரத்துக்குத்தான். 'நான் தீவிரவாதி ஸார்' என்கிற பாவனையில், ஐந்தாவது டிகிரி பிளாக் பெல்ட் கராடேகா, சோகன் யமாகுச்சி முன்னால் பயிற்சி செய்வது போல் அட்டகாசமாகக் கைகளை வீசிக் காட்டிவிட்டு, சம்பந்தமே இல்லாமல், கல்யாண சீர் பட்சணத்துக்காக, சமையற்காரர் லட்டு பிடிப்பதைச் செய்து காண்பிக்க ஆரம்பித்தார்.

இந்த நேரத்தில் 'சார்' என்ற குரல் கேட்டது. 'பாருடி, இந்த வடை எப்படி ஊசிப்போயிருக்கு' என்று மனைவியைக் கணவன் கடிந்துகொள்ளும் காட்சியை அபிநயம் பிடித்துக் கொண்டிருந்த பாகவதரை அப்படியே விட்டு விட்டுத் தலையைத் திருப்பினேன். அப்பாடா! மெக்கானிக் வந்தாச்சு.

''என்ன சார், ரொம்ப தமாஷா இருக்கா?'' என்றார் பெட்டியைத் திறந்து கொண்டே.

''ஆமா, ஆமா. சட்னு பாருங்க. டி.வி. யிலே படம்தான் வரது. சௌண்ட் வரலே'' என்றேன்.

வேஷம்

சரஸ்வதி பஞ்சு

தன் கணவன் நடித்த நாடகத்தைப் பார்க்க வந்த லதாவுக்கு என்னவோபோல் இருந்தது. இந்த நடிப்பைப் பார்க்கத்தானா அவள் தன் சிநேகிதிகளுடன் வந்தாள் அவ்வளவு ஆவலுடன்.

அவர்களின் முணு முணுப்புகள், கேலிப் பேச்சுக்கள்... லதாவுக்கு அவமானமாக இருந்தது.

காலையிலிருந்தே ராகவன் — லதாவின் கணவன் பரபரத்துக் கொண்டிருந்தான்.

''இதோ பார் லதா! நான் மதியம் வீட்டுக்கு சாப்பிட வரமாட்டேன். அதனால் நீ உன் சிநேகிதிகளுடன் சாயந்திரம் அஞ்சு மணிக்கே வந்துவிடு. முன் வரிசையில் நாலு சீட்டு ரிசர்வ் செய்து வச்சுடறேன், என்ன?''

லதாவும் ஆசையுடன் போனாள். அங்கே அவள் கணவன் போட்டிருந்த வேஷத்தையும் நடித்த நடிப்பையும் பார்க்கவும்தான் அவளால் தாள முடியவில்லை.

''சே! எவ்வளவு மட்டமான மனிதர் இவர்? என்னையே அவமானப்படுத்துவதைப் போல'' என்று லதாவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

நாடகம் முடிந்து வீட்டுக்கு வரும்போது அவளுக்கு மூட் அவுட்டாகி இருந்தது.

இரவு மணி பத்துக்கு மேல் ராகவன் வந்தான். தன் மனைவி சோர்ந்து படுத்திருப்பதைக் கண்டதும் திடுக்கிட்டான்.

''என்ன லதா... ஏன் வாடிப் போயிருக்கிறாய்? நாடகம் ஒரே போரோ?'' என்றான்.

''நாடகம் நல்லாத்தான் இருந்தது ஆனால் நீங்க போட்ட வேஷமும் நடிப்பும்தான் எனக்கு அறவே பிடிக்கல்லே.''

''நல்லாச் சொன்னே போ. இந்த வேஷத்தை வாங்க நான் எவ்வளவு போராடினேன் தெரியுமா? கஷ்டப்பட்டு அந்த மெயின் ரோலைச் செய்தேன். ஆடியன்ஸ் அப்படி கைதட்டினதை நீ பார்க்கலையா?''

''என்ன மெயின் ரோல் போங்க. அதுக்குப் பதில் ஆபீஸ் பியூனாவோ, மானேஜராவோ வில்லனாவோ நடிச்சிருந்தால் கூட நான் சந்தோஷப்பட்டிருப்பேன்.''

''ஏன், ஏன், ஏன் அப்படிச் சொல்றே?''

''பின்னே என்னவாம்? இங்கே வீட்டில் தான் எனக்குப் பயந்து நீங்க. நான் சொல்றபடி செய்யறீங்க. துணி துவைக்கிறது முதல் மாவு ஆட்டுறது வரை. அதே போல் ஆபீஸ் நாடகத்தில் கூடவா மனைவிக்குப் பயந்த கணவன் வேஷம் போட்டு நடிக்கணும்? என்சிநேகிதிகள் எல்லோரும் உங்கபேரைச் சொல்லி, அவருக்கு வீட்டிலே நல்ல அநுபவம். அதான் மேடையில் அனாயாசமாக நடிக்கிறார்னு சொன்னப்போ எனக்கு எப்படி அவமானமாக இருந்தது தெரியுமா?''

ஸ்தம்பித்துப் போய் நின்றான் ராகவன்.





1



2

இவர்களைத் தெரிகிறதா?

கலை விமர்சகர் என். ஆர். பூவராகன் அவர்களின் ஐம்பதாண்டுப் புகைப்படத் தொகுப்பிலிருந்து கிடைத்த சில அபூர்வ புகைப்படங்கள் இவை.... இவர்கள் யார் என்பது தெரியாவிட்டால் புரட்டுங்கள் 37ம் பக்கம்.

3



4



5



6





''என்னங்க சபாவுக்கு மிலிட்டரி சோல்ஜர்கள் காவலுக்கு நிக்கறாங்க!''

''யாரோ சுரீந்தர் சிங் மோர்சிங் வாசிக்கிறார் அதனாலே இருக்கும்!''



''போன கச்சேரி செஞ்சு இந்தக் கோலத்துலே இருக்கேன்! நான் நேரிலே வந்து பாடலே... தயவு செஞ்சு என் கச்சேரியை வீடியோ எடுத்துப் போட்டுக் காமிச்சிடுங்க!''



''என்ன வித்வான் இப்படி அபஸ்வரமாப் பாடறார்?''

''பாவம், அவர் என்ன செய்வார்? அபஸ்வரமாகப் பாடறது அவருக்கே தெரியாதே... அவர் காது செவிடாச்சே!''



''இந்தாங்க சார்! பாலு பாகவதர் பாடிய காஸட், பதினைஞ்சு ரூபா வித்தது அஞ்சு ரூபா... எடு சார் எடு!''

''அந்தப்பாலு பாகவதர் நான்தாம்பா!''



''ரசிகாளுக்கு நமஸ்காரம்! கச்சேரிக்கு முன்னாலே ஒரு விண்ணப்பம்! அடியேன் ஜால்ரா சின்னத்திலே எலக்ஷனுக்கு நிக்கிறேன்! எல்லாரும் ஜால்ரா சின்னத்துக்கு வோட் போடணும்!''



20

ஒரு விநாடிக்கும் குறைச்சலாகத்தான் தயங்கி நின்றார் அனந்தசாமி. பின்னர் தன் மூலாம்பழ முகம் முழுதும் சிரிப்பு விரவி நிற்க வரவேற்றார்.

''அடேடே கிருத்திகாவா? என்னம்மா இது அதிசயமாக இருக்கு. நீ டில்லியில் இருக்கிறதாக நினைச்சுக்கிட்டிருந்தால் திடீர்னு வந்து குதிக்கிறே....?''

அவரின் முக மலர்ச்சியிலும் சிரிப்பிலும் சந்தோஷத்திலும் அவளுக்குள்ளும் லேசாய் வெளிச்சம் பரவத் தொடங்கிற்று. இந்தச் சிரிப்பும் சந்தோஷமும் தொற்று வியாதி மாதிரி என்று நினைத்துக் கொண்டாள். சுலபமாய்ப் பக்கத்தில் நிற்பவர்களுக்குப் பரவி விடும். ஆட்டோவில் வருகிறவரை — அந்த வீட்டின் வாசலில் இறங்குகிறவரை — தனக்குள் இறுகி இம்சைப்படுத்தின வருத்தமென்ன? நெஞ்சில் அடைத்துக்கொண்டு நின்ற சோகமென்ன? இதோ இவரின் சிரிப்பையும் வரவேற்பையும் பார்த்த பின்னர் இயல்பாய் விரிகிற பூ மாதிரி மலருகிற மலர்ச்சி என்ன....!

''ஆமாம் மாமா! திடீர்னு உங்களைப் பார்க்கணும்னு தோணித்து. பூர்வ ஜன்ம வாசனை இன்னும் பாக்கி இருக்க ஒரே தாவாகத் தாவி இங்கு வந்து நிற்கிறேன்....''

''நீ சொன்ன வாசனையில் எனக்கு ஒரு சந்தேகமும் இல்லையம்மா. ஆனால் முன்னால் சொன்னியே ஏதோ ஒன்று அதுதான் சந்தேகமாக இருக்கு....''

என்ன சொன்னேனும் என்பதை யோசித்துக் கேட்டாள்.

''என்ன மாமா சொன்னேன்?''

''என்னம்மா நீ... ஒரு நிமிஷத்துக்கு முன்னால் சொன்னதைக்கூட மறந்திட்டே! என்னவோ என்னைப் பார்க்கணும்னே கிளம்பி வந்த மாதிரி பேசறே...? ஆமாம் இதென்ன சூட்கேஸ்... யாருடையது... யாரையாவது தங்க வைக்கக் கூட்டிண்டு வந்திருக்கியா?''

''இப்படி வாசல் வராந்தாவிலேதான் நின்னு பேசணுமா? இல்லே உள்ளே வந்து எல்லாம் சொல்லலாமா.''

''வாம்மா... நீ எதுவும் சொல்லணும் என்கிற அவசியம்கூட இல்லே. முதல்ல உள்ளே வந்து உட்காரு. அப்புறம் பேசிக்கலாம்.''

அவர் அவளைத் தன் அறைக்கு அழைத்துப் போய் இருந்த ஒரே மர நாற்காலியில் உட்காரவைத்து, தாம் கட்டிலில் உட்கார்ந்து கொண்டார். அவள் அறையைப் பார்வையால் அளவதைக் கவனித்துக் கேட்டார்:

''என்ன மாதிரி கிழ சந்நியாசியின் அறையில் புதுசா என்ன இருக்கப் போகிறது? அதே விவேகானந்தர் படம், ஒரு மர நாற்காலி, அந்தக் காலக் கட்டில், புஸ்தகம் வைக்கிற சின்ன அலமாரி, காவித் துணியை மடித்துப் போட ஒரு டிரங்குப் பெட்டி, தவிர சம்புடத்தில் விபூதி.குங்குமம்...இதைத்தவிர வேறு என்ன இருக்கும்?''

அவரை ஆமோதிக்கிற விதமாகச் சிரித்துக் கொண்டே சொன்னாள் அவள்: ''நான் இங்கே வர ஆரம்பித்த காலத்திலிருந்து இந்த அறை இப்படியேதான் மாமா இருக்கு. கொஞ்சம் வித்தியாசமாகக் காரை பெயர்ந்திருப்பதை வேணும்னால் சொல்லலாம்.''

''ஆமாம்மா... கொஞ்சம் என்ன, நிறையவே பெயர்ந்திருக்கு. கடற்கரைப் பக்கத்தில் இருப்பதால் சீக்கிரம் அரித்துப் போகிறது. சுண்ணாம்பு அடித்துக்கூட ரொம்ப நாளாகிறது. கொஞ்சம் மராமத்து வேலைகள் ...லாம் பார்க்கணும். அதுக்கெல்லாம் பண ... மனுஷ உதவி இரண்டும் தேவைப்படறதே. ..''

''இப்போதைய நிலைமைக்குப், பின்னால் சொன்ன உதவியை என்னால் செய்ய முடியும் மாமா....''

''அது சரி. இங்க எனக்கு உதவி செய்திட்டிருந்தால் யார் பதிலுக்கு டில்லிக்குப் போவார்கள்? யார் படிப்பார்கள்? யார் பாஸாவார்கள்?''

''படிப்பதாக இருந்தால்தானே இத்தனைக்கும் பதில் சொல்ல முடியும்..?''

அவர் ஒரு விநாடி அதிர்ந்த மாதிரிப் பார்த்து, ''என்ன, என்ன சொல்றே?'' என்றார்.

''ஏன் மாமா புரியலையா?''

''ம்ஹூம். நீ வந்தது, பெரிதாய் ஒரு சூட்கேஸைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தது, இப்போ படிக்கப் போறதில்லே என்பது எதுவும் புரியலேம்மா...''

''சொல்றேன். சொல்றதுக்குத்தானே வந்திருக்கேன். ஏன் மாமா, அந்தப் பையன் முத்து இல்லே...?''

''இல்லேம்மா. எங்கேயாவது போய் முறுக்கு சுண்டல் விற்றாவது பிழைச்சுக் கோடான்னு அனுப்பிட்டேன்.''

''அப்படின்னு இப்ப யார் மெஸ்ஸைக் கவனிச்சுக்கிறது?''

''மெஸ் இருந்தால்தானே கவனிக்க?''

''என்ன சொல்றீங்க?''

''இப்போ என்னடான்னு, புரியாமல் பேசறதுக்கு....''

''நிஜமாகவே மெஸ் இல்லையா?''

''இல்லை. மூடி கிட்டத்தட்ட மூன்று மாசமாகப் போகிறது.''

''ஏன் மாமா?''

''முடியலை. கட்டுப்படியாகலை. விலை வாசியெல்லாம் ஏறிப்போச்சு. ஒவ்வொரு பருப்பும் எட்டு ரூபா விக்கறது. கடலை எண்ணெய் விலை ஏறிட்டே போறது. இந்த லட்சணத்தில மெஸ் சமையற்காரர்கள் வேறே ஸ்ட்ரைக் பண்ணிறாங்க. மெஸ் சார்ஜை ஏற்றினால் யாரும் தர மாட்டேன்றாங்க. இந்த நிலைமையில் என்ன பண்ண முடியும்? பேசாமல் மெஸ்ஸை இழுத்து மூடிட்டேன்.''

''நல்ல வேலை பண்ணினீங்க. சாப்பாட்டுக்கு என்ன செய்யறீங்க?''

''ஓட்டல்தான்...''

''இங்கே ஏது மாமா நல்ல ஓட்டல்?''

''அடையாறு போய்த்தான் சாப்பிடணும். இல்லேன்னா வாங்கிண்டு வரணும்.''

''வேளா வேளைக்கு அங்கே போய் யார் சாப்பிடறது?''

''நான் போறதில்லேம்மா. காரியரில் வந்துடறது.''

''யார் வாங்கிக்கொண்டு வராங்க?''

''இங்கே சாயிராம்னு ஒரு பையன் தங்கிண்டிருக்கான். அவன் போய் வாங்கிக் கொண்டு வருவான். இல்லையென்றால் சொல்லிவிட்டுப் போனால் ஹோட்டல் முதலாளியே அனுப்பி விடுவார்.''

''காபி கூட அனுப்புவாரா?''


''ம்ஹூம். காப்பி இங்கேயே போட்டுக்கிறது....''

''இப்போ போட்டாகி விட்டதா?''

''ஏன், உனக்கு வேணுமா?''

''அதைப் புரிஞ்சுக்க இத்தனை நேரமாச்சா உங்களுக்கு?''

இந்துமதி



''நான்தான் மக்காச்சே... உலக நடப்பு எங்கிருந்து புரியும்? இரு காப்பி கலந்து கொண்டு வரேன்.''

''நான் கலக்கிறேன். நீங்கள் பாலும் சர்க்கரையும் எடுத்துக் கொடுங்க.''

பின்கட்டிலிருந்த சமையலறைக்குப்போய் அவர் எடுத்துக்கொடுத்த சர்க்கரை, பால் பாத்திரம் இவற்றோடு இன்ஸ்டண்ட் காபி பவுடரைப் பார்த்ததும் கிருத்திகாவின் முகம் இயல்பாய்ச் சுருங்கிற்று.

''இந்தக் காப்பிதானா? பில்டர் காப்பி இல்லையா?''

''ம்ஹூம். அந்த ருசியெல்லாம் நான் பார்க்கிறதில்லே.''

''நான் பார்ப்பேனே?''

''நீ என்னம்மா என்றைக்கோ ஒரு நாள் தானே வருகிறாய்? தினமும் இங்கேயா இருக்கப் போகிறாய்?''

காபி கலந்து டபராவில் விட்டு ஆற்றி அவரிடம் ஒரு டம்ளரைக் கொடுத்துத்தானும் எடுத்துக்கொண்டே சொன்னாள்:

''தினமும் இருக்கலாம்னுதான் வந்திருக்கேன்.''

அவர் சட்டென்று காப்பி குடிப்பதை நிறுத்திவிட்டு அவளைப் பார்த்தார்.

''என்னம்மா சொல்றே? நீ ஏன் இங்கே இருக்கணும்?''

''இதைவிடப் பாதுகாப்பான, அன்பான, துணையான இடம் வேறு எங்கே இருக்கிறது எனக்கு?''

''ஏம்மா, அம்மா, அந்த வீடு எல்லாம்?''

''இருக்கு மாமா... ஆனால் வயிற்றில் பிறந்த காரணத்தினால் மட்டுமே அம்மா வாகிவிடுவாளா?''

''என்னம்மா சொல்றே?''



அருள்வாக்கு

ரஸத்தோடு ஹாஸ்ய ரஸனையோடு கூடியதாகக் குரு பரம்பரைக் கதை உண்டு. ராமானுஜரின் சிஷ்யர்களில் ஒருத்தர். அவர் ஒரு நாள் உள்ளே ஆசார்யருக்காகப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். வாசலில் ஸ்ரீரங்க நாதர் ஊர்வலம் வந்தது. ''தர்சனம் பண்ண வா வா'' என்று ராமானுஜாசாரியார் வாசலிலிருந்து சிஷ்யரைக் கூப்பிட்டுக் கொண்டே இருந்தார். ஆனால் சிஷ்யர் போகாமல் பாலையே கவனித்துக் கொண்டிருந்தார். ஸ்வாமி அந்த இடத்தைத் தாண்டிப் போய் விட்டது. ராமானுஜர் உள்ளே வந்து, ''வாசலிலேயே பெருமாள் ஸேவை ஸாதிக்கிறபோது ஸேவிக்காமல் நீ இப்படிப் பண்ணலாமா?'' என்று கோபித்துக்கொண்டாரா. அதற்கு சிஷ்யர் ''உங்கள் பெருமாளை நீங்கள் ஸேவித்தது சரிதான்! அது நீங்கள் பண்ண வேண்டியதுதான். ஆனால் அதற்காக நான் என் பெருமானுக்குப் பண்ணும் பால் ஸேவையை ஏன் பாதியில் விட்டு விட்டு வரணும்?'' என்று கேட்டாராம்.

குருவுக்காக எந்தக் கஷ்டத்தையும் ஸந்தோஷத்தோடு பொறுத்துக்கொள்கிற அளவுக்கு பக்தியானது சக்தி தந்திருக்கிறது. க்ஷத்திரியர்களைத் துவேஷித்த பரசுராமரிடம் பிராம்மண வேஷம் போட்டுக் கொண்டு வந்து வில் வித்தை கற்றுக்கொண்ட கர்ணனை ஒரு நாள் இவன் மடியில் அவர் தலை வைத்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும்போது ஒரு வண்டு கொட்டித் தீர்த்து விட்டது. அசைந்து கொடுத்து அதை விரட்டினால் குருவின் நித்திரைக்குப் பங்கம் வந்து விடுமே என்று கர்ணன் ஆடாமல் அசையாமல் அத்தனை கொட்டுதலையும் சகித்துக் கொண்டான் என்ற கதை கேட்டிருப்பீர்கள். அப்புறம் அந்தக் கதை வேறு விதமாகப் போய்விடுகிறது.

குருவை எந்த வித்யைக்காக ஆச்ரயித்தானோஅந்த வித்யையையேசிஷ்யன் அப்பியசிக்க முடியாதபடி ரொம்பக் கடுமையாக, கொடுமையாக குருவான வர் தக்ஷிணை கேட்டபோது தயங்காமல் கொடுத்த ஏகலைவன் கதையையும் இன்றுவரைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆழ்வார்களில் மதுரகவி என்ற ஒருத்தர். அவர் பாடினது (பதினொரு பாசுரங்கள் கொண்ட)ஒரே ஒரு பாடல்தான். அதுவும்மகாவிஷ்ணுவைப்பற்றியதில்லை. ஆனாலும் அதை நாலாயிர திவ்யப்பிரபந்தத்திலே சேர்த்து, மதுர கவியையும் ஓர் ஆழ்வாராக உயர்த்தி வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் அவருடைய குரு பக்தி விசேஷத்துக்காகத்தான்!

- ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய சுவாமிகள்

''காப்பி குடிச்சுட்டு வாங்க ரூமுக்குப் போய் எல்லாம் சொல்றேன்!''

அவர் ஒரே மிடறில் காபியை விழுங்கி விட்டு அவளுடன் மீண்டும் அறைக்கு வந்தார். பழையபடி கட்டிலில் உட்கார்ந்து முகத்தில் ஒரு வேதனை படர ''ம்.... சொல்லும்மா..'' என்றார். ''எப்போ டில்லியிலிருந்து வந்தே?''

''நேற்று சாயந்திரம்.''

''எதுல வந்தே?''

''விமானத்தில்.''

''விமானத்திலா? அவ்வளவு அவசரமாக வரும்படி என்ன நடந்தது?''

''அவசரம்தான். அப்போது மட்டுமில்லை. இப்போதும் அவசரமாகத்தான் ஓடி வந்திருக்கிறேன். அம்மா வருவதற்குள் வரணும்னு வந்திருக்கிறேன்.''

''அம்மா எங்கே போயிருக்கிறாள்?''

''மகாபலிபுரத்துக்கு.''

அவர் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை. கிருத்திகாவே எல்லாவற்றையும் சொன்னாள். அம்மாவின் நடத்தை விஷ்ணு பிரசாத் பற்றின விவரம், அவனிடமிருந்த புகைப்படங்கள், அவன் வீட்டை விட்டுத் தான் தப்பி வந்தது, அவன் பின்னால் அடியாட்களை வைத்துத் துரத்தியது, அதற்குப் பயந்து தான் விமானம் பிடித்து சென்னை வந்தால் அம்மா அதே விஷ்ணு பிரசாதுடன் மகாபலிபுரம் போயிருப்பது... அர்ஜுன் பற்றின விஷயத்தைத் தவிர வேறு எதையும் மறைக்கவில்லை. சொல்லி விட்டுத் தாங்க முடியாதவளாக முகத்தை மூடிக்கொண்டு அழுதாள்.

விடைகள் :

1. ''இதோ டான்ஸ் ஆடத் தயார்'' என்பது போல் நிற்கும் சிறுமி வைஜயந்தி மாலா. அவருக்குப் பின்னால் அரியக்குடி. வலது பக்கம் வசுந்தரா தேவி, யதுகிரியம்மாள்.

2. கைகட்டி மரியாதையாகவும் அதே நேரத்தில் கம்பீரமாகவும் நிற்பவர் அரியக்குடி. அமர்ந்திருப்பவர் தகப்பனார், ஜோசியம் திருவேங்கடம் ஐயங்கார்.

புகைப்படம் உதவி: ரங்கப்பா

3. உங்கள் ஊகம் சரி, புளூட் மாலியே தான்!

4. இவர்களைத் தெரியாமல் போகாதே. ஆமாம், ஜெயம்மாவும் பாலசரஸ்வதியும் தான். இசைக் கச்சேரி செய்யத் தயார் நிலையில்.

5. கடுக்கன் அணிந்து, கண் மூடி இசையில் லயித்துள்ள இந்த இளைஞர் சாட்சாத் லால்குடியேதான்.

6. இந்தச் சிறுவன் யார் என்று யோசிக்கிறீர்களா? பாலமுரளியைத் தெரியவில்லை?



மழலைக் கலைஞர்

என் பேத்திக்கு நாலு வயதிலிருந்தே நாட்டியம் சொல்லித் தருகிறோம். ஒரு நாள் அவள் ஆடும்போது கழுத்தை நன்றாக அசைத்து அட்டமி போடு என்று அவள் தாத்தா சொல்ல, ''கழுத்தில் அழகான நெக்லஸ் இருந்தாத்தானே ஆட்ட முடியும்'' என்றாளே பார்க்கலாம்!

—பத்மா பத்மநாபன், சென்னை-90

''முன்பெல்லாம் நீங்க வாசல் வராந்தாவை விட்டு உள்ளே வர மறுப்பீர்களே, அதற்கு அர்த்தம் எனக்கு இப்போதான் புரிகிறது. எனக்கு அந்த வீடு, அம்மா யாரையும் பிடிக்கவில்லை. அவளை அம்மா என்று சொல்லிக்கொள்ளப் பிடிக்கவில்லை. அவள் வாழ்ந்த அதே வாழ்க்கை வாழப் பிடிக்கவில்லை; வேறு எங்கேயும் போகப் பிடிக்கவில்லை. அதனால் இங்கே வந்துவிட்டேன். என்னைப் போகச் சொல்லாதீர்கள் மாமா. திருப்பி அம்மாவிடம் அனுப்பிவிடாதீர்கள். நான் இங்கேயே இருக்கிறேன். உங்களுக்கு வேண்டிய அத்தனை உதவிகளையும் செய்கிறேன். ஒரு வேலை கிடைத்துவிட்டால் அப்புறம் தங்குகிற செலவு சாப்பாட்டுச் செலவு எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறேன். அதுவரை என்னை இங்கே இலவசமாகத் தங்க அனுமதியுங்கள் மாமா...''

அவர் எழுந்தது அவளருகில் வந்து கையை விலக்கி ஒரு தகப்பனார் ஸ்தானத்தில் கண்களைத் துடைத்தார்.

''என்ன பேசறே நீ... இது உன் இடம். உன் இடத்தில் நீ தங்க யார் அனுமதிக்கிறது. அதனால் உன் மனசுக்குப் பிடிக்கிறவரை நீ இங்கேயே தங்கிக் கொள்ளலாம். குழந்தை மாதிரி இலவசம் அது இதுன்னு பேசாமல் பழைய கிருத்திகாவாக கம்பீரமாக நடந்துகொள். ... எழுந்திரு. உள்ளே கொஞ்சம் தண்ணீர் இருக்கு. குளிச்சு உடை மாற்றிக் கொண்டு வா. போய் பணம்பருக்கு சொல்லிட்டு வரலாம். மோட்டார் வேலை செய்தால்தான் சாயந்திரமாவது தண்ணீர் கிடைக்கும்.... ம்... எழுந்திரு.''

அவள் மதிப்பும் மரியாதையும் பிரியமுமாய் அவரைப் பார்த்துக் குழந்தையாய்ச் சிரித்துவிட்டு எழுந்து குளிக்கப் போனாள்.

(தொடரும்)



முதல்வர் உதவிக்கு

✖ ''ரசிக்கும்படியாய்ப் பாடுவதே தெரிவிக்கிற நன்றிதான்''

நான்கு வருடங்களுக்கு முன் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று பாலக்காடு மணி அய்யர் அவர்கள், ''இனி நான் கச்சேரிகளில் மிருதங்கம் வாசிக்கப் போவதில்லை!'' என்று அறிவித்தார். பல ரசிகர்களுக்கு அதிர்ச்சியும் ஏமாற்றமும் அளித்தது இந்த அறிவிப்பு. இதற்குப் பிறகு, சுவாமி சங்கரதாஸ் கலையரங்கில் மணி அய்யர் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசினார்:

''பாலக்காடு மணி அய்யர் அவர்கள் இனி கச்சேரிகளில் மிருதங்கம் வாசிக்க மாட்டேன் என்று சமீபத்தில் அறிவித்தது ஏராளமான ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இவரைப் போன்ற மேதைகளெல்லாம் தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருக்க வேண்டும். இவரது வாசிப்பை இனி வரும் சமுதாயத்தினரும் கேட்டு மகிழத்தக்க விதத்தில் பதிவு செய்து வைக்க வேண்டும்.... அவரது தீர்மானத்தில் பிடிவாதமாக இல்லாமல் ஒரு ரசிகன் என்ற முறையில் நான் பணிவுடன் அவருக்கு விடுக்கும் வேண்டுகோளை ஏற்று, விரைவிலேயே தமது கருத்தை மாற்றிக் கொண்டு, மீண்டும் மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன்!''

அதே 1980ல் அக்டோபர் 13ம் தேதியன்று, கொச்சியில் கேரள ஃபைன் ஆர்ட்ஸில் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் புல்லாங்குழல் கச்சேரியில் மிருதங்கம் வாசித்தார் மணி அய்யர். ''என்னுடைய விருப்பத்துக்கும் தீர்மானத்துக்கும் மாறாக நான் மறுபடி மேடையேறக் காரணம் தங்கள் அன்பும் அபிமானமும்தான். உங்களுடைய என்கிறபோது தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களது வேண்டுகோளையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்!'' என்றார் மணி அய்யர் அந்தத் திரளான ரசிகர் கூட்டத்தில், குறிப்பாக.

முதல்வருக்குக் கர்நாடக இசை மீது மட்டுமல்ல, இசைக் கலைஞர்கள் மீதும் அளவற்ற மதிப்பும், மரியாதையும், பரிவும் பாசமும் உண்டு என்பதை இசைத் துறையைச் சேர்ந்தவர்கள் சிலர் தெரிவித்தார்கள்.

''நாப்பத்தஞ்சு வருஷமா தெரியும்'

மகாராஜபுரம் சந்தானம்: இந்த வருடம், தமிழக அரசுக் கலைஞராக என்னை நியமனம் செய்தபோது அவருக்கு எப்படியாவது என் நன்றியைத் தெரிவிக்க வேண்டும் என்று முயற்சிகள் செய்தேன். நல்ல வேளையாக, 'தலைமைச் செயலகத்தில் நடைபெறும் சுதந்திர தினவிழாவில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும்' என்று ஓர் அழைப்பு வந்தது... செக்ரடேரியட்டில் எட்டு மணிக்குக் கொடியேற்று விழா. என்னைத் தவிர வேறு இசைக் கலைஞர்கள் யாரும் அங்கே காணவில்லை. எம். எல். ஏ., எம். பி.க்களின் வரிசையை அடுத்து எனக்குக் கொடுக்கப்பட்டிருந்த நாற்காலியில் போய் உட்கார்ந்து கொண்டேன். அவர் வந்ததும் எங்களையெல்லாம் தாண்டிக் கொண்டு போனபோது எல்லோரையும் போல நானும் வணக்கம் தெரிவித்தேன். எதுவும் பேச முடியவில்லை. கொடி ஏற்று விழா முடிந்து, எல்லோருக்கும் காலைச் சிற்றுண்டி நடந்து கொண்டிருந்தது. முதல்வர் எங்கே என்று பார்த்தேன். ''சி. எம்.மின் கார் போய்விட்டதா?'' என்று நான் விசாரித்துக் கொண்டிருந்த போதே, அருகிலிருந்த ஷாமியானாவில் அவரைப் பார்த்து விட்டேன். அவர் அருகே நின்றுகொண்டிருந்த சபாநாயகர் ராஜாராம் என்னைப் பார்த்துவிட்டு, ''சந்தானம், வாங்க இப்படி!'' என்று கூப்பிட்டார். அவர்கள் அருகே போனேன்.

''மகாராஜபுரம் சந்தானம் வந்திருக்கார்!'' என்றார் சபாநாயகர், அவரிடம்.

முதல்தரக் கலைஞர்கள்

''என்னங்க நீங்க! தெரியாதா எனக்கு? உட்காருங்க சந்தானம்!'' என்றார் முதல்வர். தொடர்ந்து, ''ராஜாராம், உங்களுக்குத் தெரியுமா, நாற்பத்தஞ்சு வருஷமா இவர்கள் குடும்பத்தோடு எனக்கு ஈடுபாடு உண்டு. செம்மங்குடி சீனிவாசய்யர் அவர்கள், இவர் அப்பாவிடம் சங்கீதம் சொல்லிக்கிட்டிருக்கும் போது நான் கும்பகோணத்தில் இருந்தேன். இவர் அப்பா ரொம்பக் கோவிச்சுப்பார்... இவர் சித்தப்பா மகாராஜபுரம் கிருஷ்ண மூர்த்தி கன்னய்யா கம்பெனியிலே நடிச் சுட்டிருந்தார். (டி.கே. சண்முகம், தங்க வேலு, சாரங்கபாணி எல்லாம் அங்கே தயாரானவர்கள். எம். ஜி. ஆர். அவர்களும் மகாராஜபுரம் கிருஷ்ணமூர்த்தியுடன் நடித்தவர்.) சந்தானம் பாட்டு என்றால் ரொம்பப் பிடிக்கும் எனக்கு. இவர் டேப் நிறைய வைத்திருக்கிறேன். சந்திக்க முடி யவில்லையே என்கிற குறை உண்டே தவிர, இவர் பாட்டை வெகுவாக ரசிக்கிறவன் நான்!'' என்றார்.

இதற்குள் பதினைந்து நிமிடங்கள் ஆகி விட்டன. ''நான் இரண்டொரு வார்த்தை உங்களுடன் பேசணும்!'' என்றேன் தயக்கத் துடன்.

''என்ன சந்தானம், என்ன வேணும் சொல்லுங்க!''

''ஒண்ணுமில்லே... எதிர்பாராம இந்தச் சந்திப்பு எனக்குக் கிடைச்சுது. அரசுக் கலைஞரா என்னை நியமிச்சு செய்தி வந்த நாளிலேருந்து உங்களுக்கு எனது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கணும்னு தவிச்சேன். அதுக்கு இன்னிக்குத்தான் சந்தர்ப்பம் வாய்த்தது!''

''நீங்க எதுக்கு எனக்கு நன்றி தெரிவிக்க ணும்?'' என்று ஒருகேள்வி கேட்டுநிறுத்தினார். ''ரசித்து அனுபவிக்கும்படியா நீங்க பாட றீங்களே, அதுவே நீங்க எனக்குத் தெரிவிக் கிற நன்றிதான்... நீங்கதான் உங்க பாட் டாலேயே நன்றி சொல்லிடறீங்களே!'' என்று அன்புடன் சிரித்துக் கொண்டே சொன்னார்.



✕ முதல்வரின் வேண்டுகோளுக்கு இசைந்து...



✕ வாழ்த்துக் கடிதம்




✕ எம்.ஜி.ஆர். அப்போலோவில் இருந்தபோது...

✕ செயலளவில் நிரூபணம்



✕ வயதுக்கு அல்ல விருது





Prompt after-sales service
—cuts down-tool time.
Wolf
That's value added to reliability.
In the field for decades, Wolf has the age, the experience, and the understanding of power tool users' needs. We know that your industrial development and growing production needs call for more efficient servicing of your power tools. Our nationwide service network is organised to provide preventive, regular and breakdown maintenance services within easy reach—and to render them promptly.
Wolf
Manufactured by Ralliwolf Limited.
Marketed by Rallis India Limited.
Bombay • Calcutta • Delhi • Madras
Creative Unit

தஞ்சையில் ராஜ ராஜ சோழன் விழாவின் போது அரசுக் கலைஞர்களான எங்களை எல்லாம் கௌரவித்தார். முதலாவதாக என்னைப் பற்றியும், எங்கள் குடும்பத்துடன் இருக்கும் 45 வருட நட்பு பற்றியும் சொல்லிவிட்டு, ''இவர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். அப்படி இருந்தும் இத்தனை நாள் கழித்து அரசுக் கலைஞராக அவரை நியமித்ததற்கு நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், நான் எது செய்தாலும் வேண்டியவர்களுக்குச் செய்கிறேன் என்கிறார்கள் — ஏதோ எனக்கு ஆதாயம் இருக்கிற மாதிரி. அதனால்தான் எனக்கு வேண்டியவருக்காக, தாமதமாக இந்தச் சௌரவத்தைச் செய்கிறேன்!''

'கலைக்கு வயது கிடையாது'

'வீணை' காயத்ரிக்கு, இந்த வருஷம் ஆரம்பத்தில் 'கலைமாமணி' விருது அளிக்கப்பட்டது. விருது வழங்கிய விழாவில் பேச்சாளர்களில் ஒருவராக அழைக்கப்பட்டிருந்த நடிகை பானுமதி ராமகிருஷ்ணா பேசும்போது, ''கலைமாமணி விருது பெறக் கொஞ்சம் வயது ஆக வேண்டும். சிறிய வயதில் இந்த விருதைக் கொடுப்பது சரியென்று எனக்குத் தோன்றவில்லை!'' என்று சொன்னார்.

விழாவுக்குத் தலைமை வகித்து விருது வழங்கிய முதல்வர் எம். ஜி. ஆர். பேசும்போது, ''கலைக்கு மரியாதை செய்வதில் வயது எதுவும் குறுக்கே நிற்கக் கூடாது. வீணை காயத்ரி இளமையானவராக இருக்கலாம். ஆனால் அவரது இசை ஞானத்துக்கும் வாசிப்புத் திறமைக்கும் மரியாதை செய்யும் விதத்தில்தான் இங்கே அவருக்கு விருது அளித்து, கௌரவம் செய்யப்படுகிறது!'' என்றார்.

கைப்படக் கடிதம்

இளைஞர்கள் **கணேஷ்—குமரேஷ்** வயலின் வாசிப்பை ஒரு முறை டி. வியில் கேட்டார் எம். ஜி. ஆர். வாசிப்பில் இருந்த விறுவிறுப்பும், இரட்டையரின் அபார ஞானமும் திறமையும் முதல்வரை அப்படியே ஈர்த்துவிட்டிருக்கின்றன. நம்மைப் போல் கச்சேரி கேட்டு ரசித்து அதோடு நின்றுவிடவில்லை முதல்வர். அத்தனை வேலைகளுக்கு இடையிலும் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினார் இந்த இளம் கலைஞர்களுக்கு. எந்த விருதும் இதைவிட உயர்ந்ததாக இருக்க முடியாது இல்லையா?

முதல்வர் கணேஷ்—குமரேஷ் சகோதரர்களை இதோடு மறந்துவிடவில்லை என்பதை இவ்வாண்டு ராஜ ராஜ சோழன் விழாவின் போது அரசுக் கலைஞர்களாக இந்த இளைஞர்களை நியமித்தது அவரது அக்கறையைக் காட்டுகிறது. கலைக்கு மரியாதை செய்வதில் வயது தடையாக இருக்கலாகாது என்று பேச்சளவில் சொன்னதை, செயலில் மறுபடியும் நிரூபித்துக் காட்டிவிட்டார் முதல்வர்.

பட்டுப்புடவை பரிசுத்திட்டம்

போட்டி 33

நெல்லிக்கனி யாருக்கு?



உங்களுக்கு அதியமானுக்குக் கிடைத்தது போல் ஓர் அபூர்வ நெல்லிக் கனி கிடைக்கிறது. அதை யாருக்குக் கொடுப்பீர்கள்? ஏன்? கீழே வெற்றிடத்தில் எழுதி அனுப்பப்படும் வரிகளில் ரசமானவை பிரசுரமாகி பரிசு பெறும்.

தவிர குலுக்கல் முறையில் ஒருவருக்குப் பட்டுப் புடவை. இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து உறையிலிட்டு அனுப்பும்போது உறையின்மீது ''நெல்லிக் கனி யாருக்கு'' என்று குறிப்பிடல் அவசியம்.


முடிவு தேதி: **31-12-84**

இன்னும் 20 பட்டுப் புடவைகள் உள்ளன. அவற்றில் பரிசாக ஒன்றை நீங்கள் பெற வேண்டாமா? வாரம் தவறாமல் போட்டியில் பங்கு பெறுங்கள்

என் பெயர் . . . .

விலாசம் . . . .

. . . .


"யோவ் உனக்கு அறிவு இருக்குதா? இந்த சீனுக்கு கெட்டியான ராகமாலிகா புடவையை வாங்கிட்டு வான்னு சொன்னா, ஏதோ திராபை கடையா பார்த்து தண்டப் புடவை வாங்கியாந்து, சீப்பா முடிச்சுடலாம்னு நினைச்சியா, ஆஸ்பத்திரி பில்லு நீதாய்யா கொடுக்கணும்."

தேடி வந்த பாராட்டு

சற்று வித்தியாசமான குரல் வளம் படைத்தவர் தஞ்சாவூர் **எஸ். கல்யாணராமன்** அவர்கள். காலம் சென்ற ஜி. என். பி. அவர்களின் சீடர்.

சில வருடங்களுக்கு முன்...

ஒரு நாள் காலை வானொலியில் இவரது கச்சேரி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. பரபரப்பான அந்தக் காலை வேளையில், கச்சேரி கேட்டுக் கொண்டிருந்தவர்களில் பிஸியான பிரபல நடிகரும் எம். எல். ஏ.யுமான ஒரு ரசிகர் இருந்தார் என்பது கச்சேரி செய்து கொண்டிருந்த கல்யாணராமன் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கச்சேரி முடிந்ததும் வானொலிக்கு ஒரு போன் வந்தது. ''இப்போது கச்சேரி செய்த திரு கல்யாணராமன் விலாசம் கிடைக்குமா? அவரைப் பாராட்ட வேண்டும்!''

எம். ஜி. ஆர். அவர்கள் கையில் முகவரி கிடைத்ததும் திரு கல்யாணராமனுக்கு ஒரு கடிதம் எழுதினார். இதோ அந்தக் கடிதம்:

பேரன்புடையீர், வணக்கம்.

சென்னை வானொலி நிலையத்தின் மூலமாக 2-5-68ம் தேதி காலை ஒலிபரப்பப்பட்ட தங்களின் இசையை எனது தாமதத்தின் காரணமாகச் சிறிது நேரமே கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

சிறந்த முறையில் தாங்கள் இசைத்த இசையைக் கேட்டு மிகவும் ரசித்தேன். தங்களுக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் தங்களது முழுநீளக் கச்சேரியைக் கேட்கும் வாய்ப்பினை எதிர்பார்க்கிறேன். தங்கள் ஆசானின் புகழ் மேலும் உயர, தங்களின் கலைத் திறமையை நாடே போற்றும் வகையில் நீங்கள் எல்லா நலனுடன் பல்லாண்டு வாழ எங்கள் அன்னையை இறைஞ்சுகிறேன்.

அன்பன்

(ஒப்பம்) எம். ஜி. ராமச்சந்திரன்

''முகவரியே தெரியாத ஒரு கலைஞரை, அவரது இசையை மட்டும் கேட்டுவிட்டு, விலாசம் தேடிப் போய்ப் பாராட்டை வழங்குகிற செயல், முதல்வருக்குச் சிறந்த இசை மீது இருக்கும் பற்றைத்தான் காண்பிக்கிறது'' என்கிறார் திரு கல்யாணராமன்.

"ஏன் நிறுத்தி விட்டீர்கள்?"

முதல்வர் எம். ஜி. ஆர். சென்னை அப்போலோ மருத்துவ மனையில் படுத்திருக்கிறார்... மருத்துவர்கள் உதவியில் உடல் நிலையில் முன்னேற்றம் தெரிகிறது. முதல்வருக்குக் கர்நாடக இசையில் நாட்டம் உண்டு என்று ஏற்கனவே அறிந்திருந்த டாக்டர் ரெட்டி, தமது மகளிடம் இருந்த இயர் ஃபோனை வாங்கி முதல்வர் காதில் பொருத்தி விட்டு கேஸட்டில் பாலமுரளியின் இசையைப் போடுகிறார்.

சற்று நேரம் கழித்து இசையை நிறுத்துகிறார் டாக்டர் ரெட்டி.

''ஏன் நிறுத்திவிட்டீர்கள்? தொடருங்கள்!'' என்று சைகை மூலம் தெரிவிக்கிறார் முதல்வர்.

அமெரிக்காவில் தற்போது சிகிச்சைகளுக்கு இடையேயும் கர்நாடக இசை அவ்வப்போது கேட்பதாகச் செய்திகள் வருகின்றன.

-நமது நிருபர்





✕ குருவும் சீடரும்

சென்ற ஆண்டு இசைப் பேரறிஞர் விருது பெற்ற திரு. நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன் இந்த ஆண்டின் இசைப் பேரறிஞருக்கு மேலும் ஒரு பட்டம் சூட்டுகிறார்!

திரு லாலகுடி ஜெயராமன் அவர்கள் வாசிப்பை ரொம்ப வருஷத்துக்கு முன்னால் ஒரு சபாக் கச்சேரியில் கேட்டேன். ஜி. என். பி அவர்கள் பாட்டு. பாட்டை எவ்வளவு ரசித்தேனோ, அவ்வளவுக்கு லால்குடி வாசிப்பையும் ரசித்தேன்.

இதற்குப் பிறகு பலமுறைகள் நாங்கள் சந்தித்துக் கொண்டதுண்டு. திரு ஜெயராமன் அவர்களது மகன் ஜி. ஜே. ஆர். கிருஷ்ணனின் பூணூல் வைபவத்துக்கு நான் தான் நாதசுரம் வாசித்தேன்...

சில அயிட்டங்களைப் பொறுத்தவரை நான் வாசிப்பதெல்லாம் கூட லால்குடி அவர்கள் வழி அல்லது பாணி என்றுதான் சொல்ல வேண்டும்.

திருப்பதியில் ஒரு முறை, முதலில் அவர் வாசித்து முடித்த பிறகு ஊஞ்சல் சேவைக்கு

✕ நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன்

"தில்லானா சக்ரவர்த்தி"



✕ லால்குடி குடும்பம்



நான் கச்சேரி செய்து கொண்டிருந்தேன். பின்னாலிருந்து என் முதுகில் யாரோ அன்புடன் தட்டினார்கள். பார்த்தால் லால்குடி! ''அமுதசுரபியில் நீங்கள் வெளிநாட்டுப் பயணத்தைப்பற்றி எழுதி வருவதைப்படித்து வருகிறேன். சுவாரஸ்யமாக இருக்கிறது!'' என்று பாராட்டினார்.

''லால்குடி அவர்களின் தில்லானாபிரபலமானது. நானும் வாசித்திருக்கிறேன். அவரை 'தில்லானா சக்கரவர்த்தி' என்று கூடச் சொல்லலாம். அவ்வளவுக்கு நிறைய தில்லானாக்கள் இயற்றி இசையுலகுக்கு அளித்திருக்கிறார் அவர். திரு லால்குடி ஜெயராமன் தனிக் கச்சேரி (ஸோலோ) செய்கிறபோது, தம் திறமை முழுவதும் பரிணமிக்கும்படி மிகச் சிறப்பாக வாசிக்கிறார். எல்லோரும் உயர்வாகப் பாராட்டும்படி வாசிக்கிறார். ஆனால் பக்கவாத்தியமாக வாசிக்கும்போது தம் அபரிமிதமான ஆற்றலை அவர் உணர்ந்திருந்தபோதிலும் பாடகரை வெகுவாக அநுசரித்து, அவருக்குத் தகுந்தாற்போல் வாசித்து, கச்சேரியைப் பரிமளிக்கும்படி செய்வதில் லால்குடி சமர்த்தர். தம் திறமையைக் காண்பிப்பதுதான் முக்கியம் என்று இராமல், கச்சேரிகளில் பாடகர் எந்த விதமாகப் பாடுகிறாரோ அப்படியே வாசிப்பார்; அந்தந்தப் பாடகருக்குத்தகுந்த மாதிரி அவர் பாடியதை மீறாமல் வாசிக்கும் அநுசரணையான பக்கவாத்தியக்காரர் லால்குடி.

ஜெயராமன் அவர்களை ஒரு லிம்பின் மேன் என்று சொல்லலாம். தமது வயலின் பெட்டியை அவரேதான் இன்னும் எடுத்துக் கொண்டு மேடை ஏறுவார். பந்தா என்று எதுவும் கிடையாது.

மகா மேதை என்று மிக உயர்வாகப் புகழப்படத் தகுதி உடைய சிறந்த கலைஞர் லால்குடி ஜெயராமன். அவருக்கு இந்த ஆண்டு 'இசைப் பேரறிஞர்' விருது கிடைப்பது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். என் மனம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேட்டி: **சாருகேசி**

மேலட்டை வண்ணப்படம்:

புகைப்படங்கள்: **உத்ரா**



✖ ஸோனல் — பட்ட மரம் தளிர்த்தது

ஸோனல் மான்ஸிங்

✖ தனஞ்செயன்

இந்த ஆண்டு நிருத்ய சூடாமணி பற்றி சென்ற வருஷத்து நிருத்ய சூடாமணி தனஞ்செயன் சொல்கிறார்.

ஸோனல் மான்சிங்கைப் பதினைந்து வருஷங்களுக்கு முன்னால் அவரது நடன நிகழ்ச்சி ஒன்றில்தான் முதன் முதலாகச் சந்தித்தேன். பரதநாட்டியம், ஒடிஸி இரண்டு வகை நாட்டியங்களிலும் தேர்ச்சி பெற்றவர் இவர். பிறகு அவரை நானும் சாந்தாவும் (திருமதி தனஞ்செயன்) சந்தித்தது புதுதில்லியில்.

கார்காலம், இலையுதிர் காலம் முதலிய மாறும் பல பருவங்களை வைத்து ஒடிஸி பாணியில் அவர் தயாரித்து அளித்த பிரபலமான நடன நிகழ்ச்சியை அப்போது அவர் தில்லியில் வழங்கினார். அற்புதமான படைப்பாக அதைச் செய்திருந்தார்.

போலித்தனமே சிறிதும் இல்லாதவர் ஸோனல் மான்ஸிங். ஒரு முறை இங்கே விஜயம் செய்தபோது, நாங்கள் எப்படி வகுப்பு நடத்துகிறோம் என்று வெகு ஆர்வத்துடன் பயிற்சி முறைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். நடனக் கலைக்கு முழுக்க முழுக்கத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட மேதை இவர். புகழ், செல்வத்துக்காகத் தம் நடனக் கலையின் தரத்தை விட்டுக் கொடுக்காதவர். அவருக்குப் பரத நாட்டியமும் மிக நன்றாகத் தெரியும். என்றாலும் ஒடிஸியில்தான் அவர் தலைசிறந்து விளங்குகிறார். தம் நடனங்களில் நளினமும், மெருகும், பாரம்பரியப் பாங்கும் மிளிர வழங்குவதில் கெட்டிக்காரர்.



ஒருமுறை சென்னை டி.வியில் ஒடிஸியையும் பரத நாட்டியத்தையும் ஒப்பிட்டுவழங்கிய நிகழ்ச்சியில் நாங்கள் இரண்டு பேரும் பங்கு கொண்டோம். இரண்டு நடன வகைகளுக்கும் உள்ள

ஒற்றுமை வேற்றுமைகளை சாதாரண ரசிகர்களும் உணருமாறு வெகு சரளமாக வெளிப்படுத்தினார் ஸோனால். இரு வகை நடனங்களிலும் அவருக்கு இருக்கும் அபார ஞானம்தான் இதற்குக் காரணம். நடனத் துறையிலும் இசைத் துறையிலும் உள்ள கலைஞர்களோடு பழகுவதிலும் அவர் கெட்டிக்காரர்.

பிறர் நிகழ்ச்சிகளுக்குத் தன்னால் முடிந்த போதெல்லாம் வருவதோடு, எங்கள் நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் செய்வார். குறுகிய மனப்பான்மையோ, ஒதுங்கியிருந்துவிடும் தன்மையோ சற்றேனும் இல்லாதவர், ஸோனால் மான்சிங். தில்லியிலும் இவர் பல நிகழ்ச்சிகளுக்குப் போவதைப் பார்த்திருக்கிறேன். சிலர் ஒரு தகுதி அல்லது அந்தஸ்து வந்ததும் பிறர் நிகழ்ச்சிகளுக்குப் போகாமல் இருப்பார்கள். பிறரது நடன நிகழ்ச்சிகளில் சிலரைப் பார்க்கவே முடியாது. இவர் அப்படி அல்ல.

இவரது வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய விபத்து ஒன்றுக்குப் பிறகு, இவர் இனி நடனமாடவே முடியாது என்று டாக்டர்கள் உட்படப் பலர் தீர்மானித்து விட்டார்கள். ஆனால் பட்ட மரம் தளிர்த்தது போல் இவரது கடின உழைப்பு, எப்படியும் மேடையில் தோன்றி நடனமாடாமல் இருப்பதில்லை என்ற திட வைராக்கியம் எல்லாவற்றுக்கும் மேல் நடனக் கலை மீது இவருக்கு இருக்கும் தணியாத ஆர்வம் சுடுபாடு எல்லாம். இவரை மீண்டும் மேடைக்குக் கொண்டு வந்து நிறுத்தின.

சமீபத்தில், இரண்டு மாதங்களுக்கு முன்பு தில்லி சென்றிருந்தபோது பகல் உணவுக்கு எங்களை அழைத்திருந்தார். வெகு நேரம் நடனக் கலை, நடனக் கலைஞர்கள் பற்றி உற்சாகத்துடன் பேசிக்கொண்டிருந்தோம்...

ஸோனால் மான்சிங் ஓர் அற்புதமான கலைஞர். மிருதுவான, கவிதை நயம் மிக்க இவரது நடனம், பார்ப்பவரைப் பரவசத்தில் ஆழ்த்தும். இவருக்கு இந்த ஆண்டு, கிருஷ்ணகான சபா, 'நிருத்ய சூடாமணி' விருது வழங்கிக் கௌரவிப்பது பொருத்தமானது மட்டுமல்ல, பாராட்டுக்குரியது.

ஒரு விஷயம் கவனித்தீர்களா? பல நடவடிக்கைகளுக்கும், பரபரப்பான செயல்களுக்கும் முக்கிய கேந்திரமாக இருக்கும் தில்லியில் இருந்துகொண்டும், எந்த விதமான பட்டமும், பரிசும் இதுவரை பெறாதவர் ஸோனால் மான்சிங் என்றால் ஆச்சரியமாயில்லை?

—நிருபர்



உமையாள்புரம் சிவராமன்

இந்தியன் பைன் ஆர்ட்ஸில் சங்கீத கலா சிகாமணி விருதுபெறும் உமையாள்புரம் சிவராமன் பற்றி மூத்த மிருதங்க வித்வான் இசைப்பேரறிஞர் திரு. சி. எஸ். முருகபூபதி...

சிவராமனின் வாசிப்பு விநயமான வாசிப்பு. வாசிப்பில் நுட்பமெல்லாம் செய்வார். கை நாதமாக இருக்கும். நிறையக் கற்பனைகளோடு புதுமையாக வாசிக்க வேண்டும் என்று நினைக்கிறவர் சிவராமன்.

இப்போது இருக்கிற முன்னணி வித்துவான்களில் ஒருவரான உமையாள்புரம் சிவராமனுக்கு 'சங்கீத கலா சிகாமணி' பட்டத்தை இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் வழங்கிக் கௌரவிப்பது மிகவும் பொருத்தமானது.

ஜி. என். பி.யின் கச்சேரிகளில் இவர் வாசித்து நிறையக் கேட்டிருக்கிறேன். இவர் பாலக்காடு மணி அய்யர் அவர்களின் சிஷ்யர் என்ற அளவில்தான் எனக்குத் தெரியும். குருவின் பெயரைத் தொடர்ந்து பெருமையுடன் காப்பாற்றி வருகிறார். உயர் கல்வியோடு சிறந்து விளங்கி, சங்கீதத் துறையிலும் இப்படி உன்னதமாக வாசித்துப் பெயர் எடுப்பது சந்தோஷத்தைத் தருகிறது. ⟶....

○ முருகபூபதி

"உங்கள் மிருதங்கத்தைக் கொடுங்கள்"




இன்று விளையாட்டுக் கிறுக்கல். நாளையோ தலை சிறந்த கலைஞர்


உங்கள் கண்மணி கற்றுக்கொண்டிருக்கிறான் கோடுகள், வண்ணங்களின் மகிமையை. உருவம் வரைய பல்வேறு கோடுகளையும், இயற்கையின் பல வண்ணங்களையும் உணரத் தொடங்குகிறான்.

வாழ்நாள் முழுவதும் இந்த மகிழ்ச்சி தொடரட்டும். இன்னும் சில ஆண்டுகளில் அவன் பெரிய பெரிய கான்வாஸ்களில் அல்லது சுவர்களில் சித்திரம் எழுதலாம்.

இன்றே சேமியுங்கள் உங்கள் கண்மணியின் எதிர்கால தேவைக்கு. உங்களுக்கு உதவ சவுத் இந்தியன் பாங்க் கொண்டுள்ள பற்பலத் திட்டங்கள்:

கற்பக நிதி டெபாசிட்டுகள், கோல்டன் ஜூபிலி காஷ் சர்டிபிகேட்டுகள், நான்-ரெஸிடெண்ட் அக்கவுண்ட்டுகள், சேவிங்ஸ் பாங்க டெபாசிட்டுகள், ரெகரிங் டெபாசிட்டுகள், தினசரி சேமிப்புகள்...





தி சௌத் இந்தியன் பாங்க் லி.

பதிவு அலுவலகம்: திருச்சூர், கேரளா.

SIB உங்கள் சேவைக்காகவே எல்லா இடங்களிலும் வளர்கிறது

சம்பிரதாயம் மீறாமலே — அதற்கு உட்பட்டே — புதிய முயற்சிகளைச் செய்து பார்ப்பதில் அவருக்கு எப்போதுமே ஆர்வம் அதிகம்.

சில காலம் முன்பு விஞ்ஞானி நண்பர்களின் துணையுடன் ஃபைபர் கிளாஸில் மிருதங்கம் தயாரித்துப் பரீட்சித்துப் பார்த்தார்.

சமீபத்தில் மிருதங்க வாசிப்பில் உள்ள நுணுக்கங்களைப் பற்றிச் சாமானியருக்கும்புரியும் வகையில் விளக்க உரைகள் தந்தார். இவையெல்லாம் மிருதங்கத்தில் ரசிகத்தன்மை வளரவும் ஆர்வம் பெருகவும் உதவுகிற ஆக்கபூர்வமான செயல்கள்.

என் வாசிப்பில் என்னளவில் நான் வெளிவிடும் சில நுட்பங்களை அவர் மிகவும் சிரத்தையோடு கேட்டுத் தெரிந்து கொள்ளுவார். இப்படித் தெரிந்து கொள்வதில் அவருக்கு உள்ள உண்மையான ஆர்வத்தைக் குறிப்பிட ஒரு நிகழ்ச்சி சொல்லுகிறேன்.

மயிலை தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தில் ஒரு முறை தாமே முன்னின்று திரு எம். டி. ராமநாதன் அவர்களின் கச்சேரிக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தார். நான்தான் அன்றைக்கு மிருதங்கம் வாசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வேறு யாராவது வாசிக்கட்டுமே என்று நான் சொல்லியும் கேட்காமல் நான்தான் வாசிக்க வேண்டும் என்றார். நானும் அன்று வாசித்தேன். நான் 'கோப்பி'யில் ஒருவிதமாய் வாசித்ததை அவர் அருகிலேயே நின்று பார்த்தும் கேட்டும் ரசித்தார். பிறகு ஒரு சமயம் என் மிருதங்கத்தையே அவர் கேட்டு வாங்கிக்கொண்டு போனார்.

''உன்னிடம் எத்தனையோ மிருதங்கங்கள் இருக்கிறபொழுது என்னுடையதை ஏனப்பா எடுத்துக் கொண்டு போகிறாய்?'' என்று கூடக் கேட்டேன்.

''இல்லே, நீங்கள் கொடுக்கத்தான் வேண்டும்!'' என்று என்னுடைய மிருதங்கங்களில்ஒன்றைத்தேர்ந்து எடுத்துக்கொண்டு போய் அதில் வாசித்தார்.

தன்னுடைய சொந்தத் திறமையை, தன்னுடைய வாத்தியத்தில் வாசித்துக் காண்பிப்பதோடு, அவர் விரும்பிய மற்ற வித்துவான்களின் திறமையையும், அவர்களது வாத்தியங்களின் பக்குவத்தையும் அறிந்து கொள்ளுவதில் ஆர்வமும் அக்கறையும் காண்பித்தார் என்பது இதிலிருந்து புரிந்தது. நாலு பேர் ஒரே மிருதங்கத்தை வாசித்தால் அதில் நாலு விதமாய் சப்தம் வரும். எல்லாவிதமான மிருதங்க வாத்திய நுட்பங்களையும் அறிந்து கொள்ளுவதில் சிவராமனுக்கு இருக்கும் சிரத்தையைத் தெரிந்து கொண்டேன்.

பேட்டி: சாருகேசி

மழலைக் கலைஞர்



வர்ணத்தில் ஓரிடத்தில் அபிநயம் எப்படிச் செய்ய வேண்டும் என்று விளக்கிக் கொண்டிருந்தார் ஆசிரியர். 'அழகாக நளினமான பெண் போல நடந்து வாம்மா' என்றார். என் சகோதரியின் பெண்ணுக்கோ நாங்கள் சதா நிமிர்ந்து நேராக நடப்பதுதான் பெண்களுக்கு அழகு என்று சொல்லிக் கொண்டே விருப்போம். அதையே மனத்தில் கொண்டு அவள் ராஜநடை போடவும் ஒரே சிரிப்பு மயம்.

திருமதி கோபாலன், திருச்சி-14



என் நான்கு வயது மகளிடம் கேட்டேன்: ''வீணை கத்துக்கறியா? வாய்ப்பாட்டுக் கத்துக்கறியா எது உனக்கு விருப்பம்?'' என்று.

''ஸ்கூலில்தான் வாய்ப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கிறார்களே வீணையே கத்துக்கறேன்'' என்றாள்.

''எங்கே ஒரு பாட்டுப் பாடு'' என்றதும், ''இரண்டோன் ரெண்டு....'' என்று ஆரம்பித்தாளே பார்க்கலாம்... வீடே சிரிப்பில் அதிர்ந்தது.

அரு சொலையப்பன்
செங்கற்பட்டு

வட்டமேஜை

● அம்பாசமுத்திரம் ஸ்ரீ காஹறகேச்வரர் கோயிலில் 'இரும்பு வாளியால் மூலவருக்கு அபிஷேகம் செய்வதாகத் தெய்வ தரிசனம் கட்டுரையில் (கல்கி 2–9–84) படித்து அறிந்தேன். மேற்படி கோயிலுக்குப் பித்தளைக் குடம் ஒன்று வாங்குவதற்கு என் காணிக்கையாக ரூபாய் நூறு அனுப்பியுள்ளேன்.

கோயமுத்தூர்-2 ஜி. வி. சுப்ரமணியன்

(அன்பர் திரு சுப்ரமணியன் அனுப்பிய தொகைக்கு பித்தளை குடம் வாங்கி ஸ்ரீ தாஹறகேச்வரர் கோயிலுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது)

● ''இந்தச் சூழலில் யாருக்கு நம் வோட்டு'' என்று நாம் குழம்பிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் ''சிந்தித்துச் செயல்படுவோம்'' தொடர் கட்டுரைகள் பதர்தலுக்கு முன் ஒரு சரியான முடிவுக்கு வர வாக்காளர்களுக்கு உதவும்.

சென்னை-34 எஸ். நாகேஸ்வரன்

● ஆளும் கட்சிக்கு எதிராகத் தாங்கள் தலையங்கத்தில் கூறியிருந்த அத்தனை குற்றச்சாட்டுக்களையும் ஒத்துக்கொண்டுதான் கடந்த முறை காங்கிரசை மத்திய அரசிலிருந்து தூக்கி எறிந்துவிட்டு ஜனதா ஆட்சியை டில்லி சிம்மாசனத்தில் ஐந்து ஆண்டுகள் ஆட்சிபுரிய மக்கள் மகுடம் சூட்டினர். ஆனால் ஆட்சியில் இருக்கும்போதே நெல்லிக்காய் மூட்டைகளாகச் சிதறிய எதிர்க்கட்சிகளுக்கு மீண்டும் ஓட்டுப் போட்டு, ஜனநாயகத்தைச் சோதிக்க இந்திய மக்கள் விரும்ப மாட்டார்கள்.

சென்னை-5 வே. ராமமூர்த்தி.

● ''சபரிமலை செல்வோருக்கு விதிமுறைகள்'' — தக்க சமயத்தில் என்போன்ற புதிதாகச் செல்லும் கன்னி ஐயப்பன்மார்களுக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்துள்ளது.

தேரழுந்தூர் சி. சுப்பு

● கரிசல் மண்ணில் பூத்த கி. ராஜநாராயணனின் 1965ம் காலத்துப் படைப்பு இன்னித் தேதிவரைக்கும் கம்மங்கதிரின் பாற்சுவை குன்று அபூர்வ விளைச்சல்.

போடிநாயக்கனூர் கவி. கண்ணன்

● கொரில்லாப் போர் என்ற சொல்லுக்கு முழுமையான விளக்கத்தை மேஜர் ஜெனரல் மகாதேவன் வாயிலாக அறியவைத்தது மூலம் ஈழத் தமிழர்களின் போர் முறையினை ஒப்பிட்டுப் பார்க்க முடிந்தது.

கோவை-43 என். பாலகிருஷ்ணன்

● 'மணியான வாரிசு' பற்றிய பேட்டிக் கட்டுரை ஒரு தரம் வாய்ந்த கர்நாடக இசைக் கச்சேரியைக் கேட்ட மனநிறைவை அளித்து விட்டது.

ஸ்ரீரங்கம் ஆர். கோபாலன்

● அமரர் இந்திரா விரும்பிய கவிதை வரிகள் கவிஞர் வைரமுத்துவின் கைபட்டு ஜொலிக்கின்றன.

மயிலாடுதுறை 'பழம்'

● நடிகர் திலகம் நடித்த சமீபத்திய படத்தைப் பார்த்துவிட்டு தியேட்டரை விட்டு வெளியே வந்தோம். படம் சுத்த போர். அதனால் என் நண்பர்களிடம் ''ஏண்டா இந்தப் படத்துக்குப் போய் ரிசர்வ் பண்ணீங்க'' என்று கேட்டேன். அது அருகிலிருந்த ஒரு சிவாஜி ரசிகரின் காதில் விழுந்து விட்டது. உடனே அவர், ''எங்க தலைவர் படத்தைப் பத்தியா இப்படி விமரிசனம் பண்றே! படத்தைப் பத்தி இங்கே விமரிசனம் பண்ணாதே'' எனக் கூறியும் திட்டியும் அங்கே இருந்த 20, 30 ரசிகர்களைத் திரட்டிக்



கொண்டு வந்து எங்களிடம் வேண்டுமென்றே கலாட்டா செய்ய ஆரம்பித்தார். தகராறு செய்யாமல் வந்து விட்டோம். எந்தப் படத்தைப் பற்றியும் விமரிசனம் செய்ய எல்லா ரசிகர்களுக்கும் உரிமை உண்டு. தங்களை ஒரு பெரிய நட்சத்திரத்தின் ரசிகர்கள் என்று கூறிக்கொண்டு இப்படி அநாகரிகமான செயலைச் செய்வது அந்த அபிமான நட்சத்திரத்துக்கே இழைக்கப்படும் அவமானம் என்பதை உணர்வார்களா?

அம்பத்தூர் டீ. மனோகரன்

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)

அபிமான நட்சத்திரத்துக்கு அவமானம்

9.

சொப்பனத்தில் இரு சுந்தரிகள்

நாதி ஏதோ படை ஒன்று சாலைவழியே அந்த ராத்திரியில் போகிறதென்று சொல்ல, சிந்து அனைக் கணமும் தங்காமல், வர்ம ணுக்கு சைகை காட்டி, மராமத்துஅடிவாரங் களின் வழியே தோப்பு எல்லை வரை சென்று அங்குள்ள மண் சுவரின் பதவலில் நின்று சாலையைக் கவனித்தான்.

ஐநூறுபோதும்சிப்பாய்கள்,அந்த இருட்டு வேளையில் அதிவிரைவாகவும் சத்தம் இன்றி யும் போவதைப் பார்த்து, ''இது ஏதோ ரகசியத் தாக்குதலுக்குப் போகிறது, தொப்பி களைப் பார்த்தால், இங்கிலீஷ்காரர்கள் என்று தோன்றுகிறது. இந்தப் பாட்டையில் போவதால் ஆர்க்காடு நோக்கிப்போகலாம்'' என்று கூறினான்.

பிறகு எல்லோரும் உறங்குவதற்காகத் தம்தம் இடங்களுக்குச் சென்றார்கள்.

விடிய ஒரு ஜாமம் இருக்கும்போது அந்தத் தங்குமிடம் மீண்டும் சுறுசுறுப்பை அடைந் தது. வேலைக்காரர்கள், சமையல்காரர்கள், துணி வெளுப்பவர், பல்லக்குத் தூக்குபவர், குதிரை பராமரிப்பவர், இன்னும் வகை வகை ஊழியர்களும் எழுந்து ஆயத்தமாக நிற்க,

சிந்து 'போகலாம்' என்று உத்தரவிட்ட தும் நடக்கத் தொடங்கினார்கள்.

சிறிது தூரம் போன உடனே கோஷ்டியை நிறுத்தி, படை ஒன்று முன்னே சென்றிருப் பதால் அந்த மார்க்கம் சரியானதில்லை என்று சொல்லி,



போளூர், வேலூர், சித்தூர் தடத்தில் போய், பொம்மராஜுபாளையத்தை அடை வதே சரி என்று கூறினான்.

கோஷ்டி வேலூர் தடத்தை எடுத்தது.

மூன்று நாளில் போளூர், வேலூர்களைக் கடந்து, பாலாற்றையும் கடந்து நாகரிப் பேட்டை வழியே ஐந்தாம் நாள் காலை சித்தூரை அடைந்தார்கள். பிறகு பொய்நி நதியைக் கடந்து அன்று பிற்பகல் பொம்மை ராஜுபாளையத்தை அணுகினார்கள்.

எங்கும் மலை சூழ்ந்த ஓர் அழகிய ஊர் தட்பத்தோடு ஆரோக்கியமாக இருந்தது.

கார்வேட் ராஜா என்று அழைக்கப்படும் ஜமீன்தாரின் அரண்மனையை அடைந்தது தான் தாமதம். ராஜாவே தமது பிரதானி களுடன் எழுந்து வாசல்வரை வந்து சிந்துவை யும் அவள் பரிவாரத்தையும் வரவேற்றார்.

கார்வேட் ராஜாவுக்கு முப்பதைந்து வயது இருக்கலாம். ஜரிகைத் தலைப்பாகை கட்டி, மேலே பூவேலை செய்த அங்கியை அணிந்து, இரண்டு முத்துத் தாழ்வடங்க ளோடு நடந்து வந்தார்.

''வாருங்கள்! வாருங்கள்! தன்யர்கள் ஆனேம்'' என்று சொல்லி, அந்த இரண் டடுக்கு மாளிகையின் ஆத்தானி மண்டபத் துக்கு அழைத்துப் போய், சிறிது நேரம் உப சார வார்த்தைகள் பேசி இருந்துவிட்டு,

பக்கத்திலிருந்த வெங்கடம்மா நிவாசம் என்ற விருந்தினர் மாளிகையில் அவர்களைக் கொண்டு விட்டு, சிரம பரிகாரம் செய்து கொள்ளும்படி கூறிச் சென்றார்.

மாலையில் தமது அந்தரங்க அறைக்குச் சிந்துவையும், வர்மனையும் அழைத்து வரச் சொல்லி,

''சிந்து தேவிகளே! இப்படி திடுதிப் பென்று முன் அறிவிப்பு இல்லாது வந்து விட்டீர்களே! அறிந்திருந்தால் ராஜ உப சாரம் அளித்திருப்போமே!'' என்று கூறினார் ராஜா.

''பொறுக்க வேண்டும் பிரபு! இங்கே நான் வந்திருப்பது ரகசிய உடன்படிக்கை குழுவின் பிரதிநிதியாக அல்ல! வெறும் அடிமைப் பெண்ணாக!'' என்றாள்.

''இதென்ன கூத்து?'' என்று ராஜா பாதி நகைப்போடு கேட்க,

மராட்டியரிடம் சிந்து சிக்கிக்கொண்ட விதத்தை விவரமாகக் கூறினாள் அவள்.

''என்ன! முராரி ராவ் படையிடமா?'' என்றார் ராஜா.

''இல்லை! விட்டோபா வைத்திருந்த படை!'' என்றாள் சிந்து.

மராட்டியப் படையில் கீழ்மட்ட சரகத் தில் உள்ள வீரர்கள் தனிக் கும்பல்களாகப் பிரிந்து ஊர்களைச் சூறையாடினார்கள். அவர் களுக்குக் கையூட்டும், ஊதியமும் கொடுத்துத் தம்மிடம்வைத்துக்கொண்டவர்களும் உண்டு.

''விட்டோபா யார்?''

''ஒரு தனவணிகர்! வாசாலகர்! நிறைய செல்வாக்கு உள்ளவர்.''

''ஓகோ! அவர் வேறு படை வைத் திருக்கிறாரா?''

''ஆமாம். இந்தச் சிறு படைகள் ஊர் களில் செய்யும் அநியாயம் சொல்லி முடியாது!''

''ஏன், முராரி ராவ் படையே விதி விலக்கா என்ன? திருவண்ணாமலையிலிருந்து சிதம்பரம் வரை ஜனங்களை நடுநடுங்க வைத்திருக்கிறார்களே! இதற்கெல்லாம் முடிவு காலம் எப்போது வரும்?''

''வரத்தானே வேண்டும்! பிரபு!'' என்று அழுத்தமாகக் கூறினாள் சிந்து.

''சரி! விட்டோபாவிடம் சிக்கினீர்கள்! அப்புறம்?''

''என்னை இங்கே அனுப்பித்திருக்கிறார். அவர் தங்களுக்கு அனுப்பித்திருக்கும் பரிசில்களில் நானும் ஒருத்தி!''

சிரித்தார் கார்வேட்டி ராஜா!

''ஓசோ! எனக்கு அந்தப்புர அடிமையை அனுப்பியிருக்கிறாரோ! போகட்டும்!''

''எனக்கு அதில் ஆட்சேபணையில்லாமல் போய்விட்டது. தங்களைப் பார்த்துவிட்டுப் போவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா?''

''நீங்கள் வந்த நேரமும் நல்ல நேரம் தான். உங்களிடம் சொல்ல வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.''

''இதோ இவர் ஒரு பாளையக்காரர். நமது குழுவில் சேர்ந்திருக்கிறார். இவரிடம்தான் விட்டோபா கடிதாக கொடுத்து அனுப்பியிருக்கிறார்.''

உடனே வர்மன் தனது இடுப்புப் பையை அவிழ்த்து உறை போட்ட கடிதத்தை கார்வேட் ராஜாவிடம் நீட்டினான்.

ராஜா அதைத்திறந்து பார்த்தார். கண்கள் சற்று விசாலமாயின. தலையை ஆட்டிக் கொண்டே படித்தார். பிறகு தலையை நிமிர்த்தி. ''இதை யார் எழுதியிருக்கிறார்கள் தெரியுமா?'' என்று கேட்டார்.

''யார் பிரபு? யாரோ பிரமுகர் எழுதியது என்று விட்டோபா சொன்னார்.''

''புதுச்சேரியிலிருந்து ஆனந்தரங்கப் பிள்ளை எழுதியிருக்கிறார்.''

''ஓகோ! கவர்னர் தூப்ளேயின் துபாஷியா?''

''ஆமாம்.''

''என்ன விஷயம்?''

''திருப்பதி பெருமாள் விஷயம்தான். வேறு என்னத்தை எழுதப் போகிறார்?''

''என்ன சொல்கிறார்?''

''திருப்பதி வருமானம் சந்தா சாஹிப்புக்குத் தேவைப்படுகிறது. அவர்தான் முறையான ஆர்க்காடு நவாப். அவருக்கு அதை அனுப்பி வைக்க வேண்டும். அப்படி அதை அனுப்பி வைக்காத பட்சத்தில் முகம்மதலிக்கு அனுப்பக் கூடாது!''

சிரித்தாள் சிந்து.

ராஜா தொடர்ந்தார். ''இவர்கள் இருவரில் யார் நவாப் என்று தீர்மானம் ஆகும் வரை தொந்தரவுதான். முகம்மதலி வேறு கடிதாசி எழுதியிருக்கிறார்!''

''திருப்பதிப் பணத்தைக் கேட்டா?''

''ஆமாம்! எல்லா வரும்படியையும் சேர்த்து உடனே எமக்கு அனுப்பி வையுங்கள் என்று!''

''இருதலைக் கொள்ளி எறும்புதான்!'' என்றாள் சிந்து.

''ஆமாம்! என்ன செய்வதென்று தெரியவில்லை. நானே திருப்பதிப் பெருமாளைப்



பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன்! அப்பா! வேங்கடப்பா! உன் வரும்படி இப்படி எல்லோர் கண்ணிலும் பட்டு ஆசையை உண்டு பண்ணுகிறதே! இதற்கு ஒரு சரியான முடிவு உண்டாக்கக் கூடாதா என்று! சுவாமிதான் கண்ணைத் திறக்க வேண்டும்.''

''திறப்பார் பிரபு!''

ராஜா பெருமூச்சு எறிந்தார்.

''இந்த வருடம் வரும்படி எவ்வளவு பிரபு?'' என்றாள் சிந்து.

''நானா திவான் சம்பத் ராவ் இங்கே வருவதற்கு இருக்கிறார். அப்போது தெரியும். அவரிடம் நாம் சேர்ந்தே பேசலாம்!'' என்றார் ராஜா.

வர்மன் விளக்கு வைத்த பிறகு தனது பெரிய கூடத்தில் உலாத்திக் கொண்டிருந்தான். கட்டுண்டது போல் ஏதோ ஓர் உணர்ச்சி அவனை ஆட்கொண்டிருந்தது.

சிந்துவின் ஒவ்வொரு செய்கையும் அவனை ஆச்சரியத்தில ஆழ்த்தியிருந்தது.

சாதாரணப் பெண்ணாகத் தோன்றவில்லை. சாமர்த்தியசாலியாக விளங்கினாள். தேவதாசிகளில் நிறையப் பேர் மிகுந்த புத்தி சாதுரியம் படைத்தவர்கள் என்று அவனுக்குத் தெரியும். பலருக்குச் சொந்தப் படைகள் கூட உண்டு என்று தெரியும். நாட்டு நடப்பில் சமயம் வந்தால் பங்கேற்றவர்கள் என்று தெரியும்.

ஆனால், சிந்து, அவன் பார்த்த, கேள்விப்பட்ட எல்லாப் பெண்களையும் தூக்கி அடிக்கும் திறமை பெற்றிருக்கிறாள்!

வாழ்க்கையில் முதன் முதல் அப்படிப் பட்ட பெண்ணோடு ஏற்பட்ட நெருக்கம் அவனை வெகுவாகப் பாதித்திருந்தது. எத்தகைய சக்தி அதற்கு? எங்கோ செல்பவனை எங்கோ இழுத்து வந்து விட்டதே!

''வீரரே!'' என்று குரல் கேட்டது.

திரும்பினான்.

கண்கள் திரிந்து நின்றன.

வாயில் முகப்பில் சிந்து ஒரு சொப்பன சுந்தரியாக நின்றாள்.

மேலே நீல நிறப் பட்டில் கூறை! உடம்பு முழுதும் ஸ்வர்ணங்கள்! கண்களில் மெல்லிதாகத் தீட்டிய அஞ்சனம். காதுகளில் மின்னி ஆடும் லோலாக்கு! புஜங்களில் நாக்கொத்து!

அகல் விளக்கின் வெளிச்சத்தில் அத்தனையும் ஒளிர ஒரு ஜொலிக்கும் சொரூபமாக இருந்தாள்.

நின்ற மூச்சு திரும்பி வரச் சற்று நேரமானது!

கனவில் நடப்பது போல் நடந்து அவள் பக்கம் வந்தான்!

''என்ன செங்க லட்சுமி விடமாட்டேன் என்கிறாள். இத்தனையும் போட்டு அணிவித்து...''

வாயில் அருகில் இப்போது செங்க லட்சுமி பிரசன்னமானாள். பதினைந்து வயது இருக்கும். கண்களால் கட்டியாகப் பார்த்தான். உடம்பு சின்ன மின்னல் கொடி! இடுப்பை வளைத்து நின்றதே நாட்டியமாக இருந்தது.

''வாருங்கள் நடன சபைக்கு! அங்கே ஒரு விருந்து.''

சபையைப் பார்த்துக் கண்கள் சொக்கின.

அத்தனை மின்மினிகள் சுடர் விட்டு ஒரு தங்க மயமான ஒளியை அங்கே நிரப்பிவிட்டன.

கண்ணாடிக் கூடுகளில் மெழுகுவர்த்திகள் ஜொலித்தன. அதன் ஓரங்களில் அகல்கள் எரிந்தன. அனைத்துத் தாரகைகளும் அங்கு வந்தனவோ எனும்படி சுருக் சுருக்கென்று ஒளி தைத்தன.

ஆசனத்தில் அமர்ந்தான் வர்மன்.

மிருதுவான மலர் வாடை சபை வெளியில் உலாவியது.

கீழே பளிங்குத் தரையில் அத்தனை விளக்குகளும் பிரதிபிம்பங்கள் காட்டின.

மேடையின் பக்கம் கண் செல்ல, மீண்டும் அவனுக்கு மூச்சு நின்றது.

என்னைப் பார், என்னைப் பார் அழகில் அத்தனை பெண்கள் வர்ணத் துகில்களில் நின்றார்கள்.

இருந்தும் அவன் கண் அங்கிருந்து திரும்பி மூலையைத் தேட இரு ஜோடி விழிகள் அங்கே அவன் மீது லயித்திருந்தன.

மெய் சிலிர்த்தது.

(தொடரும்)



இரண்டாம் உலகப்போர் 1974-ல் முடிந்தது!

பசிபிக் கடலில் உள்ள சிறிய தீவுகளில் போரில் ஈடுபட்டிருந்த சில ஜப்பானிய வீரர்களுக்கு இரண்டாம் உலகப் போர் முடிந்துவிட்ட செய்தியே தெரியாது! அவர்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருந்தனர். அவர்களில் ஓனோடா என்பவர் ஒருவர். ஆரம்பத்தில் சகவீரர்களுடன் போரில் ஈடுபட்டிருந்த ஓனோடா, மற்றவீரர்கள் கொல்லப்பட்டதாலோ கைது செய்யப்பட்டதாலோ தனிமைப்படுத்தப்பட்டார். இருந்தும் கூடத் தம்முடைய கொரில்லா நடவடிக்கைகளை விடாமல் செய்து வந்தார். குகை மனிதன் போலவே வாழ்ந்த அந்தப் போர்வீரர் பசியையும் எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்தார்.

ஏறத்தாழ 30 ஆண்டுகள் கழித்து ஓனோடா பற்றிக் கேள்விப்பட்டு போரில் அவருக்குக் கமாண்டிங் ஆபீசராக இருந்த மேஜர் டானிகுச்சி என்பவர் அத்தீவுக்குச் சென்று அவரைச் சந்தித்தார். மேஜரைப் பார்த்ததும் ராணுவ மரியாதையை செலுத்தி அவரைப் பணிந்தார். கமாண்டிங் ஆபீஸர் சொன்ன காரணத்தால் தம்முடைய இரண்டாம் உலகப் போரை 1974 மார்ச் மாதம் முடித்துக்கொண்டார் அந்த மாவீரர்!

— சி. செந்தில் குமார்

விஷ வாயு இத்தனை உயிர்களைப் பலி வாங்கி விட்டதே?



நீங்கள் கேட்டவை தராசு

○ சுவாதி வேங்கடேசன், சென்னை-14

? எந்தத் துறையிலும் படைப்பாளிகளாக இருக்கும் இருவரை ஒருவரோடு ஒருவர் ஒப்பிட்டு நோக்குவதே மிகத் தவறு. அவரவர் வெற்றி தோல்விகளைத் தனித்தனியே அலசுவதே சரியான விமரிசனம். அவ்வாறிருக்க இந்துமதியையும் சிவசங்கரியையும் ஒப்பிட்டுத் தாங்கள் அளித்த பதில் ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறதே?

! எழுத்தாளர்களை ஒருவரோடு ஒருவர் ஒப்பிட்டு ஆய்வுக் கட்டுரை எழுதி டாக்டர் பட்டமே வாங்குகிற காலம் இது. ஒரே காலகட்டத்தில எழுதும் இரு பெண் எழுத்தாளர்கள்; இருவருமே சமூகப் பிரக்ஞை உடையவர்கள் என்பதால் ஒப்பு நோக்குவதில் தவறில்லை. மேலும் நான் விமர்சனம் ஏதும் எழுதிவிடவில்லை. இருவருமே சில உயர்ந்த நாவல்களையும் எழுதியுள்ளார்கள் சில சாதாரண நாவல்களையும் படைத்துள்ளார்கள் என்று சுட்டிக் காட்டியதோடு முடிந்துபோன அந்தப் பதிலில் தவறு ஏதும் இருப்பதாக நான் கருதவில்லை.

○ ஆர். சிவராஜ், லால்குடி

? விஷ வாயு ஒழுகி இத்தனை உயிர்களைப் பலி வாங்கிவிட்டதே?

! பூச்சி மருந்து தயாரிக்கும் ஆலை அது. 'மனிதன் தனது சுயநலத்துக்காக எத்தனை கோடிக் கணக்கான உயிர்களைக் கொன்றான் இன்று பழிவாங்கப்பட்டான்' என்று கூறினால் அது காலத்துக்குப் பொருந்தாத சென்டிமென்டல் அபத்தமாகக் கருதப்படலாம். ஆனால் ஆழ்ந்து யோசித்தால் அதிலும் ஒரு தார்மீக நியதி இல்லாமல் போகவில்லை. ஒரு பாவமும் அறியாத பூச்சிகளைக் கொல்கிற மனிதனின் அசுரத்தனம், அதை அனுமதிக்கிற மனிதனின் சுயநலம் ஆகியன ஒரு பாவமும் செய்யாத மனித உயிர்களையே இன்று பலிவாங்கி விட்டிருக்கிறது. இந்தத் தத்துவத்தை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு கனக்கின்ற மனத்துடன் அனுதாபத்தையும் தெரிவித்துவிட்டு அறிவு பூர்வமாக அலசினால் எழும் கேள்விகள்: (1) எதற்கெடுத்தாலும் கண்ட்ரோல் கொள்கை முழக்கி தொழில் வர்த்தகப் பொருளாதாரத்தை இரும்புப் பிடியில் சிக்க வைத்திருக்கும் அரசு இது போன்ற ஆபத்தான ரசாயனப் பொருள் உற்பத்தி ஆலைகளில் போதிய அளவு பாதுகாப்பு, முன்ஜாக்கிரதை இருக்கிறதா என்ற விஷயத்தில் கண்ட்ரோலில்லாமல் கவனக் குறைவாக இருந்தது எப்படி? (2) அமெரிக்காவில் சகல விதமான முன்னெச்சரிக்கைகளுடன் செவ்வனே இயங்கும் ஆலை இந்தியாவில் நிறுவப்படும் போது அதை நிர்வகிக்கும் நம்மவரிடம் மட்டும் மெத்தனமும் அலட்சியப் போக்கும் குடிகொண்டு விடுகிறதே எதனால்? (3) இது போன்ற விஷ வாயு கலந்த ரசாயனப் பொருள் உற்பத்தி ஆலையின் சுற்று வட்டாரத்தில் குடியிருப்புக்கள் எழ அனுமதிக்கப்பட்டது. அல்லது குடியிருப்புக்கள் உள்ள இடத்தில் இத்தகைய ஆலை உருவாக அனுமதிக்கப்பட்டது ஏன்? இதற்கெல்லாம் ஆட்சியாளர்கள் பதில் கூறியே ஆக வேண்டும்.

○ பொன்னி, நாகப்பட்டினம் ★

? உங்கள் வீட்டுச் சுவரில் தேர்தல் சின்னம் போடப்பட்டு விட்டதா?

! இத்தனை காலமாக காம்பவுண்டு சுற்றுச் சுவரில்தான் எழுதுவார்கள். இப்போது உள்ளே வந்து வீட்டுச் சுவரிலேயே எழுதி போஸ்டர்களும் ஒட்டுகிறார்கள். கட்சிக் கொள்கைகளைப் பற்றி யோசியாமல் தலைவரையும் அவரது சின்னத்தையும் மட்



○ சினிமா பாபுலாரிடி



○ தேர்ந்த அரசியல்வாதி



○ வெடி வைத்துத் தகர்த்து....



○ அழகில்....

டுமே கருத்தில் கொண்டு மக்கள் வோட் டுப் போடுகிறவரை இந்த அநாகரிகமும் தொடரும்.

○ எஸ்.எஸ். ரவீந்திர ஹரிஹரன், சிவகாமலை

? சமீபத்தில் தங்களுக்கு ஏற்பட்ட தர்மசங்கட மான நிலைமை ஒன்றைக் கூறுங்களேன்?

! ஸபையர் தியேட்டர், திங்கள் கிழமை, 4—12—84, மாலை. ஏ.ஸி. தியேட்டர் அது. ஜன்னல், எக்ஸாஸ்ட் ஃபேன் ஏதும் கிடை யாது. கோட்டை போல் சுவர்கள். உள்ளே ஹவுஸ்ஃபுல். ஏஸி போடப்படவில்லை. முன்னறிவிப்பு கிடையாது. டிக்கெட் கிரயம் அதே. இருந்த நாலைந்து பெடஸ் டல் ஃபேன்கள் உஷ்ணத்தைக் கிளப்பி விட் டனவே தவிர குளிர்விக்கவில்லை. எவ் வளவு ஆரோக்கியமற்ற சூழ்நிலை அது! கேட்பார் யார்? சினிமாவில் நடப்பது வாழ்க்கையில் நடக்கக் கூடுமானால் அந்த டாப் கிளாஸ் படத்தில் (லவ் அண்டு புல்லெட்ஸ்) ஹீரோ சார்லஸ் பிரான்ஸன், குண்டர்கள் தலைவனுடைய கோட்டையை வெடி வைத்துத் தகர்த்தது போல் நானும் தியேட்டரை நொறுக்கித் தள்ளி விருப்பேன். ஆனால் நாகரிகம் கருதி சண்டை கூடப் போடாமல் வந்து, இதோ என் ஆட்சேபணையை எழுதித் தெரிவிப்ப துடன் சரி.

○ லீலா, புதுவை

? வைஜயந்திமாலா, அமிதாப்பச்சன் தேர்தலில் நிற்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

! ஒரு காலத்தில் சினிமாக்காரர்கள் கட்சி என்று தி.மு.க.வை ஏளனம் செய்த காங்கிரஸ் இன்று சினிமா நட்சத்திரங் களே கதி என்று அடிமையாகிக் கிடக்கிற விநோதத்தைத்தான் நினைத்துச் சிரிக்க வேண்டியுள்ளது. நீங்கள் குறிப்பிட்ட இருவரைத் தவிர சுனில் தத், சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர்., ஜெயலலிதா முதலியவர்களையும் சேர்த்துக் கொள் ளுங்கள்!

○ மங்களா சேஷாத்திரி, சென்னை-50

? இரா. செழியன் வைஜயந்திமாலா - கைதேர்ந்த அரசியல்வாதி சினிமா பாப்புலாரிட்டியை வெல் வாரா?

! வெல்வாரா தெரியாது; வெல்லவேண்டும் தெரியும்.

○ சேது புகழேந்தி, பழனி

? சமீபத்தில் தங்கள் உள்ளத்தைத் தொட்ட நிகழ்ச்சி?

! ஆப்பிரிக்க நாடுகள் பலவற்றில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது — முக்கியமாக எதி யோப்பியாவில். எத்தனையோ முன் னேற்றங்கள் ஏற்பட்டுள்ள இந்தக் காலத் தில்கூட கடும் பஞ்சம் உருவாவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்று கணிப் பதற்கோ முன்னெச்சரிக்கையான நட வடிக்கைகள் எடுப்பதற்கோ அந்த நாட் டின் ஆட்சியாளருக்குத் தெரியவில்லை. இது ஒரு பக்கம். மறுபுறம் ஐரோப்பாவில் பால் உற்பத்தி அபரிமிதமாகப் பெருகி விட்டதால் பால் தண்ணீர் பட்ட பாடாகி விட்டது. பால் இழந்த மதிப்பை மீண்டும் பெறுவதற்காக உற்பத்தியைக் குறைக்கும் நோக்கில் ஆயிரக் கணக்கான பசுக்களைக் கொன்றுவிட மேற்கு ஜெர் மனி திட்டம் தீட்டியிருக்கிறது! இதற்குப் பதில்... பால் பவுடர் தயாரித்து ஆப் பிரிக்க நாடுகளுக்கு அனுப்பக் கூடாதா? அதென்ன மனிதாபிமானத்தையும் மீறிய ஒரு சுயநலம்!

○ நல்லாலம் காசிநாதன், கீழ்கொவளைவேடு

? 84ம் ஆண்டு ராசி இல்லாத ஆண்டோ?

! ஒட்டு மொத்தமாய் ஒரேயடியாய்ப் பழிக் காதீர்கள். அதில் நடந்த நல்ல காரியங் களையும் பட்டியல் போட்டுப் பாருங்கள்.

○ பொன் ராஜேந்திரன், முருகப்பேட்டை

? பிரிட்டிஷ் துணைக் கமிஷனர் சுடப்பட்டது இந்தியாவுக்குக் களங்கம்தானே?

! இந்திய ராஜதந்திரி ஒருவர் சிலகாலம் முன் இங்கிலாந்தில் படுகொலை செய்யப் பட்டது இங்கிலாந்துக்கும் களங்கம்தான்.

○ டாக்டர் நாவலர்தாசன், சென்னை

? நியூயார்க் மருத்துவ மனையில் எடுத்த எம்.ஜி. ஆர். உருவப்படம் தேர்தலுக்கு முன் நாளி தழில் வெளியிடப்படுமா?

! புகைப்படம் எடுத்து விட்டார்கள். நாளிதழில் வந்திருக்கிறது. போஸ்டரில் கூட இடம் பெறும். தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்பு.

○ நாகை ஜி. அஹ்மது, சென்னை-1

? அ. தி. மு. க. ஜெயிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். முதல்வர் எம். ஜி. ஆர். என்றே வைத்துக் கொள்வோம். அவர் எப்படி பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்வார்?

! பூரண நலம் பெற்றுவிட்டால் வழக்கம் போல; இல்லாதபோனால் வேட்பாளர் நியமன மனு எப்படித் தாக்கல் செய் தாரோ அப்படி இதையும் செய்துவிட்டுப் போகிறார். இது என்ன பிரமாதம்!

○ ஏ. எஸ். பி. விஸ்வநாதன், செந்தாரப்பட்டி

? தேர்தலுக்காக முளைத்துள்ள காளான் கட்சிகள் பற்றி....?

! சில காளான்கள் மற்ற கட்சிகளுக்கு உணவாகிவிடும். உணவாக முடியாத காளான்கள் தாமே காய்ந்து உலர்ந்து மறைந்துவிடும்.

○ எம். ஏ. பாஷா, சின்ன சேலம்

? ராதா, அர்ச்சனா, ஸ்ரீவித்யா, ஷோபனா நடிப்பில் அழகில் யார் டாப்?

! ந-ல் 2; அ-ல் 4.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:

நாகை பொன்னி, "கலைக்குடில்",
77, பெருமாள் தெற்கு வீதி,
நாகப்பட்டினம்-611 001

இந்த வருடத்து சங்கீத கலாநிதி

நல்ல வெட வெடவென்ற உயரம். தீர்க்கமான நாசி. நெற்றியில் பளிச்சென்று திருமண். மிருதுவான குரல்... இவர்தான் இவ்வாண்டு சங்கீத கலாநிதி விருது பெறும் வீணை வித்துவான் மைசூர் வி. துரைசாமி ஐயங்கார்.

மைசூர் சமஸ்தான ஆஸ்தான வித்துவான் வெங்கடகிரியப்பா குரு. அவருடன் சேர்ந்து, தமது பன்னிரண்டாவது வயதிலேயே வீணை வாசித்த பெருமை துரைசாமி ஐயங்காருக்கு உண்டு.

''மகாராஜா கிருஷ்ணராஜ உடையார் முன் வாசித்திருக்கிறேன். மகாராஜாவுக்கு இசையில் அபார அக்கறை. 'என்ன... உங்களுக்குக் கீழே ஏதாவது சிஷ்யர்களைத் தயார் பண்ணிக் கொண்டிருக்கிறீர்களா?... இங்கே கூட்டிக்கொண்டு வந்து வாசிக்கச் சொல்லுங்கள்!' என்பார் எங்கள் குருவிடம். அப்போது என் குரு என்னையும் அங்கே வாசிக்கச் சொல்லுவார். அது 1933ஆம் வருஷம். பெரிய பெரிய சங்கீத வித்துவான்கள் எல்லாரும் அந்த அரண்மனையில் அன்று வாசித்திருக்கிறார்கள். அந்தக் காலத்தில் அவர்களுக்கெல்லாம் வேற்று மாநிலத்தவர், வேற்று மொழிக்காரர் என்ற நினைப்பே இருந்ததில்லை. உண்மையான கலைஞர்களை எல்லாம் ஊக்குவிக்க வேண்டும் என்றுதான் அப்போது நினைத்தார்கள்!''

பதினைந்து வயதிலேயே ஆஸ்தான வித்துவான் ஆன பெருமையும் இவருக்கு உண்டு. பள்ளி, கல்லூரிப் படிப்பு எல்லாம் மைசூரிலேயே. இருபத்தைந்து வருடங்களாக பெங்களூர் வானொலியில் தயாரிப்பாளராக இருந்திருக்கிறார்.

மனைவிக்கும் இசையில் நல்ல விருப்பம் உண்டாம். மூன்று பையன்களில் இரண்டாமவர் – ரிசர்வ் பாங்கில் பணியாற்றும் பால கிருஷ்ணன் – இவருடன் கச்சேரிகளில் வாசிக்கிறார். ஒரே மகள். அவளும் வீணை வாசிப்பாளாம். துரைசாமி ஐயங்காருக்கு மேற்கத்திய இசையிலும் தேர்ச்சி உண்டு. பல பரீட்சைகள் தேறியிருக்கிறார்.

''இசை என்று பார்க்கிறபோது கர்நாடக ஹிந்துஸ்தானி – மேற்கத்திய இசை எல்லாவற்றின் பலனும் ஒன்றுதான். நாத வடிவில் நீங்கள் உங்களை வெளிப்படுத்த உதவுகிறது; இல்லையா?'' என்று கேட்கிறார்.

ஈரான், அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் எல்லாம் நிறையக் கச்சேரிகள் செய்திருக்கிறார் இவர். ''புரிகிறதோ, இல்லையோ, மேற்கத்திய ரசிகர்கள் தீவிரமாக அமர்ந்து கேட்கிறார்கள். இசையை நாத ரூபமாய் ரசிக்க மொழி தடையாக இருப்பதில்லை'' என்கிறார் இந்த பத்மபூஷண்.

இரண்டு மூன்று மணி நேரம் தினசரி வாசிக்கிறா. வீணை மாதிரி வாத்தியத்துக்கு

○ இயற்கையான நாதம்...

இப்படி தினசரி பயிற்சி அவசியமாம். நல்ல கச்சேரி இருந்து, ஊரில் இருந்தால் கட்டாயம் போய்க் கேட்கிறார். ''அப்படிக் கேட்டால்தான் புதுமையாக வாசிக்கத் தோன்றும்.''

நேரம் கிடைக்கிறபோது இசையைப் பற்றிச் சிந்திக்கிறார்.; படிக்கிறார். புதுப் புது உருப்படிகள் நிறைய வாசிக்கவே விரும்புகிறார். ''எல்லா வித்வான்களும் செய்ய வேண்டியது இது. குறைவான உருப்படிகள் தெரிந்திருந்து ரொம்ப நாள் தாக்குப்பிடிக்க முடியாது!''

1964ல் ஆலத்தூர் சகோதரர்களில் திரு சுப்பிரமணிய ஐயருக்கு 'சங்கீத கலாநிதி' விருது அளித்தபோது, மைசூர் சௌடய்யா வந்திருந்தார். ஆனால் மியூசிக் அகடமியில் அவருக்குத் தேதி எதுவும் ஒத்து வரவில்லை. ''என்ன இந்த வருஷம் இப்படி பண்ணிவிட்டீர்கள்! இது நியாயமா? நீங்கள் வாசிக்காமல் இருக்கலாமா?'' என்று எல்லோரும் அவரைக் கேட்டார்கள்.

'''நாளைக்கு மைசூர் துரைசாமி ஐயங்கார் வீணை வாசிக்கிறாரே, அவருடன் நான் வயலின் வாசிக்கிறேன்!'' என்றார் திடீரென்று. அன்று என்னை மட்டுமல்ல, எல்லாரையுமே மகிழ்ச்சி ததும்பும் ஆச்சரியத்தில் அமிழ்த்தி விட்டார் மேதை சௌடய்யா!''

துரைசாமி ஐயங்கார் வீணைக் கச்சேரிகளில் காண்டாக்ட் மைக் உபயோகிப்பதில்லை. சாதாரண மைக்தான் இயற்கையான நாதத்தை வெளிப்படுத்தும் என்கிறார்.

இவருடைய நாற்பது வருட நண்பர், நாவலாசிரியர் ஆர். கே. நாராயணன்.


-எஸ். வி. என்

படம்: யோகா



பேர்லின் சுவர்ப் பிரச்சினைகள்

ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்



8

பிரச்சினைகள் இருந்தால் அவற்றைத் தவிர்க்க நடுவே சுவரும் வேலியும் வரும் என்று கேள்விப்பட்டும் கண்டுமிருக்கிறோம். பேர்லினிலோ சுவர் ஏற்பட்ட பிறகுதான் பிரச்சினைகளே வந்திருக்கின்றன. பேர்லின் சுவர் ஒரு மனிதாபிமானத் தடையாக (Rejection of Humanity) கருதப்படுவதோடு, எதற்காகச் சுவர் ஏற்பட்டதோ, அந்த நோக்கமும் முழுமையாக நிறைவேறிவிட வில்லை. 1961ல் ஏற்பட்ட பேர்லின் சுவருக்கு இருபது வயதுக்கு மேல் ஆகிவிட்டாலும் பிரச்சினைகளுக்கு வயதே முதிராமல் அன்று தோன்றியபடியே இன்னும் இருக்கின்றன.

இருபதாண்டு காலத்துக்குள் கிழக்கேயிருந்து மேற்கே வரும் முயற்சியில் எழுபதுக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்திருக்கின்றனர். இவர்களில் பலர் கிழக்கு ஜெர்மனியின் எல்லைப் பாதுகாப்புப் படையினரின் மிஷின் கன்னுக்கு இரையானவர்கள். முயற்சியில் காயமடைந்தவர்கள் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள். இவ்வளவு தடைகளையும் மீறிச் சுமார் முப்பத்தொன்பதாயிரம் பேருக்கு மேல் கிழக்கேயிருந்து மேற்கே தப்ப முடிந்திருக்கிறது. தப்பியவர்களில் பல நூற்றுக் கணக்கானவர்கள் கிழக்குப் பகுதி இராணுவ சேவையில் இருந்தவர்கள் என்பதை அறியும் போது நம் ஆச்சரியம்மேலும் அதிகமாகிறது.

சுவரைக் கடந்து மேற்கே வரும் முயற்சியில் மிகப் பரிதாபகரமான முடிவு ஏற்பட்டது ஒரு 18 வயது கிழக்கு ஜெர்மன் இளைஞனுக்கு. 1962 ஆகஸ்டில் கிழக்குப் பகுதி எல்லைப் பாதுகாவலர்களால் சுடப்பட்டுச் சுவரின் அடியிலேயே குருதி சிந்தி வீழ்ந்தான் இந்த இளைஞன். இதை எதிர்த்து மேற்கு பேர்லினில் பல நாள் அனுதாபப் பேரணிகளும், ஊர்வலங்களும் நடந்தன. மனிதாபிமான உணர்வு கொழித்தது. ஆயினும் பலன் எதுவும் இல்லை.


1963ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி கென்னடி மேற்கு பேர்லினுக்கு விஜயம் செய்ததையும் பேர்லினில் ஷோன்பேர்க் டவுன் ஹாலிலிருந்து (Schoneberg Town hall) ''எல்லாச் சுதந்திர மனிதர்களும் அவர்கள் உலகில் எங்கிருந்தாலும்பேர்லின்வாசிகளாகிறார்கள். அந்த வகையில் ஒரு சுதந்திரமான நபர் ஆகிய நானும் ஒரு பேர்லின் வாசிதான்'' என்று உற்சாகமாக முழங்கியதையும் மேற்கு பேர்லின் வாசிகள் இன்னும் பசுமையாக நினைவுகூர்கிறார்கள். கென்னடி அமரரான போது இந்த நகர அரங்கின் சதுக்கத்திற்கே 'ஜான் எஃப் கென்னடி சதுக்கம்' என்று பேர்லின் வாசிகள் மிகவும் நன்றியுடன் பெயர் மாற்றம் செய்தார்கள். அநேகமாக எல்லா அமெரிக்க ஜனாதிபதிகளுமே பேர்லினில் பிரியமாக வரவேற்கப்பட்டிருந்தாலும் கென்னடியின் மேல் அதிகப் பிரியம் இருப்பது நன்கு தெரிகிறது. அடிக்கடி கென்னடி பற்றிக் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள்.

சுவர் வந்ததை யொட்டி ஒரு நகரின் மற்றொரு பகுதிக்குச் செல்லவே பாஸ் போர்ட் விசா — குறைந்தபட்ச அந்நியச் செலாவணித் தொகை என்ற நிர்ப்பந்தம் எல்லாம் ஏற்பட்டு விட்டன. முன் ஒரு

✕ இரண்டு பேர்லினையும் பிரிக்கும் ஒரு பாலம்



காலத்தின் புகழ்பெற்ற பிரிக்கப்படாத பெர்லினிலிருந்து ஐந்நூறு ரயில்கள் நாள் தோறும் நாலா திசைகளிலும் சென்று கொண்டிருந்தன. இன்று சுவருக்குப் பிறகு ரயில்வே நிர்வாக அலுவலகம் கிழக்கே சிக்கி விட்டது. பல இரயில் தடங்கள் துருப் பிடிக்கின்றன. வரலாற்றுப் புகழ் மிக்க சில கட்டிடங்கள், பகுதிகள், கலாசாரச் சின்னங்கள் கிழக்கு பெர்லினில் சிக்கி விட்டன. இரயில்வே கேந்திர நிர்வாகம் டெலிஃபோன் ஆகியவற்றின் கதியும் இதுவே.



✖ பளிச்சிடும் மேற்கு பெர்லின்

நாங்கள் பெர்லின் நகரைச் சுற்றிப் பார்க்க கிளம்பிய முதல் நாளன்று காலையிலேயே சுவருகில்தான் கொண்டு போய் நிறுத்தினார்கள். போகிற வழியில் அரண்மனைபோன்ற ஒரு மாளிகையைக் காட்டி, எங்கள் உதவியாளர் கூறினார்: ''நான்கு வல்லரசுகள் ஜெர்மனியைக் கைப்பற்றி வென்ற பின் அவர்களுக்குள் ஏற்பட்ட ஓர் ஒப்பந்தத் தின்படி பிடிபட்ட நாஜி கைதிகளை மேற்கு பெர்லினில் சிறைவைத்துப் பராமரிக்கும் பொறுப்பை சோவியத் யூனியன் நீங்கலான மற்றவர்கள் ஏற்றார்கள். இப்போது இந்தப் பிரம்மாண்டமான அரண்மனை போன்றசிறை கூடத்தில் தொண்ணூற்று நாலு வயதான ஒரே ஒரு நாஜி கைதி மட்டுமே இருக்கிறார். அவரைப் பராமரிக்கவும், பாதுகாக்கவும் மட்டுமே மேற்கு பெர்லின் ஒரு மில்லியன் மார்க் (சுமார் நாற்பது லட்ச ரூபாய்) செலவழிக்க



✖ ரெய்ஸ்டாக் மாளிகை

வேண்டியிருக்கிறது. ''இந்தச் செலவுக்குக் காரணமான 'ருடால்ஃப் ஹெஸ்' Rudolf Hess மிகவும் மூத்துத் தளர்ந்து ஒடுங்கிச் செயலற்றுப் போனதால் அவரை விட்டுவிடலாம். அவரால் மறுபடி நாஜி இயக்கத்தை வளர்த்திட முடியாது'' என்று மேற்கத்திய வல்லரசுகள் கருதியபோதிலும் சோவியத் யூனியன், ''அவ்வாறு செய்ய முடியாது! கூடாது! ஒப்பந்தத்தைக் காப்பாற்றித்தான் ஆக வேண்டும்'' என்று கண்டிப்பாக மறுத்து விட்டது.''

மேற்கு ஜெர்மனியில் குடியேறிய துருக்கியர்கள் வசிக்கும் பகுதியை ஒட்டிய பெர்லின் சுவருகே எங்கள் குழு போய் இறங்கியது. அந்த இடத்தில் சுவரை ஒட்டித் தரையிலிருந்து உயர்த்திக் கட்டிய ஒரு பார்வை மாடத்தி (View point) லிருந்து சுவரின் கிழக்குப் பகுதியையும், கிழக்குப் பெர்லினையும் பார்த்தோம். எதிர்ப்புறம் கிழக்கு ஜெர்மன் எல்லைப் பாதுகாவல் படையினர் எந்திரத் துப்பாக்கிகளோடு அதே உயரத்துக்கு மற்றொரு பரணில் அதி விழிப்பாகக் காவல் செய்து கொண்டிருந்தனர். பரணில் ஏராளமான 'ஸர்ச்லைட்கள்' ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன.

''கிழக்குப் பக்கத்தை நோக்கி உங்கள் காமிராவையோ ஃப்ளாஷையோ குறி பார்க்கவோ, ஃபோகஸ் பண்ணவோ செய்யாதீர்கள். ஆபத்து'' — என்று எங்களை எங்களுடைய ஜெர்மன் உதவியாளர் எச்சரித்தார்.

கிழக்குப் பக்கம் சுவருக்கு அப்பாலும் பல கெஜ தூரம் சுவரை நெருங்கவே முடியாதபடி முள் கம்பிச் சுருள், சுரங்கவெடி முதலிய பல தடைகள் தெரிந்தன. கிழக்கு பெர்லினின் மிக உயரமான டெலிவிஷன் டவரும் ஆரவாரமற்ற தெருக்களும் அமைதியான கட்டிடங்களும் தெரிந்தன. மேற்குப் பக்கத்துச் சுவரில் பல வண்ணங்களில்

நா. பார்த்தசாரதி

ஜெர்மன் ஒற்றுமையை வரவேற்கும் கோஷங்கள், சித்திரங்கள், கார்ட்டூன்கள் எழுதப்பட்டிருந்தன. ''ஒன்றுபட்ட ஜெர்மனியே எங்கள் லட்சியம்'' – ''சுவர்கள் தற்காலிகமாக மனித நேயத்தைத் தடுக்கலாம் ஆனால் நிரந்தரமாகத் தடுத்து நிறுத்திவிட முடியாது'' – போன்ற வாசகங்கள் ஜெர்மனிலும், சிற்சில இடங்களில் ஆங்கிலத்திலும் கூட எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தோம். உயரமான பார்வை மாடத்திலிருந்து பருந்துப் பார்வையாகக் கிழக்குப் பக்கமும், மேற்குப் பக்கமுமாக நகரை மாறி மாறிப் பார்த்தபோது ஒரு விஷயத்தை நன்றாகவே தெரிந்து கொள்ள முடிந்தது. மேற்கே புதுப்பித்தல் (Restoration) வேலைகளும், சீரமைப்புப் பணிகளும் படு துரிதமாக நடந்து நகரம் புதுப் பொலிவுடன் டலிச்சிடுவது தெரிந்தது. கிழக்கே அவ்வளவு துரிதம் தெரியவில்லை. அமைதியும் அடக்கமுமாக மெல்ல மெல்லப் புதுப்பிக்கப்படுகிற நிதானமே தெரிந்தது. பரபரப்பும் ஆரவாரமும் கூடக் கிழக்கே குறைவுதான்.

மேற்கு பெர்லினின் நட்ட நடுப் பகுதியில் யுத்த அழிவுகளின் நினைவாக ஒரே ஒரு சர்ச் கோபுரத்தை மட்டும் அப்படியே அன்று அழிந்திருந்த நிலையில் இன்றும் வைத்துப் பாதுகாக்கிறார்கள். 'குர்ஃபுர்ஸ்டெண்டாமம்' (Kurfurstendamm) என்ற அந்த உடைந்த கோபுரம் மேற்கு பெர்லினின் முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்குகிறது. குர்ஃபுர்ஸ்டெண்டாம் அருகே உள்ள 'ஐரோப்பா சென்டர்' மேற்கு பெர்லினில் அவசியம் பார்க்க வேண்டிய இடம். குர்ஃபுர்ஸ்டெண்டாம் பகுதியின் மறு கோடியில் அமைந்திருந்த 'ஹோட்டல் ஹாம்பர்க்'கில் தான் நாங்கள் தங்கியிருந்தோம்.

மேற்கு பெர்லின் பகுதியையும், கிழக்கு பெர்லின் பகுதியையும் இணைக்கும் பிரெண்டன்பர்க் கேட் அருகே உள்ள யுத்த நினைவுச் சின்னத்தைப் பார்க்கச் சென்றபோது மறுபடி சுவர்ப் பிரச்னை எழுந்தது. இந்தச் சதுக்கம் மேற்கு பெர்லின் பகுதியில் இருந்தாலும் ஒரு தூதரக வளாகமாகவே (Diplomatic enclave) கருதப்படுகிறது. ஓர் அரை வட்ட அளவுக்குக் காம்பவுண்ட் எடுத்திருக்கிறார்கள். மேற்கு பெர்லின் பகுதியிலிருந்து உள்ளே நுழையும் வாகனங்கள், நபர்கள் மெதுவாக நகர்ந்து பார்த்துவிட்டுத் திரும்ப மட்டும் அனுமதி இருக்கிறது. எங்கள் வாகனத்திலிருந்து கீழிறங்காமலே நாங்கள் பிரெண்டென்பர்க் பகுதியைப் பார்த்தோம்.

மேற்கு பெர்லினின் பழைமையான ரெய்ஸ்டாக் மாளிகையின் (Reichstag Building பின்புறம் ஓர் ஆறு இருப்பதால் அங்கு சுவர் கட்டப்படவில்லை. ஆற்று நீரின் ஆழத்தையே சுவராக விட்டிருக்கிறார்கள். நீர்ப் பரப்பைத் தவிர்த்து இருபுறமும் சுவர் நீளுகிறது.

கடும் பனி கொட்டுகிற நவம்பர் டிசம்பர் மாதங்களில் இந்த ஆற்றை முக்குளித்து நீந்திக் கடக்க முயன்று உயிரிழந்த சிலரின் சமாதிகளை மேற்குப் பக்கம் 'ரெய்ஸ்டாக்' கட்டிடத்தின் பின்புறம் பார்த்தோம். கட்டுக்காவல் பயங்கரத்தையும் டிசம்பர் மாதக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாமல் ஆற்றைக் கடந்து மறுபுறம் வர அவர்களை எந்த உணர்வு தூண்டியிருக்கும் என்று எண்ணியபோது மனத்தைச் சோகம் வந்து கப்பியது. கென்னடி கூறிய இலக்கணப்படி சுதந்திர மனிதர்களாகிய நாமே நமது உறவினர்களை அந்த ஆற்றுக்குப் பலிகொடுத்து விட்டது போல உணர்வதைத் தவிர்க்க முடியவில்லை. சிலுவைக் குறியோடு கூடிய வரிசையான அந்தச் சமாதிகளையும் அவற்றின் மேல் வருவோர் போவோரே வைத்துள்ள மலர்களையும் மலர் வளையங்களையும் பார்க்கும்போது சற்றுத் தொலைவில் தென்படும் மங்கலான அந்தச் சுவரின் மேல் நமக்கு ஆத்திரமும் எரிச்சலும் மூளுவதை எவ்வளவு முயன்றாலும் அடக்க முடியாமல் போகிறது. (தொடரும்)

கரப்பான்பூச்சி உணவாகிறது!



கரப்பான் பூச்சிகளில் 3000–க்கும் மேற்பட்ட வகைகள் உண்டு. இவைகள் அனைத்தும் விஷம் இல்லாதவை.

துருவப் பிரதேசங்களில் கூட கரப்பானைக் காணமுடியும். ஜெர்மனிதான் இப்பூச்சிகளுக்குத் தாய்நாடு.

எதிரி என்ற பெயரில் கரப்பான் என்ற வார்த்தை பயன்படுகிறது. உதாரணமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ரஷ்யன் என்று கரப்பானை வேடிக்கையாகக் குறிப்பிடுவார்கள்.

வெப்பப் பிரதேசங்களில், நல்ல பச்சை, மஞ்சள், சிவப்பு, நிறங்களில் கூட இப்பூச்சிகளைக் காணமுடியும்!

அணுகுண்டு வெடித்தாலும் கரப்பான் பூச்சிகள் தப்பித்து உயிர்வாழ்ந்து நூற்றுக்கணக்கில் பரவ முடியுமாம்! இதனால் தான் பூச்சிக் கொல்லிகள் கரப்பானை ஒழிக்க முடிவதில்லை.

தாய்மார்களே! ஜாக்கிரதை! சிசுக்களின் தலை முடியைக் கரப்பான் விரும்பி உண்ணும்!

வைட்டமின்கள் புரதச்சத்து, தாது உப்புக்கள் கொண்ட கரப்பான் பூச்சிகளைத் தாய்லாந்து நாட்டினர் சமைத்துச் சாப்பிடுகிறார்கள்.

ஆதாரம்: இந்தியன் எக்ஸ்பிரஸ். விசிதி.

இந்தியாவின் இந்திரா
5

ஆகஸ்ட் மாதம். வெய்யில் மிதமான நடுப்பகல் நேரம். அந்த அழுகைச் சத்தத்தைக் கேட்டு ஆனந்த பவன் மொத்தமும் சிரித்தது-கூட்டித்தழுவிக்கவலை அற்று ஆடியது. மிட்டாய் தந்து. இன்று பூரித்தது.

இந்திரா மெல்லக் கண்ணைத் திறந்தார். அருகில் கிடந்த குழந்தையைப் பார்த்தார். அப்படியே அப்பா. அச்சு. அதே சிவந்த நிறம். பரந்த நெற்றி. அசதியாய் இருந்தது ஆனாலும் சந்தோஷம் ததும்பிற்று. பழைய் நினைவுகள் மனத்தைக் கிளறின. 'உன்னால் முடியாது' என்ற வார்த்தை ஒரு சருகாய் உதிர்ந்திருந்தது. பெண்ணாய்ப் பிறந்தவளுக்கு விடப்பட்ட சவால் அருகில் பூவாய் மலர்ந்திருந்தது. இதோ! தன்னுடைய தனிமையான நாட்கள் முடிந்து போயின. பேசுவதற்குக் கூட ஆளற்று தன்னுக்குள்ளே சுருண்டு ஒடுங்கின யுகங்கள் முடிந்து போயின. வேர் கொண்டு நிற்க மண்ணில்லாமல் அங்கேயும் இங்கேயும் அலைபட்ட நாட்கள் முடிந்து போயின. துயர் போயின. போயின துன்பங்கள்.

இவனை நன்றாக வளர்க்க வேண்டும். உடலாலும் மனத்தாலும் ஆரோக்கியமாக வளர்க்க வேண்டும். அப்பாவும் அம்மாவும் அருகில் இல்லாமல் தான் குழந்தையில் அனுபவித்த தனிமைகளை இவன் அனுபவிக்கக் கூடாது. தன்னைப் போல் ஊர் விட்டு ஊர் போய் ஒவ்வொரு பள்ளியாய்ச் சேர்ந்து, கடைசி வரை நேசம் கொண்ட ஆசானும் நெருக்கம் கொண்ட ஸ்நேகமும் அற்றுப் போய்விடக் கூடாது. இவன் வெறும் பிள்ளை இல்லை. என்னால் முடியும் என்பதை உலகிற்குச் சொன்னவன். என் மனோ சக்திகளுக்குக் கிடைத்த மனித உருவம். இயற்கை எனக்கு அளித்த கொடை.

இந்திராவின் மிகப் பெரிய் பலவீனங்களில் ஒன்று குழந்தை. நேருவின் பிறந்த நாளைக் குழந்தைகள் தினமாகக் கொண்டாட ஏற்பாடு செய்தவர் அவர் தான். தன்னுடைய பிள்ளைகள் மீது ஒரு அதீதமான சென்டிமென்ட் அவருக்கு



*பிள்ளைகள் மீது அதீதமான சென்டிமென்ட் அவருக்கு. அதுவே அவருடைய பலமும் பலவீனமும் ஆகியது.

மாலன்

இருந்தது. இதுவே அவருடைய பலமும் பலவீனமுமாக ஆகியது.

அம்மா மீது அதிக ஒட்டுதல் கொண்டிருந்த இந்திரா பிள்ளைக்கும் அதே பெயரை வைத்தார். கமலா என்றால் தாமரை. ராஜீவ் என்றால் கமலம்.

அம்மாவை விட்டுப் பிரியாது இருந்தது போலவே குழந்தைகளையும் விட்டுப் பிரியாது இருந்தார். குழந்தைகள் பள்ளிக்குப் போகிற வயது வரை, வெளி உலகின் நிகழ்ச்சிகளில் தலைகாட்டவே இல்லை. தானுண்டு தன் குழந்தைகள் உண்டு. வீட்டை விட்டு வெளியில் வருவது, இந்தியா கேட்டிற்குப் போய் குழந்தைகளுக்கு ஹைட்ரஜன் பலூன் வாங்க, இல்லையென்றால் ராஷ்டிரபதி பவன் ஸ்விம்மிங்பூலுக்குக் குழந்தைகளை அழைத்துப் போக. அதுவும் தப்பினால் ஒக்லா ஏரியில் மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்க.

ராஜீவ் அழவில்லை

நேரு சுற்றுப் பயணம் போகும் போதெல்லாம் இந்திராவையும் கூட வரும்படி அழைப்பது வழக்கம். ''வேண்டாம்ப்பா. குழந்தைகள் தனியாக இருக்கும்'' என்று மறுத்து விடுவாள் இந்திரா.

''தனி என்ன தனி. இத்தனை ஆட்கள் இருக்கிற வீட்டில்.''

''இல்லேப்பா. வேண்டாம்.

''இப்படிப் பொத்திப் பொத்திக் குழந்தைகளை வளர்க்கிறது கொஞ்சம் கூட சரியில்லை இந்து.''

இந்த மாதிரி விவாதங்கள் டைனிங் டேபிளில் அடிக்கடி நடக்கும். ''இல்லே, நீ நிச்சயம் வருகிறாய். நான் தீர்மானம் பண்ணி விட்டேன்'' என்று கோபத்தில் இரைவது நிகழும். நேரு குரலை உயர்த்தி விட்டால் அடங்கிப் போவார் இந்திரா. அவர் வார்த்தைக்கு மதிப்பு வைத்துச் சுற்றுப் பயணம் கிளம்புவார். பாதி வழியில் சாக்குச் சொல்லி இரண்டு நாளில் திரும்பி விடுவார்.

தில்லியிலேயே குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க ஏற்பாடாயிற்று. ஹங்கேரிப் பெண்மணி நடத்தி வந்த கிண்டர்கார்டன். பிரதமர் வீட்டுப் பேரக் குழந்தைக்ள் என்று பள்ளிக்கூடத்தில் ஏக மரியாதை. வீட்டிற்குத் திரும்பி வந்தால் இந்திராவின் ஒட்டுதல். காலால் இட்டதைத் தலையால் செய்ய ஏகப்பட்ட வேலையாட்கள். இந்தச் சூழலில் பிள்ளைகள் வளர்ந்தால் சீக்கிரத்தில் கெட்டுப் போகும் என்று நினைத்தார் நேரு. தன் காலிலேயே நிற்கும் தைரியம் அற்றுப் போகும். சொந்தமாய்ச் சிந்திக்கிற சிந்தனை அற்றுப் போகும் என்று பயந்தார். குழந்தைகளை டேராடூனில் உள்ள பள்ளிக்கு அனுப்புவது என்று தீர்மானமாயிற்று. அத்தனை சின்ன வயதில் குழந்தைகளைப் பிரிவது என்பது இந்திராவிற்கு இன்னுமொரு இடி. ஆனால் இடிகள் இப்போது இந்திராவிற்குப் பழக்கமாகி விட்டது.

ராஜீவ் தொட்டாற் சுருங்கிக் குழந்தை. ரொம்பவும் சென்சிட்டிவ்வான பிள்ளை. ராஜீவிற்கு மூன்று வயது நடந்து கொண்டிருக்கும்போது சஞ்சய் பிறந்தான். சற்றுத் தாத்தாவைப் போன்ற சாயல். எல்லோர் கவனமும் புதிய குழந்தையின் மீது திரும்பியது. வருகிறவர்கள் எல்லாம் குட்டி நேருவைக் கொஞ்சத் தொடங்கினார்கள். தான் புறக்கணிக்கப்படுவதாகக் குழந்தை ராஜீவிற்குச் சந்தேகம். அம்மாவின் கவனத்தைக் கவர வேண்டும். என்ன செய்யலாம்? அடிக்கடி ராஜீவ் அழ ஆரம்பித்தான்.

இடைவெளி குறைந்த இரண்டு பிரசவங்களினால் இந்திராவின் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்தது. குழந்தைகளின் நன்மை கருதி குடும்பம் இப்போது லக்னோவில் இருந்து டில்லிக்குக் குடியேறியிருந்தது. இதனால் வீட்டை ஒழுங்குபடுத்துகிற வேலை கையைப் பிடுங்கிக் கொண்டிருந்த நேரம். இதற்கு நடுவில் சவலைக் குழந்தை ராஜீவ் அம்மாவைப் படுத்திக் கொண்டிருந்தான். இந்திராவிற்குப் பொறுக்கவில்லை. அதட்டிப் பார்த்தார். ஒன்றிரண்டு முறை முதுகில் போட்டார். அழுகை அதிகமாயிற்று. குழந்தை அழுவதைப் பார்த்து அம்மாவிற்கும் அழுகை வந்தது.

பையனை இழுத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டார். கண்ணைத் துடைத்தார். தலையைக் கோதினார்.

''நீ அழக் கூடாது ராஜீவ். நீ அழுதால் எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா?''

''....''

''நீ அழக் கூடாது. ஓகே?''

''நான் அழலேம்மா. எனக்குத் தெரியாமலேயே கண்ணுல தண்ணி வந்திடறது...''

குழந்தையின் பதிலைக் கேட்டு அம்மாவுக்குச் சிரிப்பு வந்தது.

''அப்படியா! இனிமே ஒண்ணு பண்ணு.''

''என்ன?''

குழந்தையின் கையைப் பிடித்துத் தோட்டத்திற்குக் கூட்டிப் போனார்.



''உனக்கு அழணும் போல இருந்தா, இல்லே இல்லே, உனக்குத் தெரியாம கண்ணுல தண்ணி வந்துட்டா, இந்த ஃபவுண்டன்கிட்ட வந்துடு. கண்ணிலிருந்து வர தண்ணியெல்லாம் இந்தத் தொட்டியில சேர்ந்திடும். சேர்ந்து அப்படியே தோட்டத்திற்குப் போயிடும்.''

'அதெப்படி?' என்கிற அதிசயம் புரியாமல் குழந்தை வெள்ளையாய்ச் சிரித்தது.

அதற்குப் பின் அழுகை வருகிற போதெல்லாம், ராஜீவின் காதருகில் 'பவுண்டன்' என்று கிசுகிசுப்பார் இந்திரா. அழுகை ஓய்ந்துவிடும்.

இந்திராவின் கடைசி ஊர்வலத்தை டீ.வி.யில் பார்த்தவர்களுக்குத் தெரியும். ராஜீவ் கடைசி நிமிடம் வரை கண்ணீர் விட்டு அழவில்லை. அங்குலம் அங்குலமாய் புழுங்கிய வீட்டில் மலர் செண்டுகளுக்கு இடையே சடலம் கிடத்தப்பட்டிருந்த நாட்களில், பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டு நின்றிருந்தார் அன்றி அழுது சிதறிவிடவில்லை. லட்ச லட்சமாய் ஜனம் பெருகி, ஒவ்வொருவரும் அழுது புலம்புகையில், உடைந்து பெருகவில்லை. சந்தனக் கட்டை மீது கிடத்திய மேனிக்கு நெருப்பு வைக்கும் நிமிடத்தில் கூட நெகிழ்ந்து விடவில்லை.

ஒரு காலத்தில் தொட்டாற் சுருங்கியாக, எடுத்ததற்கெல்லாம் அழுகிற குழந்தையாக இருந்த பிள்ளை இப்படிக் கல்லாய் இறுகிக் கனத்துப் போனது எவ்விதம்? அதற்கும் காரணம் அம்மாதான்.

பன்னிரண்டு வயதில் ராஜீவிற்கு ஒரு ஆபரேஷன் பண்ண நேர்ந்தது. டான்சில்ஸ். டாக்டர் தைரியம் சொன்னார்.

''பயப்படாதே. வலிக்கவே வலிக்காது.''

இப்படிப் பூசணிக் காயைச் சோற்றில் மறைப்பது பிள்ளைகளை முட்டாள் ஆக்கும் என்பது இந்திராவின் அபிப்பிராயம்.

''இல்லே ராஜீவ். டாக்டர் சும்மாச் சொல்றார். வலிக்கும். நிறைய வலிக்கும்.''

''வேண்டாம்மா, பயமா இருக்கு.''

ராஜீவ் அழத் துவங்கினான்.

''நான் சொல்றதை முழுசாக் கேட்டுக்கோ. வெறும்னே அழுதால் தலைதான் வலிக்கும்.''

அழுகை நின்றது. குழந்தை தலைநிமிர்ந்து பார்த்தது.

''வலிக்கும். இந்த ஆபரேஷன் வலிக்கும். எச்சில் விழுங்கும்போது நெருப்பாய் எரியும். ஆனால்...''

குழந்தையின் கவனம் உன்னிப்பாய்க் கூர்ந்தது.

''ஆனால் உன்னுடைய வலிகளை நீதான் தாங்கிக்கணும். உனக்குப் பசிச்சா அம்மா சாப்பிட முடியுமோ? உனக்கு வலிச்சா அம்மா வாங்கிக்க முடியுமோ? உன்னோட வலிகளை நீதான் வாங்கிக்கணும், உன்னோட துக்கத்தை நீதான் தாங்கிக்கணும்.''

குழந்தைக்குப் புரிந்ததோ என்னவோ? ஆனால் ராஜீவ் அழவில்லை. அதற்குப்பின் எதற்குமே அழவில்லை.

(தொடரும்)

நான் விரும்பும் வேட்பாளர்

பத்தாயிரம் ரூபாய் செலவில் (கட்சி ஐயாயிரம், மீதி நண்பர்கள் அன்பளிப்பு) ஒரு பிரபல காங்கிரஸ் எம். பி. யும் மிகப் பெரிய தோல் வியாபாரியுமான திரு அப்துல் சலாம் அவர்களையும், பிரபல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு எம். கல்யாணசுந்தரம் அவர்களையும் மும்முனைப் போட்டியில் வெற்றி வாகை இழக்கச் செய்து, மிகப் பெரும்பான்மை ஓட்டுக்கள் பெற்று, திருச்சி இரண்டாவது தொகுதி எம். எல். ஏ. வாக வந்து நான்கே ஆண்டுகள் பணி புரிந்தாலும் நாற்பது ஆண்டுகள் இருந்தது போல் மக்களுக்குச் சேவை செய்தவர் திரு ஆர். நாகசுந்தரம்

தொகுதி மக்களோடு நெருங்கிப் பழகி, தொடர்பு கொண்டு, பொதுமக்கள், தொழிலாளர், அரசு ஊழியர், கட்சி ஊழியர் அனைவரையும் திருப்தி செய்தவர்.

இவரிடம் எந்த நேரமும் போகலாம். பார்க்கலாம். பள்ளிக்கூட அட்மிஷன், ஆஸ்பத்திரியில் சேர்த்தல், வேலை வாய்ப்புகள், குற்றம் குறைகளைப் போக்குதல் முதலியவற்றை அவரிடம் கூறிப் பரிகாரம் பெறலாம்.

இவர் ஏறக்காழ 20 ஆண்டுகளாகக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தில் தொடர்ந்து டைரக்டராகப் போட்டி யின்றியே தேர்ந்தெடுக்கப்பட்டும் இந்த ஆண்டு துணைத் தலைவராகவும் போட்டி யின்றியே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். இந்த வங்கியின் மூலம் நூற்றுக் கணக்கானவர்களுக்கு வீடு கட்ட வசதி செய்து கொடுத்துள்ளார்.

இவர் தொகுதியில் சேரிகள் அதிகம். அங்கெல்லாம் குடியிருப்பு மனைப் பட்டாக்கள் வழங்கவும், வீடுகள் கட்டித் தந்தும், வேலை வாய்ப்புகள் தேடித் தந்தும் உள்ளார்.

பல சேரிகளில் மழைக் காலங்களில் வயல்களில் பிணங்களைத் தூக்கிப்போன நிலையைப் பார்த்து அங்கெல்லாம் நிலங்களைக் கையகப்படுத்தி, சாலைகள் அமைத்து, சுடுகாட்டுக்-கொட்டகை, படித்துறைகளைக் கட்டியும் வசதிகளைச் செய்து தந்ததை அந்தச் சேரி மக்கள் இன்னும் நினைவு வைத்திருக்கிறார்கள்.



இப்போது இவர் ஒரு முன்னாள் எம். எல். ஏ. இருப்பினும் அவர் தொடர்கதையாகவே செயல்படுகிறார். பல பிரச்னைகளுக்காக இன்றும் அவரை நாடி பலர் அணுகுகிறார்கள். அவர்களது பிரச்னைகளை யெல்லாம் முடிந்த அளவு தீர்த்து வைக்கிறார். அதிகாரிகளும் அவரை நன்கு வரவேற்று அவரது கோரிக்கைகளைத் தீர்த்து வைக்கிறார்கள்.

பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதுவார். பத்திரிகைகளுக்கும் எழுதுவார். அதனால் அரசின், அதிகாரிகளின் கோபம் வருமே என்று பார்க்க மாட்டார். எப்படியும் பிரச்னைகள் தீர்ந்தாக வேண்டும். அதுதான் இவரது குறிக்கோள்.

சட்ட மன்ற உறுப்பினரானபோதும் அதன் பின்னரும் கூடப் பல்வேறு தொழிற் சங்கங்களுக்குத் தலைவராக இருந்து செயல்பட்டார். அத்தனை சங்கங்களும் அரசாங்க நிறுவனங்களில் எண்ணற்ற நன்மைகளை எவ்விதப் பயனும் கருதாமல் செய்து தந்திருக்கிறார்.

1975ல் மிசா சட்டத்தின் கீழ் ஓராண்டு சிறைப்படுத்தப்பட்டார். சிறையில் இருந்தபோது உள்ளே ஒரு படிப்பகத்தை நடத்தி ஆங்கில, தமிழ் தினசரிகள் வார, மாத இதழ்களையும் பல அறிஞர்கள், எழுத்தாளர்களின் புத்தகங்களையும் வாங்கி வைத்துக் கொண்டு சக நண்பர்களுக்கு உதவினார்.

இவ்வளவு செயல்பட்டுள்ள இந்த நாகசுந்தரத்துக்கு அதே தொகுதியில் அடுத்த தேர்தலிலும் நிற்க வாய்ப்புத் தந்திருக்கவேண்டும். அதற்குப் பிரதியாக திரு நாகசுந்தரத்துக்கு எம். எல். சி. பதவி தருவதாக உறுதி கூறப்பட்டது.

இன்றுவரை அவருக்கு எம். எல். சி. தரப்படவேயில்லை. அதனால் என்ன, அவர் இன்றும் மக்கள் முன் நிமிர்ந்து நிற்கிறார்.

அப்படிப்பட்டவரை மீண்டும் எம். எல். ஏ. வாகப் பார்க்க ஆசைப்படுகிறேன்.

திருச்சி-1 என். செல்வகுமார்

மக்கள்முன் நிமிர்ந்து நிற்பவர்

நான் விரும்பும் வேட்பாளர்



நம்பிக்கை நட்சத்திரம்

நிலைமை இடங்களைப் பொறுத்தவரை பெரியாருக்குப் பின் தி. க. வில் சிந்தனைத் தெளிவு போய்விட்டது. அண்ணாவுக்குப் பின் தி. மு. க. வில் நேர்மை போய் விட்டது. அ.தி.மு. க.வில் பகுத்தறிவுப் பற்று போய்விட்டது. ''ஒன்றிருந்தால் ஒன்றில்லை'' என்ற நிலைமையில் கை பிசைந்து பரிதவித்து நிற்கும் உண்மைத் தொண்டர்கள் இந்த மூன்று கழகங்களிலுமே ஏராளமான பேர் உண்டு. இவர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து வழி நடத்திச் செல்லும் நம்பிக்கை நட்சத்திரம் காளிமுத்து ஒருவர்தான்.

பெரியாரின் நெஞ்சுரம்
அண்ணாவின் கண்ணியம்;
கலைஞரின் சொல் வீச்சு;
எம். ஜி. ஆரின் நன்னடத்தை;

இவை யாவும் ஒருங்கே பெற்றுத் திகழும் இவர் ஓர் 'ஆல் இன் ஒன்!' இந்திரா காங்கிரஸை விமரிசிப்பதில், ஈழத் தமிழர்–பஞ்சாப் பிரச்னைகளை அலசுவதில், தம் கட்சித்தலைவர் எம்ஜியாரையும் மீறி சிம்மக் குரல் எழுப்பிக் கர்ஜிக்கும் இவரது துணிவிலும், கொள்கைப் பிடிப்பிலும் பெரியாரைக் காண்கிறேன்.

எதிரிகளைத் தாக்கும் போதும் நாகரிகமற்ற வார்த்தைகளைப் பிரயோகிக்காத இவரது கண்ணியத்தில் அண்ணாவைக் காண்கிறேன். அருந் தமிழ்ச் சொற்களை அருவியெனக் கொட்டிடும் இவரது ஆற்றலில் கலைஞரைக் காண்கிறேன். தனிப்பட்ட வாழ்வில், விரும்பத் தகாத விவகாரங்கள் (இரு மனைவியர், அவர்களிடையே பூசல்) இருந்தும், மக்களிடையே மதிப்புக் குறையாத மாணிக்கமாய், மனிதாபிமானம் மிக்க மன்னவனாய் பவனி வருவதில் எம். ஜி. ஆரைக் காண்கிறேன். இப்படியாக, வேறுபட்டு நிற்கும் தமிழர்களின் வேறுபட்ட தலைவர்களின் சிறப்புத் தன்மைகளை ஒருங்கே கொண்டிருக்கும் இந்தத் தலைவனே தமிழர் ஒற்றுமைக்கும், தமிழ்நாட்டு உயர்வுக்கும் வழிகாட்ட முடியும்.

அவரிடம் நான் எதிர்பார்ப்பது — எதுவுமில்லை. ''உனக்கு என்ன வேண்டுமென்பதை உன் தந்தை அறிந்திருக்கிறார்'' என்று பைபிள் கூறுவது போல, தமிழர்களுக்கு என்னவேண்டும் என்பதைக் காளிமுத்து அறிந்து வைத்திருக்கிறார். எனவே அவரிடம் நாம் எதுவும் கேட்க வேண்டிய அவசியமில்லை. அவசியமெல்லாம் ஒன்றே ஒன்றுதான். அவர் ஆணையிட வேண்டும்; அது நடக்க வேண்டும். அவ்வளவுதான்!

எனக்கு ஓட்டுரிமையுள்ள தொகுதி — என் பிறப்பிடமான திருப்பரங்குன்றம். தொன்று தொட்டுப் புகழ் பெற்ற இந்தத் திருப்பரங்குன்றம் சார்பாக எம்.எல்.ஏ. ஆகி, அமைச்சராக வர வேண்டும் திரு காளிமுத்து எனப் பெரிதும் விரும்புகிறேன்.

திருப்பரங்குன்றம்
ஆழ்வாரப்பன்

மழலைக் கலைஞர்

ஆறு வயது லட்சுமிப்ரியா பாட்டுக்கற்றுக்கொள்ள ஆரம்பித்த புதிதில் பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போதே பாட்டு டீச்சர் காத்துக் கொண்டிருந்தார். ஆசிரியை அவசரப்படுத்தவே ஒன்றும் சாப்பிடாமலே பாட உட்கார்ந்து விட்டாள். 'ராரா வேணு கோபாலா' பாடிக் கொண்டிருந்தவள் சமையற்காரர் கோபாலன் ஏதோ காரியமாக அந்த வழியே போவதைப் பார்த்ததும் ''காபி வேண்டும் கோபாலா....'' என்று ஸ்வரஸ்தானம் மாறாமல் பாடியதும் எல்லோரும் சிரித்து விட்டோம்.

பி. எஸ். கமலம், உடுமலைப்பேட்டை



தூர்தர்சனின் கோணல் பார்வை

டி. வியில் கர்நாடக இசைக்கு ஒதுக்கப்படும் நேரம் ரொம்ப, ரொம்பக் குறைவு. வாரத்துக்கு ஒரு முதல்தரக் கச்சேரி கொடுக்கட்டும், போதும். அந்த ஒரு கச்சேரியை நல்லவிதமாக, நிறைவாகச் செய்யக் கூடாதா? வளரும் கலைஞர்களுக்கு என்று ஒரு நிகழ்ச்சி நடத்தக் கூடாதா? முதல் தரக் கச்சேரி குறைந்தபட்சம் ஒன்றரை மணி நேரம் இருக்க வேண்டும். இப்போது ஒதுக்கப்படும் முக்கால் மணிநேரம் போதவே போதாது. கர்நாடக இசை என்பது லைட் மியூஸிக் போன்றோ, சினிமா சங்கீதம், பாப் இசை போன்றதோ இல்லை. கடிகார முள்ளைப் பார்த்துக் கொண்டே பாட முடியாது. மேலும் ஐந்தாறு உருப்படிகளாவது பாடி, அதில் ஒரு பாட்டாவது ராக ஆலாபனை, நிரவல், சுவரப்ரஸ்தாரம் என்று விரிவாக அமைய வேண்டும். அப்போதுதான் பாடுகிறவர், கேட்கிறவர் இருவருக்குமே மனத் திருப்தியும், மனச் சாந்தியும் உண்டாகும். வளரும் கலைஞர்களுக்கு என்று வாரம் ஒரு கச்சேரி முக்கால் மணி நேரத்துக்குத் தரலாம்.

அப்புறம் வண்ணம். கர்நாடக இசையில் பாடகர்கள் நடத்தும் வண்ண ஜாலமே போதும். கலர் வேறு எதற்கு என்று டி.வி. நிலையத்தினர் தீர்மானித்து விட்டனர் போலும்! ''கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் வர்ணத்தில் காண்பிக்கப்படுவதே இல்லை'' என்று நியாயமான ஆதங்கத்தை வெளியிடுகிறார்கள் பம்பாய் சகோதரிகளான **சரோஜா, லலிதா**. ஒருவேளை ஆண் பாடகர்கள் கலர்ஃபுல்லா இல்லை என்று நிலையத்தினர் எண்ணியிருப்பார்களோ என்றால் அந்த வாதத்தையும் ஒப்புக்கொள்ள முடியவில்லை. சாதாரணமாக மேடையில் வெள்ளைச் சட்டை வேட்டி அணிந்து வரும் பாடகர்கள் கறுப்பு வெளுப்பு டி.விக்குக் கூட காமிரா 'கான்ட்ராஸ்ட்'டுக்காக கலர் சட்டை அணிய வேண்டும் என்ற நிபந்தனைக்குச் சம்மதிக்கிறார்கள். அவ்வாறிருக்க கண்ணுக்கினிய வண்ணத்தில் சட்டையோ, சால்வையோ அணிந்து வர மாட்டார்களா, கலர் டி. வி.க்கு? பெண் பாடகர்களோ வண்ண டி.விக்கு விசேஷ அலங்காரத்துடன் வர சித்தமாயிருப்பார்கள், மகிழ்ச்சியோடு. கர்நாடக இசை ரசிகர்களுக்குத் தங்கள் அபிமான வித்வான்களை வண்ணத்தில் பார்க்கும் உரிமை ஏன் மறுக்கப்பட வேண்டும்?

அப்புறம் அறிமுக விஷயம். வானொலி தேசிய நிகழ்ச்சிகளில் பாடகரின் குரு பாரம்பரியம், அவரது தனிச் சிறப்புக்கள், விசேஷத் தன்மைகள் முதலியவற்றை சுருக்கமாகக் கூறி அறிமுகம் செய்வார்கள். இந்த வழக்கத்தை டி.வியும் அனுசரித்து வந்தது. பிறகு இது நேரத்தை வீணாக்குவதாக(!) எண்ணினார்களோ என்னவோ திடீரென்று கர்நாடக இசைக் கலைஞர்களை அறிமுகம் செய்து வைப்பதை நிறுத்தினார்கள். அப்புறம் ஹிந்துஸ்தானி இசைக் கலைஞர்களை அறிமுகப்படுத்துவதையும் நிறுத்திவிட்டார்கள்! இதோடு போயிற்று? பார்வையாளர் முன்னிலையில் கச்சேரிகள் இப்போதெல்லாம் அநேகமாக நடத்தப்படுவதேயில்லை. ''பாடகருக்கு உற்சாகம் ஏற்படும்படி ரசிகர்கள் முன்னிலையில் நடத்துவதுடன் அவரைப் பற்றி நான்கு வார்த்தைகள் சொன்னால் என்ன குறைந்து போய்விடும்?'' என்று வருத்தத்தோடு தெரிவிக்கிறார் திருமதி **மணி கிருஷ்ணசுவாமி**.

ஆகமொத்தம் கர்நாடக இசை நிகழ்ச்சிகளைக் கடனழவே என்றுதான் டி.வி. நிலையம் நடத்துவது போல் ரசிகர்களுக்குத் தோன்றுகிறது.

ரசிகர்கள், வித்வான்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து கட்டுரை வடிவம் தந்தவர்
-சிதாரவி

✻ மணி கிருஷ்ணசுவாமி



✻ சரோஜா லலிதா



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431643)

Assistant Editor: P. S. Mani   Editor: K. Rajendran

வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்





சத்துமிகுந்த,
சுவையான பிஸ்கட்.

பிரிட்டானியா

LINTAS BIN MB 10 2013 TM

REGISTERED No. M. 4392
... a Newspaper in Sri Lanka